

நெஞ்செல்லாம்
நினைவுதான்
தகனேந்திரன்

# நெஞ்செல்லாம்
# நினைவு தான்

குகனேந்திரன்

நிலாமலர்

காங்கேசன்துறைச்சாலை, கொக்குவில்.

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **நெஞ்செல்லாம் நினைவு தான்** |
| ஆசிரியர் | : | குகனேந்திரன் |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | ஆவணி 2000 |
| அச்சு எழுத்து | : | 12 புள்ளி |
| நூலின் அளவு | : | 1 × 8 கிறவுண் |
| மொத்தப் பக்கங்கள் | : | 226 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | நிலாமலர் |
| அட்டைப்படம் | : | கே. ரவி |
| அச்சிட்டோர் | : | ஷாமளி அச்சகம் |
| நூலின் விலை | : | 95. |

# நெஞ்செல்லாம் நினைவு தான்!

## 1.

"சாந்தா இன்னுமா ஆயத்தமாகவில்லை?"

தாய் கமலம் தான் குரல் கொடுத்தாள்.

யன்னல் ஊடாகப் பார்த்தாள்.

அவள் பள்ளித்தோழி ப்ரியா தெரு வாசலில் அவளுக்காகக் காத்திருந்தாள்.

''ப்ரியா ஒரு நிமிடம் வந்திட்டேன்''

இருவரும் அந்த ஊர் முதல்தரக் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். அவர்அவர் வீட்டில் இருவரும் கடைசிப் பெண்கள் மட்டுமல்ல கடைசிப் பிள்ளைகளும் கூட. இருவரும் சேர்ந்தே கல்லூரிக்குப் போவார்கள்.

''ப்ரியா இந்தக்கேள்வி எனக்கு விளங்கவில்லை. உன் அண்ணாவைக் கேட்டால் சொல்லித்தரமாட்டாரா?

நான் அவனிடம் கேட்கமாட்டேன். நீ வேண்டுமென்றால் அவனிடம் வந்துகேள். சொல்லித்தருவான்''.

ஏன் நீ கேட்டால் சொல்லித் தரமாட்டாரா? அவனிடம் கேட்டால் சண்டையில் தான் முடியும்; அம்மாவிடம் பேச்சுத்தான் வாங்கவேண்டும்.

இல்லை நீ பொய் சொல்கிறாய்!

உண்மை சாந்தா! நடந்ததைச் சொன்னால் தான் நீ நம்புவாய்! ஒருநாள் விளங்காத ஒருபாடத்தைக் கேட்டேன். முதல் தடவை பொறுமையாய்ச் சொல்லித் தந்தான். எனக்கு முழுதாய் விளங்கவில்லை; இன்னொருமுறைசொல் என்று கேட்டேன் ''உனக்கெல்லாம் என்னத்துக்குப் படிப்பு பேசாமல் போய் ஆட்டுக்கல்லில் உழுந்தாட்டென்று கத்தினான் எனக்கு அடக்கமுடியாத கோபம் வந்துவிட்டது அவனுடைய கொப்பிகளை எல்லாம் எடுத்துத் தாறுமாறாக அவனை நோக்கி எறிந்தேன். கழுதை, எருமை என்று திட்டிக் கொண்டே கொப்பிகளைப் பொறுக்கினான் பதிலுக்கு குரங்கு பண்டி என்று நான் கத்தினேன். அம்மா வந்து என்னைத் திட்டினா. இன்னொருநாள் அம்மா சொன்னதினால் பாடம் சொல்லித்தந்தான் அம்மா பக்கத்தில் இருந்ததினால் திட்டாமல் நல்லா விளங்கும்படி சொல்லித்தந்தான். இடையில் சரியான ரியூப்லைற்ட் என்று சொன்னான் எனக்கு விளங்கவில்லை ஏன் அப்படிச் சொன்னான் என்று யோசித்தேன். வெளிச்சம் பிரகாசமாய் இருக்குமே என்ற நினைவு தான் வந்தது. அதை விட்டு விட்டுப் பாடத்தைக் கவனித்தேன் அம்மா எழுந்து உள்ளே போய்விட்டா. ரியுப் லைற்ட் என்று சொன்னது புரிந்ததா என்று கேட்டான். நான் அவனை முறைத்

துப் பார்த்தேன். சுவிச்சைப் போட்டவுடன் மற்ற பல்ப்புகள் உடனே எரியும் ரியூப் லைற்ட் சுவிச்சைப் போட்டுக் கொஞ்சநேரம் சென்றுதான் எரியும் என்றான். என்னை மட்டம் தட்டி விட்டானே என்று எனக்குத் தாங்கமுடியாத கோபம் வந்துவிட்டது. அவன் தலையிலும் முதுகிலும் குத்து குத்தென்று குத்தினேன். அவன் பலமாகச் சிரித்தான். அவன் உடம்பு இரும்பு மாதிரி என்கைதான் நொந்திச்சு. அவன் சிரிப்பு என்கோபத்தை கூட்டிவிட்டுது. கதவுக்குக் குறுக்கே போடுகிற மரத்தடி கண்ணில் பட்டுது. எடுத்து அவனை ஓங்கி அடிக்கப்போக அம்மா வந்து தடுத்திட்டா இல்லாவிட்டால் எனக்கிருந்த கோபத்தில் அடிச்சு நொருக்கி இருப்பேன். அதுக்குப் பிறகு நான் அவனிடம் பாடம் கேட்பதில்லை.

ப்ரியா! சங்கர் உனக்கு அண்ணாதானே ஏன் அவரை அவன், இவன் என்று சொல்கிறாய்.

அதை எல்லாம் கண்டுக்காதே சின்னவயதில் இருந்து அப்படிக் கதைத்துப் பழகிப்போச்சு மாத்த முடியல்ல.

கேட்கின்ற மற்றவர்களுக்கு ஒரு மாதிரியாய் இருக்கும் இந்தப் பழக்கத்தை மாத்த முயற்சிக்கக் கூடாதா?

அம்மா பல தடவை சொல்லிச்சொல்லி அலுத்துப் போயிட்டா! என்னாலும் மாத்தமுடியல்ல.

பிளீஸ் ப்ரியா! எனக்காக மாத்தமாட்டியா. உன் வீட்டுக்கு பலதடவை வந்திருக்கிறேன் அப்ப

நீ சங்கரை அப்படிக்கூப்பிடும்போது எனக்கு ரொம்பச் சங்கடமாய் இருக்கும் சங்கருக்கும் அப்படித் தானே இருந்திருக்கும் என்ன இருந்தாலும் சங்கர் ஆண்பிள்ளை இல்லையா?

உனக்காக நான் அவனை வாங்க, போங்களென்று கூப்பிடுகிறேன் என்று வைத்துக்கொள்! அவன் என்ன சொல்லுவான் தெரியுமா? ''கழுதை!வயசு. வந்த பிறகுதான் புத்தி வந்திருக்கு தலைக்குள் ஒன்றுமே இல்லை. எவராவது சொல்லித்தந்த பிறகு தான் அறிவு வரும். சுயமாய் சிந்திக்கிற மூளையே இல்லை என்று கத்துவான்''. ''எனக்கு கோவம் வரும் கையில் அகப்பட்டதைப் போட்டு உடைப் பேன். பதிலுக்கு அவனும் கண்டபடி திட்டுவான் வீடே போர்க்களமாகி விடும். அம்மா வந்து என் னைத் திட்டுவா ஏன் வீண் பிரச்சினை எனக்குச் சரிப்பட்டு வராது பேசாமல் விடு.

வாங்க போங்க என்று சொல்லாவிட்டாலும் வா, போ, என்றவாது சொல்லலாம் இல்லையா?

நாய் வாலை நிமிர்த்த முடியாது வேறு விசயத் தைக் கதையடி

உன்னை நான் நல்லவிதமாய் சங்கருடன் பேச வைக்கிறேன் இருந்துபார்.

சரிபார்க்கலாம். பின்னேரம் வீட்டுக்கு வா, சங்கர் நின்றால் சொல்லித்தரச் சொல்லுகிறேன்.

**வா** சாந்தா!

சங்கர், சாந்தா பாடம் விளங்கவில்லை என்று சொல்கிறாள் கொஞ்சம் சொல்லிக்கொடு.

சாந்தா விளங்கிக் கொள்ளும்படி விபரமாகச் சொல்லிக்கொடுத்தான்.

அவன் பாடத்தைச் சொல்லிதரக் கையாளும் முறை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. எந்தச் சமயத்திலும் அவன் கோபப்படவோ சலிப்படையவோ இல்லை. பதிலுக்கு அன்பாகவும் இனிமையாகவும் நடந்து கொண்டான். இது ப்ரியா சொன்னதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

அடுத்தநாள் கல்லூரி விட்டு வரும்பொழுது சங்கர் பற்றிய தன் கருத்தைச் சொன்னாள்.''

''ப்ரியா! நீ சொன்ன மாதிரி எல்லாம் சங்கர் இல்லையே! உன்னிடம் தான் தவறு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.''

''இருக்கலாம் ஆனால் நான் தவறு விடுவதற்கு அவனும் ஒரு காரணம். அத்தோடு நீ வேறு குடும்பத்தைச் சேர்ந்தவள் அதனால் அவன் உன்னோடு பண்பாகப் பழகலாம். உன்மனம் நோகாமல் நடக்க வேண்டும் என்று அவன் நினைத்திருக்கலாம். எப்படியோ உனக்கு அவன் சொல்லித் தருவது பிடித்திருக்குத்தானே. இனிமேல் தெரியாத பாடங்களை வந்து அவனிடம் கேட்டுப்படி.''

''ஜீன்ஸ் போட்டாச்சா! இனி சைக்கிளை எடுத்துக்கொண்டுபோய் தெருவில் நின்று பொழுதுபடும் வரையும் என்னவோ அரசாங்கத்தையே மாத்திறவர்கள் மாதிரி நினைச்சுக் கொண்டு கதை அளக்கிறது. பொருளாதார நிபுணர்களாக எண்ணிக்

கொண்டு அப்படிச் செய்ய வேண்டும் இப்படிச் செய்ய வேண்டும் என்று அலட்டுறது. பிறகு சினிமா நடிகர்களையும் நடிகைகளையும் பாட்டுக்களையும் பற்றி அலம்பிவிட்டு வீட்டுக்கு வாறது.''

"சாந்தா வந்திருக்கிறாள் அவளுக்குச் சொல்லிக் கொடுத்து விட்டுப்போ! அதற்கிடையில் அரசாங்கம் கவிழ்ந்து விடாது. சினிமா நடிகர்கள் எவருக்காவது சளிப்பிடிக்காது.''

ப்ரியா சொல்வதைக் கேட்டு சாந்தாவுக்கு சிரிப்பு வந்தாலும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண் டாள்.

அவன் எதுவுமே பதிலுக்குச் சொல்லாமல் அவ ளுக்கு பாடத்தைச் சொல்லிக் கொடுத்தான்.

''பள்ளிக்கூடம் போவோமா விடுவோமா சாந்தா''

''ஏன்? என்ன விசயம் புலிகள் ஊரடங்குச் சட்டம் போட்டிருக்கிறார்களா?''

''புலிகள் ஏன் ஊரடங்குச்சட்டம் போடுகிறார் கள் அரசாங்கம் போட்டிருக்கு.''

''அரசாங்கம் தானே ஆகாயத்தில் புலிகளின் விமா னம் ஒன்றும் பறக்கக் கூடாது என்று போட்டிருப் பார்கள். இன்றைக்குத்தான் வராத பிள்ளைகள் எல்லாம் பள்ளிக்கூடம் வரும். ரீச்சர்மார் இதுதான் சாட்டு என்று வராமல் விடுவார்கள். வீட்டு

வேலை செய்கிறதுக்கு இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் வேறு சந்தர்ப்பமே வராது. பள்ளிக்கூடத்துக்கு வரமாட்டாங்க ஆனால் போகவேண்டிய இடங்களுக்கெல்லாம் போய்க் காரியங்களைச் செய்வார்கள் அதற்கு மட்டும் ஊரடங்குச்சட்டம் இல்லை பள்ளிக்கூடத்துக்கு வராமல் விட மட்டும் தான் ஊரடங்குச்சட்டம் பொருந்தும்.'' ''யாழ்ப்பாணத்தில் அரசாங்க வேலை பார்க்கிறவர்களுக்குத் தான் உலகத்திலேயே கூடிய நாட்கள் லீவு கிடைக்கும் ஊரடங்குச் சட்டம் போடுவதால் கின்னஸ் புத்தகத்தில் கூட வந்தாலும் வரும்.'' ''எப்போ வருவீர்கள் என்று கேட்டால் ஊரடங்குச்சட்டம் போட்டால் வருகிறேன் என்று சொல்கிறார்கள். எப்போ லீவு கிடைக்கும் என்று கேட்டால் ஊரடங்குச்சட்டம் போட்டால் லீவு தானே என்கிறார்கள். சில பேர் நாளை ஓர் இடத்துக்குப் போக வேண்டும் ஊரடங்குச்சட்டம் போட்டால் நல்லது என்று வெளிப்படையாகவே சொல்கிறார்கள். ஏன் அவசரப்பட்டு ஊரடங்குச்சட்டத்தை எடுத்தார்கள் என்று கவலைப்படுகிறார்கள் அவர்களின் சொந்த வேலைகள் முடியவில்லை என்பதற்காக தீபாவளி, வருடப்பிறப்பு, தைப்பொங்கலை எதிர்பார்ப்பதைப் போல் ஊரடங்குச்சட்டத்தையும் எதிர்பார்க்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் தலைவிதி இப்படியாக மாறிவிட்டது. வாடி நாங்களும் பள்ளிக்கூடம் போய் வகுப்பறையில் அலட்டிவிட்டு வருவோம்.''

''ப்ரியா! விட்டுக் கொடுப்பதில் ஒரு இன்பம் இருக்கு.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''நேற்று ஒரு இலக்கியப் புத்தகம் படித்தேன் அதில் ஆண்மானும் பெண்மானும் சோடியாகத் தண்ணீர் தேடி எல்லா இடமும் அலைந்து கடைசியாக தண்ணீர் இருக்கின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தனவாம். கொஞ்சநீர் தான் இருந்திருக்கு. இந்த நீர் பெண்மானுக்குக் கூடப் போதாதே என்று ஆண்மான் நினைத்து தண்ணீரில் வாயை வைத்துக் கொண்டு குடிக்காமல் குடிப்பதுபோல் பாவனை செய்திச்சாம். பெண்மான் எல்லாத் தண்ணீரையும் குடிச்சிட்டுதாம் பெண்மானின் தாகம் தீர்ந்ததைக் கண்டு ஆண்மான் சந்தோசப்பட்டுச்சாம்.''

சாந்தாவைக் கேள்வியுடன் பார்த்தாள்

''இன்னும்கேள் அந்தப் பெண்மான் நீர்தேடி அலைந்ததினால் களைத்துவிட்டது. சோர்வோடு நிலத்தில் படுத்துவிட்டது. பெண்மானில் வெய்யில் பிடிக்கிறதே என்று ஆண்மான் கவலைப் பட்டு பெண் மானுக்கு அருகில் நின்றுதாம். ஆண் மானின்மேல் சூரியனின் வெய்யில்பட அதனுடைய நிழலில் படுத்திருந்த பெண்மான் வெய்யில் வெட்கை இல்லாமல் சுகமாக களைப்பாறிச்சுதாம்.''

''இதிலிருந்து என்ன நினைக்கிறாய்.''

''நீயே சொல்லேன்''

''மிருகங்களிடம் கூட பெண்பால் மீது அன்பும் விட்டுக்கொடுப்பதில் இன்பமும் காதலும் இருக்கென்று புரியுது இல்லையா? ஏன் இலக்கியத்துக்குப்

போவான் எங்க வீட்டில் கூட நடக்கிறதே ஒரு சம்பவம் பக்கத்து வீட்டில் ஒரு பெண்நாய் இருக்கு அம்மா இரவில் எங்கள் வீட்டு டாமிக்கு சாப்பாடு சாப்பாடு வைக்கும்போது வேலிக்கு அடுத்தபக்கம் நின்று பொட்டுக்குள்ளால் தலையை நீட்டிக் கொண்டு நிற்கும் அந்தப் பெண்நாயை விரட்டி விட்டுத்தான் வைத்துவிட்டு வருவாங்க. டாமி கொஞ்சத்தை சாப்பிட்டு மீதியை விட்டு விலகி நிற்கும். அந்தப் பெண் நாய் வந்து சாப்பிட்டு டாமியைகொஞ்சி வாலாட்டி டாட்டா காட்டி ஓடிவிடும். இதை அடிக்கடி பார்த்துச் சந்தோசப் பட்டிருக்கேன்.''

''மிருகங்கள் அப்படி என்றால் பறவைகளும் அப்படித்தான். ஒருவேடன் தன் உணவுக்காக ஒரு பெண் பறவையை அம்பால் கொன்று நெருப்பில் வாட்டினானாம் தன் சோடிப்பறவை இறந்துவிட்டதே என்ற துயரத்தில் ஆண்பறவை அந்த வேடன் வளர்த்த நெருப்பில் விழுந்து இறந்து போச்சாம் இதைப் பார்த்த அந்த வேடன் கவலையால் அம்பையும் வில்லையும் எறிந்துவிட்டு துறவியாய் போய் விட்டானாம்.''

பெண்பால்மீது அன்பு செலுத்துவது மனிதரில் மட்டுமல்ல பறவைகள் மிருகங்களிலும் கூட இருக்கு. தென்அமெரிக்காவில் ஒரு ஜாதிப்பறவை இருக்காம் அது கருத்தரித்தால் முட்டை இடுவதற்கு ஆண் பறவைதான் கூடுகட்டிக் கொடுக்குமாம் கூடுகட்டி முடியும்வரை பெண்பறவை மரத்தில் பார்த்துக் கொண்டிருக்குமாம். கூட்டைக் கட்ட ஆண்பறவைக்கு ஒரு துரும்பைக்கூட எடுத்துக் கொடுக்க

மாட்டாதாம். கூடுகட்டி முடிந்தவுடன் உள்ளே சென்று பார்க்குமாம் அதற்கு பிடிக்காவிட்டால் வெளியில் வந்துவிடுமாம். ஆண்பறவை எங்கெல்லாமோ தேடி பஞ்சு போன்ற மென்மையானவைகளைக் கொண்டுவந்து கூட்டுக்குள் மெத்தைபோல் மாத்துமாம். பெண்பறவைக்குப் பிடித்துவிட்டால் உள்ளுக்குள் தங்கிக்கொள்ளும். முட்டை இடும்வரை வெளியில் வரவே வராதாம்.

அதுமட்டுமா முட்டை இடும்வரை அந்தப்பெண் பறவைக்கு தேவையான உணவை ஆண்பறவை எங்கெல்லாமோ பறந்து போய் கொண்டு வந்து கொடுக்கும். பெண்பறவை சாப்பிட்டு சாப்பிட்டு விட்டு உள்ளே தான் இருக்கும். மழை வந்தால் கூட பெண்பறவை சோடிப்பறவையை உள்ளே விட மாட்டாதாம். ஆண்பறவை மழையில் நனைந்தபடி பரிதாபமாக பெண்பறவையைப் பார்த்துக் கொண்டிருக்குமாம். பெண்பறவை நனையாமல் கூட்டுக்குள் சுகமாக இருக்குமாம்.

இரைதேடப் போகும் நேரத்தைவிட மற்ற நேரங்களில் அந்தக் கூட்டுக்கு அருகில் எதிரிகள் வராமல் பெண்பறவைக்கு காவல் இருக்குமாம். குஞ்சுகள் பொரித்த பின்பு தாய்க்கும் குஞ்சுகளுக்கும் ஆண்பறவை தான் உணவு தேடிக் கொண்டு வந்து கொடுக்கும். அந்த ஆண்பறவையை நினைத்தால் பாவமாய் இல்லையா ப்ரியா?''

சாந்தா தலையைக் குனிந்து கொண்டு கண்களைக் கைக்குட்டையால் துடைத்தாள்.

சாந்தா சொன்னதைக் கேட்டு ப்ரியாவுக்கும் பாவமாகத்தான் இருந்தது. ஆனால் சாந்தா கண் கலங்குவதைக் கண்டு இவ்வளவு மென்மையான உள்ளம் படைத்தவளாக இருக்கிறாளே வாழ்க்கையில் எப்படி பிரச்சனைகளைச் சந்தித்து சமாளிக்கப் போகிறாள் என்று மனம் வருந்தினாள்.

''சாந்தா! கடவுள் ஒவ்வொன்றையும் படைக்கும்போது காரணகாரியங்களோடு தான் படைக்கிறார் நீ ஒரு பக்கத்தை மட்டுமே பார்த்துவிட்டு கண் கலங்குகிறாய் அது தப்படி.

''எங்க வீட்டை எடுத்துக்கொள்ளேன், அம்மா சொல்வதற்கு எதிராக அப்பா ஒருநாள் கூட எதிர் வார்த்தை சொல்லமாட்டார். ஏதாவது அபிப்பிராயம் கேட்டால் கூட உன் விருப்பப்படி செய்யென்று சொல்வார். ஏதாவது பிரச்சனை வந்து அம்மா சத்தம் போட்டால் பூனை மாதிரி வெளியில் போய்விடுவார்.''

''அம்மா ஏதாவது காரியம் செய்து பிழைவந்துவிட்டால் நீங்கள் சொல்லித் திருத்தி இருக்கலாமே என்றுபிழைக்கான பொறுப்பைஅப்பாமேல்போட்டு விடுவா. அப்பா திருதிரு என்று விழிப்பார். பார்க்கப் பாவமாய் இருக்கும். அதுவும் இல்லாம தான் தான் பிழைவிட்டதாக நினைத்துக் கொண்டு மன்னிப்பு கேட்கிற மாதிரி அம்மாவைச் சமாதானம் செய்வார். எனக்கு அழுகை தான் வரும் ப்ரியா! ஏன் தான் இந்த ஆண்கள் இப்படி இருக்கிறார்களோ எனக்குப் புரியவில்லை.''

''சாந்தா உன் அப்பா மட்டும் இல்லை என் அப்பாவும் அப்படித்தாண்டி இவ்வளவு நாளும் நான் சிந்திக்கவில்லை. நீ இப்போ சொன்ன பிறகுதான் எனக்கும் ஞாபகம் வருகுது. நான் நினைக்கிறேன் குடும்பத்தில் பிரச்சினை வரக்கூடாது என்று ஆண்கள் நினைக்கிறார்கள் போல் தெரிகிறது அதனால் தான் பெண்களுக்கு விட்டுக் கொடுக்கிறார்கள்.

''குடும்பம் என்றால் பெண்களுக்கும் சமபங்கு இருக்கிறது தானே. ஆண்கள் மட்டும்தான் விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதில்லையே பெண்களும் விட்டுக் கொடுக்கலாம் தானே.''

''நீ சொல்வதில் நியாயம் இருக்கிறது ஆனால் நடைமுறையில் அது இல்லையே!''

''அது மட்டிமில்லை ப்ரியா யாழ்ப்பாணத்தில் ஒரு வீடு கட்டப்படுகிறது என்று வைத்துக்கொள். கண்டிப்பாக அது ஒரு பெண்ணுக்குத்தான் சீதனமாகப் போகிறது. ரி.வி என்றால் என்ன றேடியோ என்றால் என்ன அநேகமாக பொழுது போக்கு சாதனங்கள் வீட்டுப் பாவனைப் பொருட்களை அனுபவிப்பவர்கள் பெண்கள்தான். ஆண்களுக்கு எங்கே நேரம் இருக்கிறது. வேலைக்குப் போய் களைத்து வருவார்கள். சாப்பிட்டு விட்டு தூங்கத் தான் நேரம் சரியாக இருக்கிறது.''

''அடுத்து மிகவும் சோகமானது பெண்கள் பிள்ளைகளை தங்கள் கட்டுப்பாட்டில் தான் வைத் திருக்கிறார்கள். ஆண்களுக்கு பிள்ளைகளுடன் அன்

பாய்ப் பழக நேரமே கிடைப்பதில்லை இதனால் பிள்ளைகளும் தாய்மார்களுடன் சேர்ந்து கொள் கிறார்கள். வயசான காலத்தில் பிள்ளைகள் தாய் மார்களை அன்புடன் கவனிக்கிறார்கள் தகப்பன் மார்களைக் கவனிப்பது குறைவுதான் கவனித்தா லும் ஏனோதானோ என்றுதான் நடந்து கொள் கிறார்கள். தாயைக் கவனிப்பதில் பிள்ளைகளுக் கிடையே போட்டியே ஏற்படுகிறது நீ முந்தி நான் முந்தி என்று.''

தகப்பன்மார் இறந்துபோனால் காலம் முடிந்து போச்சு போய்விட்டார் என்று ஆறுதல் அடைகி றார்கள். ஆனால் வயசாகிக்கூடத் தாய்மார்இறந்து போனால் எவ்வளவோ படிச்சவங்க கூட கண்ணீர் விட்டு அழுவதை நான் கண்டிருக்கிறேன். தாய்ப் பாசம் குறிப்பாக ஆண்களைக் கடுமையாகப் பாதிக் குது. தாய்மாரை இளக்கும் போது அது அதிக மாகவே இருக்கு. பட்டினத்தார் உலக பந்தங்களை எல்லாம் துறந்து துறவியாய் திரிந்தவர். தாயின் மரணச் செய்தியைப் புரிந்துகொண்டு ஓடோடிவந்து கண்ணீர் விட்டு அழுதிருக்கிறார்.''

''ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி.''

''என்று பாட்டுப் பாடியே தீ மூழச் செய்து தகனம் செய்திருக்கிறார் என்றால் தாய்ப்பாசம் எவ்வளவு தூரம் ஆண்களைப் பாதித்திருக்கின்றது என்று புரியவில்லையா?''

''எனக்கென்னவோ ப்ரியா ஆண்களுக்குக் கிடைக்க வேண்டிய சந்தோசங்களையும் சந்தர்ப் பங்களையும் பெண்கள் ஒன்றில் தட்டிப் பறிக்கி றார்கள் இல்லை தடுத்து விடுகிறார்கள். பெண்கள் ரொம்பவும் சுயநலத்தோடு நடந்து கொள்கிறார் கள் என்றுதான் எனக்குப்படுகிறது. யாரோ சொன் னதுபோல் ஆண்கள் ஆசையோடு பிறக்கிறார்கள் விரக்தியோடு வாழ்கிறார்கள் ஏமாற்றமடைந்து இறந்து போகிறார்கள் என்பதுதான் உண்மை.

கெலிகொப்டர் ஐம்பது கலிவர் துப்பாக்கித் தாக்குல் நடத்தியது. இருவருடைய கவனமும் திசை திரும்பியது.

ஊரடங்குச்சட்டம் போட்டிருக்கிறோம் என்று தாக்குதல் மூலம் ஞாபகப்படுத்துகிறான்.

பாடசாலைப் பிள்ளைகள் வீட்டுக்குப் போகத் தயாரானார்கள்.

அம்மா கவலைப்படப் போகிறா; வா போவோம்.

வவுனியாவில் தான் சண்டை நடக்குது ஏன் யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச்சட்டம் போட்டாங்க.

வடபகுதி முழுவதும் இராணுவ நடவடிக்கை நடைபெறுகிறது என்று சிங்கள மக்களுக்கும் வெளி நாடுகளுக்கும் காட்டிக் கொள்ளத்தான். அரசாங் கத்துக்கே தெரியும் ஊரடங்குச்சட்டம் போட்டா லும் யாழ்ப்பாணத்தில் மக்கள் வழமையாக நட மாடுவார்கள் என்று.

வெளியில் சென்ற சங்கரின் வருகைக்காகப் பாடப் புத்தகங்களுடன் காத்திருந்தாள். நிமிர்ந்த நடையுடன் வரும் சங்கர் சாந்தாவின் மனதில் இன்ப உணர்வுகளைத் தூக்கி நிறுத்தினான். தன் மனம் மெல்ல மெல்ல அவனிடம் நழுவிக் கொண்டிருப்பதை சாந்தாவின் அறிவு அவளுக்குச் சொல்லியது. முடிந்த அளவு தடுத்து நிறுத்திவிட பலநாள் முயற்சி செய்தாள்; முடியவில்லை. அவனைநோக்கி ஓடிக் கொண்டிருந்த மனதை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று தெரியாமல் தடுமாறினாள். இது எங்கே கொண்டுபோய் விடுமோ என்று பயந்தாள்.

காதலாவது கத்தரிக்காயாவது உடல் பசியைத் தீர்த்துக் கொள்ள இலக்கியவாதிகள் உருவாக்கிய இங்கிதமான சொல்லுத் தான் காதல் என்று ஏதோ ஒரு புத்தகத்தில் படித்தது ஞாபகத்துக்கு வந்தது. ம்ம்... எவ்வளவுதான் படித்தாலும் சொன்னாலும் மனம் கேட்க்க மாட்டேன்கிறதே. சங்கரைக் கண்டவுடனேயே மனம் உற்சாகத்தினால் துள்ளுகிறதே! வீண்முயற்சிமனதின் ஓட்டத்துடன்சேர்ந்து போக வேண்டியதுதான்.

''சாந்தா என்ன யோசனை?''

''ஒன்றுமில்லை'' அழகாகச் சிரித்தாள்.

அவளின் சிரிப்பில் தன்னை மறந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தன்னுடைய அழகு சங்கரின் மனதில் இன்ப உணர்வலைகளை ஏற்படுத்துகிறது என்று அவன்

தன்னுடன் பழகும் விதத்தில் இருந்து புரிந்து கொண்டாள், அதற்காக மனதில் கடவுளுக்கு நன்றிசொன்னாள்.

''ப்ரியா வரலாம்'' என்றாள்.

தன்நிலை அடைந்தவன் பாடத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

''படித்து முடிந்த பின்பு என்ன செய்யப் போறீங்க?''

''என்ன செய்யலாம் என்று நீங்களே சொல்லுங்க?''

''நான் சொன்னால் கேட்பீங்களா?''

''நீங்க சொன்னால் நான் கேட்கமாட்டேன் என்று ஏன் நினைக்கிறீங்க?''

''அப்போ நான் எது சொன்னாலும் கேட்பீங்களா?''

''ம் கேட்பேன்''

''ரொம்ப தாங்ஸ் சாந்தா நன்றாகப் படியுங்க''

''மனதை ஒருமுகப்படுத்தி படிக்கக் கஷ்டமா இருக்கு''

''சீ அப்படிப் படிக்காமல் விட்டு விடாதீங்க''

''நான் பல்கலைக்கழகம்போக படிக்கவில்லை''

''ஏன்?''

''உங்களிலும் பார்க்க அதிகம் படிக்க நான் விரும்பவில்லை''

''படித்திருந்தால் வேலை தேடும்போது உதவியாக இருக்கும்''

''வேலைக்குப் போக எனக்கு விருப்பமில்லை''

''ஏன்?''

''நான் வேலைக்குப் போவதை நீங்கள் விரும்புவீர்களா?''

என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

''நீங்கள் சொன்னால் வேலைக்குப் போகிறேன் ஆனால்; வேலைக்குப் போனால் கையில் பணம் வந்தவுடன் அலட்சிய மனப்பான்மை வந்து ஒட்டிக் கொண்டு விடுமோ என்று பயமா இருக்கு. சில வீடுகளில் நடக்கிறதைப் பார்த்தால் வேலைக்குப் போக வேண்டாம் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.'' கணவன்மாரையும் ஆண்களையும் மதிக்காது அலட்சியப்படுத்துகிற மனப்பான்மை வளர்ந்து கொண்டு வருகிறது. நான் கீழ்ப்படிவுள்ளவளாகப் பணிவுள்ளவளாகத் தான் இருக்க விரும்புகிறேன். ''நான் படித்துப் பாஸ் பண்ணுவதும் வேலைக்குப் போவதும் உங்கள் கையில்தான் இருக்கிறது.''

''சாந்தா கவனமாகப் படித்துப் பாஸ் பண்ணுங்க''

''சரி உங்க விருப்பம்; நேரமாச்சு, போயிட்டு வாறேன்.''

''சங்கர் வாறான் பாடத்தைப் படி. முகம் கழுவி விட்டு வாறேன்.

''ப்ரியா! அம்மா எங்கே?''

''மடியில் வைச்சிருக்கேன் கொஞ்சம் பொறு! இறக்கி விடுகிறேன்''

தலையைக் குனித்துக் கொண்டு சிரித்தாள் சாந்தா.

சமையல் அறைக்குள் சென்றவன் மூன்று கோப்பை தேநீருடன் வெளியில் வந்து ஒன்றை ப்ரியாவிடமும் மற்றதை சாந்தாவிடமும் கொடுத்து விட்டு மற்றதை தான் பருகினான்.

''தங்கச்சி மேல் அண்ணனுக்கு அன்பு பொங்கி வழியுது.''

''ஏன் இருக்கக்கூடாதா?'' சாந்தா கேட்டாள்.

''அன்பாவது ஆட்டுக்குட்டியாவது. தண்ணீர் விடாய்த்திருக்கும் அம்மா இல்லை என்று தெரிந்தவுடன் தானே தேனீர் போடப் போனான். நீ இருக்கிறாய் உனக்கும் சேர்த்துப் போட்டான். இரண்டு பேரும் குடிக்க நான் பார்த்துக் கொண்டிருப்பது சரிஇல்லை என்று கொஞ்சம் மனேஸ் வந்திருக்கும் எனக்கும் கொண்டு வந்தான்.'' ''சும்மா சொல்லக்கூடாது, ரீ ரொம்ப நல்லா இருக்கு! சந்திரா ஹோட்டலில் போய் ரீ ஆத்தினால் நல்ல சம்பளம் தருவாங்க.''

தேநீரைப் பருகிக் கொண்டிருந்த சாந்தாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை; அவள் வாயில்

இருந்த தேநீர் சங்கரின் முகத்தில் பட்டு மேல் சட்டையில் வழிந்தது. கையில் இருந்த தேநீர் சிந்தி அவன் ஜீன்சை நனைத்தது.

சாந்தா பதறிப் போனாள்.

''அபிஷேகம் ஆச்சா! ரொம்பச் சந்தோசம்'' என்றபடி எழுந்து உள்ளே போனாள் ப்ரியா.

''மன்னிச்சிடுங்க மன்னிச்சிடுங்க'' உளறினாள் கண்கலங்க நடுங்கினாள்; கைகளைப் பிசைந்து கொண்டு நின்றாள்.

''பறவாயில்லை நீங்க இருங்க'' எனக் கூறி விட்டு உள்ளே சென்று வேறு சேட்டும் ஜீன்சும் அணிந்து வந்தவன் மேசையைபழைய துணிகொண்டு துடைத்துவிட்டு வேறு ஒரு கோப்பையில் தேநீர் கொண்டு வந்து கொடுத்தான் அவளிடம்,

பரிதாபமாக அவன் முகத்தைப் பார்த்தாள்.

''சின்ன விசயம் ஏன் மனவருத்தப்படுறீங்க. நீங்க வேணுமென்று செய்யவில்லையே. ப்ரியாசிரிப்பு மூட்டினாள் அப்படி நடந்தது உங்க மேல் தப்பே இல்லை. சாந்தா நான் ஒன்றுமே நினைக்கவில்லை ரீயைக் குடியுங்க.''

அவளால் பாடத்தில் கவனம் செலுத்த முடியாதிருப்பதை அவதானித்தவன்

''உங்களால் பாடத்தை கவனிக்க முடியவில்லை நாளைக்கு வாங்க''

வேதனையோடு பார்த்தாள்.

அன்பாகச் சிரித்து குளிர்ந்த பார்வையினால் அவன் இதயத்தை அணைத்து ஆறுதல் கூறிவிட்டு வெளியேறினான்.

மாணவிகள் எல்லோரும் வகுப்பில் இருந்து விளையாட்டுப் பயிற்சிக்கு போய்விட்டார்கள். சாந்தா மட்டும் போகாமல் வகுப்பறையில் தனியே இருந்தாள்; அவளைத் தேடிக்கொண்டு வந்தாள் ப்ரியா.

''என்ன சாந்தா ஒருமாதிரியாய் இருக்கிறாய்?''

''ஒன்றுமில்லை!''

''பொய் சொல்லாதே! நேற்று வீட்டில் நடந்ததை நினைத்துத்தானே! சங்கர் உன்னைத்தப்பாய் நினைக்கமாட்டான். நான் சிரிப்பு மூட்டியதால் தானே அப்படி நடந்தது; மறந்திடடி!''

''எப்படி ப்ரியா மறக்கமுடியும்? ஒரு ஆண் பிள்ளை முகத்தை ஒரு பெண் எச்சில் படுத்துவதை நினைக்கவே நெஞ்சு வெடிச்சிடும். நடந்திருக்கே என்னால். நான் எப்படி மறக்கமுடியும்? என் வாழ்நாள் முழுவதும் செத்து சுடலைக்கு போகும்வரை என்னால் மறக்கவே முடியாது ப்ரியா'' விம்மிவிம்மி அழுதாள்.

ப்ரியாவால் அவள் அழுவதைத் தாங்க முடியாமல் நெஞ்சு கனத்தது. ஒரு விளையாட்டுப் பேச்சு எவ்வளவு வினையாகிவிட்டது. சாந்தாவின் மனம்

எவ்வளவு தூரம் உடைந்து விட்டது. இதற்கு நான் காரணமாக இருந்துவிட்டேனே ஒரு மென்மையான இதயத்தை அடித்து நோகப் பண்ணி விட்டேனே! ப்ரியாவின் மனம் வேதனையால் துடித்தது.

மனதை ஒருநிலைக்கு கொண்டுவந்தாள்சாந்தா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''ப்ரியா நீ ஏன் வேதனைப் படுகிறாய் உன் மேல் தப்புஇல்லை. என் தலைவிதி இப்படி எல்லாம் நடக்க வேண்டும் துன்பப்பட வேண்டும் என்று என் தலையில் எழுதி இருக்கு. அதற்கு நீ என்ன செய்யமுடியும்? முற்பிறப்பில் பாவம் செய்திருக்கி றேன் அதை அநுபவித்துத் தானே தீரவேண்டும் நீ மனவருத்தப்படுவதனால் தப்பிவிட முடியுமா?''

''சாந்தா உனக்காக சங்கரிடம் நான் மன் னிப்புக் கேட்கட்டுமா?''

''வேண்டாம் ப்ரியா நேற்று உடனேயே அவரி டம் மன்னிப்புக் கேட்டு விட்டேன். ஆனால் நான் தப்பா நினைக்கவே இல்லை பிறகு ஏன் மன்னிப்பு கேட்கிறீங்க என்று என்னைச் சமாதானப்படுத்தி னார். சங்கர் எவ்வளவு நல்லவர். எத்தனை மாதங் கள் அவரிடம் பாடம் படித்திருக்கிறேன். ஒருநாள் கூட கோபப்படவோ சலிப்படையவோ இல்லை. எத் தனை தடவை என்றாலும் திரும்பத்திரும்ப எனக்கு விளங்கும் வரையும் சொல்லித் தந்தார். பிழை விட்டபோதும் என்னுடைய அறியாமையைக் கண்டு சிரிக்கவோ கேலியாகப் பேசவோ இல்லை. பொறு

மையாகப் பிழைகளைத் திருத்துவதற்கு உதவி செய்தார் அவருக்கு இப்படி நடந்து விட்டதே என்று தான் மனம் வேதனையால் துடிக்கிறது. அவர் முகத்தைப் பார்ப்பதற்கே உடம்பெல்லாம் கூசுது அவர் முகத்தை இனி எப்படி என்னால் பார்க்க முடியும் என்றுதான் கவலையாய் இருக்கு.''

''சங்கர் உனக்கு அண்ணாவாக இருக்கிறபடியால்அவர் மனம் ஓரளவு சமாதானம் அடைந்திருக்கலாம். நீ அவருக்கு தங்கையாக இருப்பதனால் நடந்தது சின்னவிசயமாக உனக்குப்படலாம் நீயே வேறு ஒரு பெண்ணாக இருந்தால் சங்கரின் மன நிலை எப்படி இருக்கும் என்று கொஞ்சம் எண்ணிப் பார். ஏன் நீயே என்நிலையில் இருந்து நடந்ததை நினைத்துப்பார் இரவுமுழுவதும் என்னால் தூங்கவே முடியவில்லை ப்ரியா.''

''என்னை மன்னிச்சிடு சாந்தா''

''சீச்சீ நீ என்னிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்பதற்காக நான் இவ்வளவும் சொல்லவில்லை யாரிடமாவது என்மனதில் உள்ளதை சொல்லவேண்டும். அப்பவாவது மனம்அமைதி அடையமாட்டாதா என்று தான் உன்னிடம் சொன்னேன் உன்னை விட்டால் எனக்கு யார் இருக்கிறாங்க விசுவாசம் உள்ளவர்களாக.''

''வீட்டுக்கு வரமாட்டாயா சாந்தா?''

''................................''

''நீ வராவிட்டால் அம்மா ஏன் என்று கேட்

பாங்க என்னால் பதில் சொல்ல முடியாது. ப்ளீஸ் எனக்காக வரமாட்டாயா?'' கொஞ்ச நாள் போகட்டும் நடந்ததை மனம் ஓரளவுக்காவது மறந்த பிறகு வாறேன்.

''விளையாட்டுப் பேச்சினால் என்மேல் அன்பான உண்மையான ஒரு சிநேகிதியை இழந்துவிட்டேன்.''

''இல்லை ப்ரியா இல்லை உன்னை நான்இழக்கவே மாட்டேன் உன்னைப் போல் ஒரு உயிர்த் தோழியை நான் பார்த்ததே இல்லை உன்னைஎன்னால் மறக்கவே முடியாது. உன்னை விட்டு என்னால் பிரியவே முடியாது ப்ரியா.''

அவள் கையைப் பிடித்துக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டவளாய் கலங்கினாள்.

அவளின் கண்களைத் துடைத்து விட்டாள். மாணவிகள் வகுப்பறைக்குள் வரத் தொடங்கினார்கள்.

அவள் இரண்டு நாள் பாடம் கேட்க வராததினால் அவன் மனதில் சோர்வு ஏற்பட்டது ப்ரியாவைக் கேட்டால் குத்தலாகப் பரிகசிப்பாள், என்ன செய்வது என்று தெரியாமல் மனம் அலைபாய்ந்தது வாசிகசாலைக்குப் போகலாம் என்று சைக்கிளை எடுத்தான். சங்கரை தூரத்தில் கண்டவுடன் தலையைக் குனிந்து கொண்டு நடந்தாள். அவள் அருகில் வந்தவன்.

''சாந்தா ஏன் இரண்டு நாளாக வரவில்லை?''

''..............................''

''சின்ன விசயத்தை மனதில் வைத்துக்கொண்டு வேதனைப்படாதீங்க''

''நீங்கள் பெருந்தன்மையுடன் சின்னவிசயமாக எடுத்துக் கொள்ளலாம். எனக்கும் ஒரு மனம் இருக்கு இல்லையா? நடந்ததை நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும்போது எப்படி உங்கள் வீட்டுக்கு வரமுடியும்? உங்கள் முகத்தைப் பார்க்க முடியும். எவ்வளவு உதவி செய்த உங்களுக்கு என்னால் அப்படி நடந்து விட்டது. மறக்கவே முடியவில்லை சங்கர்.''

''சாந்தா என்மேல் உங்களுக்கு அன்பிருந்தால் நடந்ததை மறந்து விட்டு நாளைக்கு வீட்டுக்கு வாங்க உங்களுக்காகப் பார்த்துக் கொண்டிருப்பேன் ஏமாத்திடாதீங்க.''

அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் என் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்று நெஞ்சமெல்லாம் உருகி நின்றாள்.

''சங்கர்''

''பிளிஸ் எனக்காக வாங்க''

அவன் போய் விட்டான்.

இரவு சாந்தாவால் தூங்கவே முடியவில்லை. அந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்பே அவளுக்கு சங்கரின் மனதை ஓரளவு புரிந்து கொண்டிருந்தாள். அவன் தன்னை விரும்புவது அவள் உள் மனதிற்கு புரிந்தே இருந்தது. அவளும் அவன் விருப்பத்திற்கு

இசைவாகவே நடந்து கொண்டு வந்தாள். அவன் தன்விருப்பத்தைத் தெரிவிக்கட்டும் அதன் பிறகு என் சம்மதத்தைத் தெரிவிக்கலாம் என்று காத்திருந் தாள். பாடம் சொல்லித் தரும்போது அவன் தன் மேல் காட்டிய பரிவு அவளுக்குள் ஆசைஅலைகளைத் தோற்றிவித்துக் கொண்டே இருந்தது. ஆண் மனத் தால் எவ்வளவு சுலபமாக பெண் மனதை வெற்றி கொள்ள முடிகிறது என்று வியப்படைத்திருந்தாள். அந்தச் சம்பவம் நடந்து மனதைக் காயப்படுத்தி விட்டது. மாலை அவன் பேசிய பேச்சு காயப்பட்ட மனதின் வலியையே இல்லாமல் செய்துவிட்டது. சங்கர் என்னை விரும்புகிறார் என்பதை உறுதி யாக்கி விட்டது. அவளுள் காதல் உணர்வுகள் உடல் முழுவதும் வியாபித்து இன்பக்கனவுகளை அள்ளிச் சொரிந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்க வைத்தது.

தெருக்கதவைத் திறந்து வந்து கொண்டிருந் தவளை ஓடிச்சென்றுஅவள் கையைப்பிடித்து உள்ளே கூட்டி வந்தாள்.

"என்ன ப்ரியா அப்படிப் பார்க்கிறாய்!"

"உன்னை நான் இவ்வளவு விரைவாக எதிர் பார்க்கவேயில்லை. என் மனம் உனக்காக ஊமை யாக அழுதது உனக்கும் புரியாது சாந்தா. அதை அநுபவித்த எனக்குத்தான் அதன் வேதனை தெரி யும்; இனிமேல் உன்மனம் வருந்தும்படி என்றுமே நடக்கமாட்டேன்."

''நீ வேணுமென்று செய்யவில்லையே ப்ரியா தற்செயலாக அப்படி நடந்திட்டுது. அதற்கு நீ என்ன செய்ய முடியும்? அந்தச் சம்பவத்தை அடியோடு மறந்துவிடு. பழையபடி கலகலப்பான ப்ரியாவாகவே என்னோடு பழகு அதைத்தான் உன்னிடம் நான் கெஞ்சிக் கேட்கிறேன்.''

அவளை இறுகக் கட்டி அணைத்துக் கொண்டாள் ப்ரியா.

''சங்கர் ப்ரியா வந்திருக்கிறாள்.''

அவளைக் கண்டதும் அவன் உள்ளம் மகிழ்ச்சியால் அகல விரிந்து தேனைச் சொரிந்தது.

''ரொம்ப தாங்ஸ் சாந்தா! வரமாட்டீங்களோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்.''

''நேற்று உங்களை நான் சந்தித்ததை ப்ரியாவுக்குச் சொன்னீங்களா?''

''இல்லை!''

''எதையுமே அவளிடம் சொல்லாதீங்க.''

''ப்ரியா வாறாள் பாடத்தை எடுங்க.''

''நாளை சனிக்கிழமை தானே வீட்டுக்கு வாராயா ப்ரியா?''

''என்ன விசயம்?''

''என் பிறந்த நாள் மறந்திட்டியா?''

''ஓமடி மறந்திட்டேன் கட்டாயம் வாறேன்.''

"ஹப்பி பேர்த்டே சாந்தா."

"தாங்ஸ்"

அவள் தந்த கேக்கை வாங்கிக் கொண்டான்.

"வெரி மச் குட் லுக்கிங். இந்த உடுப்பில் அழகாய் இருக்ங்க."

"தாங்ஸ்" வெட்கத்துடன் குனிந்து கொண்டாள்.

"உங்க பிறந்த நாளில் மகிழ்ச்சியான செய்தியைத் தருகிறேன் வீட்டில் கொண்டுபோய்ப் பாருங்கள்."

பிறந்தநாள் வாழ்த்து மடலை அவளிடம் கொடுத்தான். சோடிப் பறவைகள் அழகாய்க் காட்சி அளித்த வாழ்த்து மடலை ப்ரியா வருவதைக்கண்டு பாடக்கொப்பியுக்குள் மறைத்தாள்.

ஏன்டி இன்றும் வந்திட்டாய்?

சங்கருக்கு கேக் கொடுக்க வந்தேன். வாறேன் ப்ரியா.

வீட்டுக்கு வந்தவள் துள்ளும் உள்ளத்துடன் வாழ்த்துமடலை மெல்ல விரித்தாள்.

முத்து முத்தாக எழுத்துக்கள் கண்ணுக்குள் நுளைந்தன.

''காதல் நெஞ்சம்பாடும் - அது
கனவாய்ப் போனால் வாடும்
உள்ளம் உன்னைத் தேடும் - அது
உலகில் உனக்காய் வாழும்.''

அன்புடன்
சங்கர்

எவ்வளவு அழகான கவிதை நெஞ்சத்து உணர்வுகளை தெளிவாக வெளிப்படுத்தும் கருத்துக்கள். சாந்தாவின் காதல் நெஞ்சம் நீலவானில் சிறகை விரித்து உயரப்பறந்தது சங்கர் இருக்கும் இடத்தைத் தேடி.

''இரவு ரீவி பார்த்தாயா சாந்தா''

''அலுப்பாய் இருந்தது படுத்து விட்டேன்.''

''நல்ல நிகழ்ச்சியைத் தவற விட்டு விட்டாயே''

''என்ன நிகழ்ச்சி?''

''ஐரோப்பிய நாடுகளில் முக்கியமான இடங்களை எல்லாம் எடுத்து விளக்கத்தோடு ஒளி பரப்பினாங்க. உண்மையில் நன்றாக இருந்தது.''

''இவ்வளவு அழகான நாடுகள் எல்லாம் இருக்கின்றனவா என்று பிரமிப்பாய் இருந்திச்சு.''

''அந்த நாடுகளுக்கெல்லாம் போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டிச்சு''

''என் ஆசை அதுதாண்டி ஜேர்மனி, பிரான்ஸ் லண்டன், றோம், சுவிஸ் என்று எல்லா நாடுகளுக் கும் போய் பார்க்க வேண்டும் என்று. நடக்கக் கூடிய காரியமா?''

''எனக்கு அப்படி எல்லாம் ஆசை இல்லை''

''உன் ஆசை என்ன சொல்லு?''

''சொன்னால் முதலில் சிரிப்பாய் பிறகு திட்டு வாய்''

''சொல்லேன் பார்க்கலாம்''

''என்னை விரும்புகின்ற ஒருவரைத் திருமணம் செய்ய வேண்டும். என் ஞாபகார்த்தமாக ஒரு பெண் குழந்தையைப் பெற்று அவரிடம் கொடுத்து விட்டு அவர் மடியில் தலைவைத்துப் படுத்திருக்க வேண்டும். அவர் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கும்போது அவரின் சிரித்த முகத்தைப் பார்த்தபடியே செத்துப் போய்விட வேண்டும்.''

அவள் சொல்வதை ஆவலுடன் கேட்டுக் கொண்டு வந்தவள் கடைசி வரியை சொன்னபோது அதிர்ச்சி அடைந்தாள்.

''போடி விளையாட்டுக்குக் கூட இப்படிச் சொல்லாதே என்னால் தாங்க முடியாது.''

''பைத்தியக்காரத் தனமாக இருக்கா''

''ப்ரியா! பிறந்த நாங்கள் எல்லோரும் ஒரு நாள் இறக்கத்தான் போகிறோம். எவருமே தப்ப

முடியாது. இறந்த பிறகும் ஒருவர் மனதில் வாழ்ந்து கொண்டிருக்க கொடுத்து வைச்சிருக்கணும். பொது வாக யார்ராவது இறந்துவிட்டால் ஒரு கிழமையோ ஒரு மாதமோ கூடப் பார்த்தால் ஒரு வருடமோ நினைப்பாங்க கவலைப்படுவாங்க கால ஓட்டத்தில் மனதைத் தேற்றிக் கொண்டு பழையபடி வாழத் தொடங்கி விடுவார்கள். ஒரு சிலபேர் விதிவிலக் காக இருக்கலாம். ஆனால் உண்மையான அன்பு உள்ளவர்கள் ஒருவர் இறந்து போனாலும் தான் இறக்கும் வரை முதல் இறந்து போனவரை மனதில் நினைத்து வாழ்ந்து கொண்டே இருப்பார்கள். அப்படியான ஒருவர் உள்ளத்தில் நான் வாழ ஆசைப் படுகிறேன். அப்படிப் பட்டவருக்கு மனைவியாக வாழ்ந்து மறைந்து போகவே விரும்புகிறேன். என் குழந்தையைப் பார்க்கும் அவருக்கு என் நினைவு வந்து கொண்டே இருக்கும். நான் வாழ்ந்த அவரின் இதயத்தில் என் மரணத்திற்கு பின்பும் ஓவியமாய் அவர் உள்ளத்தில் வாழ்ந்துகொண்டே இருப்பேன்.''

''ஏன்டி இப்படி எல்லாம் நினைக்கிறாய்?''

''ஏன் அப்படி நினைத்தால் என்ன? இப்படித் தான் நினைக்க வேண்டும் என்று ஏதாவது விதி முறைகள் இருக்கா. எதையும் சட்டம் போட்டுத் தடுக்கலாம். ஆனால் நினைவுகளுக்கு மட்டும் எவ ராலும் எங்கும் எப்போதும் தடைபோட முடியாது. உண்மையான சுதந்திரம் நினைவுகளுக்கு மட்டும் தான் உண்டு. மற்றவைகளுக்கு எல்லாம் வரை யறுக்கப்பட்ட சுதந்திரம் தான் உண்டு.

''எங்கே என் நினைவுகளுக்கு சட்டம் போட்டு எவராவது தடுக்கட்டும் பார்க்கலாம்.''

''ஏன் ப்ரியா அப்படிப் பார்க்கிறாய். நான் இப்படி நினைப்பது உனக்குக் கவலையாக இருக்கா. ஏன் உன் மனதில் கூட நான் வாழ முடியும் செத்த பிறகும்''

''ப்ளீஸ் சாந்தா! இப்படி எல்லாம் நினைக்காதே. உன்னை கெஞ்சிக் கேட்கிறேன்.''

''ப்ரியா நான் இப்படி எல்லாம் நினைத்து விட்டால் நடந்தாவிடப் போகிறது. நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வங்களை எவர் நினைக்கப் போகிறார்கள்? கோயில்களுக்கு ஏன் போகப் போகிறார்கள்?''

''நடக்கிறதோ நடக்கவில்லையோ நீ இப்படி எல்லாம் நினைக்க வேண்டாம் சாந்தா. என் நெஞ்சுக்குள் ஒரு மாதிரியாய் இருக்கு.''

''அதற்கு என்ன காரணம் தெரியுமா? நீ என் மேல் நிறைய அன்பு வைத்திருக்கிறாய். சும்மா நினைப்பதில் கூட நான் உன்னைவிட்டுப் பிரிந்து விடக்கூடாது என்று நீ விரும்புகிறாய்! உன் இதயத்தில் நான் எவ்வளவு தூரம் இடம் பிடித்திருக்கிறேன் என்று பார்த்தாயா! நீ என் சிநேகிதியாக இருப்பதில்லை முக்கியம் உன் இதயத்தில் வாழ்கிறேன் பார்! அது தான் என் இதயத்துக்குக் கிடைத்த மகிழ்ச்சி, வெற்றி. இந்த மகிழ்ச்சியை என்றுமே இழக்கக் கூடாது ப்ரியா நான் இறந்த பிறகும்.''

''பள்ளிக்கூடத்தில் சந்தித்தேன், பழகினேன் பிரிந்தேன் என்று வாழ்வதில் என்ன மகிழ்ச்சி இருக்கு! நீயே சொல்லு?''

''சரி நான் உனக்கு முன் இறந்து போனால்?''

''என் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பாய் நான் இந்த மண்ணில் இருந்து மறையும் வரை.''

''ப்ரியா அவளை இறுக அணைத்துக் கொண்டாள். நான் உனக்கு முன் இறந்து போகத்தான் விரும்புகிறேன் சாந்தா! உன் இதயத்தில் வாழ்வதற்காக.''

''ம்ம் சுயநலம் யாரை விட்டது நீ மட்டும் எப்படி விதிவிலக்காக இருக்கமுடியும்?''

''என்னடி சொல்கிறாய்?''

''வேண்டாம் ப்ரியா ஆசைகளைச் சொல்லப் போய் சாவில் வந்து முடித்திருக்கிறோம்.''

''கனடா, ஜேர்மன், பிரான்ஸ் என்று மனதை அலையவிடாதே! தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி! இருக்கிறதைத் கொண்டும் கிடைக்றதைக் கொண்டும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணம் எவ்வளவு நல்ல பூமி. எங்கள் எண்ணம் போல் வாழக்கூடியதாக இருக்கிறது. வெளிநாடுகளுக்குப் போனவர்கள் யாழ்ப்பாணத்தை நினைத்து ஏன் விட்டுவிட்டு வந்தோம் என்று

ஏங்குகிறார்கள்! பெற்ற நாட்டைவிட்டு அன்னிய நாட்டுக்குப் போனால் அந்நாட்டவர்கள் கைநீட்டியா வரவேற்ப்பார்கள் விருந்தினரைப் போல். ஒவ்வொரு நாடுகளிலும் பலபிரச்சினைகள் இருக்கு ஒவ்வொரு வீட்டிலும்பிரச்சினைகள் இருப்பதுபோல் அதுவும் வீட்டுக்கு வீட்டு பிரச்சினைகள் வேறுபாடாக இருப்பதுபோல். இங்கே இருந்தால் தான் சாகவேண்டும் என்பதில்லை வெளிநாடுகளுக்குப் போனால் மரண தேவன் விட்டு விடுவானா? விதி முடிந்தால் போய்ச் சேர வேண்டியதுதான். நான் ஒருநாளும் என் யாழ்ப்பாணத்தை விட்டுப் போக மாட்டேன். இந்த மண்ணில் பிறந்தேன் இந்த மண்ணில் வளர்ந்தேன் இந்த மண்ணிலேயே இறந்து போக விரும்புகிறேன்.''

வானத்தில் குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிட்டன ஹெலிகொப்டரில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கும் சத்தங்கள் கேட்டன எறிகணைகள் வெடித்துச் சிதறின. கடலில் இருந்து பீரங்கிப் படகுகள் குண்டுகளை வீசின நடுங்கியது யாழ்ப்பாணம்!

இதுதான் யாழ்ப்பாணம் இதைத்தான் விட்டுப் போக மாட்டேன் என்கிறாய்''

ப்ரியாவின் சிரிப்பில் சாந்தாவும் இணைந்து சிரித்தாள்.

"சங்கர்! பேப்பர் படிச்சீங்களா?''

''ஏன்?''

''நேற்று விமானம் வீசிய குண்டால் ஒரு இளை ஞன் இறந்து போனாரே அவரைப்பற்றி என்ன நினைக்கிறீங்க.''

''விதி முடிந்து விட்டது போய்விட்டான் என்று சுலபமாக விளக்கம் கொடுக்கக்கூடிய சராசரி மனி தர்களில் இருந்து வேறுபட்ட பதிலை எதிர்பார்த் தீர்களாயின் விடை நீண்டதாகவே இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஆசைகள், கனவுகள், கற்பனை கள் எதிர்பார்ப்புகள் நிச்சயமாக இருக்கவே செய் யும்.'' ''ஆனந்தமான கனவுகளை அவன் சுமந்து கொண்டு இருந்திருக்கலாம் ஒரு பெண்ணினால் நேசிக்கப்பட்டவனாகக் கூட இருக்கலாம் அவனும் அந்தப் பெண்ணுக்கு இதயத்தில் இடம் கொடுத் திருக்கலாம். இறந்தவனின் கனவுகளும் ஆசைகளும் காற்றோடு காற்றாகக் கலந்திருக்கும். ஆனால் அவன்மேல் அன்பு செலுத்திய அந்தப் பெண்ணின் நிலை. ஆசைகள் நிராசைகளாகி கனவுகள் புதை யுண்டு போய் அவள் மனம் இருள் சூழ்ந்து விவரிக்க முடியாத உணர்வலைகளால் அவள் உள்ளமும் உடலும் பாதிக்கப்பட்டு மற்றவர்களின் பரிதாபப் பார்வையினாலும் பேச்சுக்களினாலும் மனம்நைந்து போய் அவள் மனதின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் சில மாதங்களுக்கு வருடத்துக்குப் பின்போ வேறு ஒருவருடன் வாழச் சொல்லி வற் புறுத்தும் வேதனைகளைச் சந்தித்து தனக்குப்பின் இருக்கின்ற சகோதரிகளின் வாழத்துடிக்கின்ற ஏக் கப் பார்வைகளுக்காக மனமும் உடலும் விரும்பா விட்டாலும் ஒருவருக்கு மனைவியாக மனத்தால்

இறந்தாலும் உடலால் தாலி கட்டியவனுடன் வாழ்ந்து வெறும் யந்திரமாய்......''

விசும்பி அழும் சத்தம் கேட்டு தன் பேச்சை நிறுத்தினான்.

சாந்தா மேசையில் தலை கவிழ்ந்து விசித்து விசித்து அழுதாள்.

''என்னடி! சங்கர் வெறும் கற்பனையில் சொன்ன கருத்துக்களைக் கேட்டு அழுவதா'' ப்ரியா தான் அவள் தோளைத் தொட்டு ஆறுதல் கூறினாள்.

''இல்லை ப்ரியா சங்கர் சொல்வது முழுக்க உண்மை!'' கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சங்கர் ஓர் இளம்பெண் இறந்து போனாலும் அவளை விரும்பிய இளைஞன் நிலையும் இதுதானா?

நிச்சயமாக ஆணாய் இருந்தால் என்ன பெண்ணாய் இருந்தால் என்ன உணர்வுகள் பொதுவானவை அதில் வித்தியாசமே இல்லை''

''ஐ ஆம் ஸாரி (I am sorry) சாந்தா என்பதில் உங்க உணர்வுகளைப் பாதித்து விட்டது என்று நினைக்கிறேன். முடிந்த வரை உணர்வுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.'' வெளியே போய்விட்டான்.

''ப்ரியா! சங்கர் மனங்களைச் சரியாக எடை போடக் கூடியவர். மனித உரிமைகள் என்பது மனித உணர்வுகளின் காவல்தான் இதைப் பலபேர் புரிந்து கொள்ளாததினால் எத்தனையோ பேருடைய

உரிமைகள் கால்களில் மிதிபடுகின்றன. கைகளால் அடிபடுகின்றன. கண்டிப்பினால் உடைந்து போகின்றன.

உன்னுடையதும் சங்கருடையதும் சிந்தனைகள் ஒரே மாதிரியாக இருக்கு சாந்தா.''

''சின்ன விசயத்தையும் ஆழமாக ஆராய்ந்து பார்க்கின்ற சங்கருடைய சுபாவம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு ப்ரியா! ஒரே ஒரு உயிரின் அநியாய அழிப்புக்கு இவ்வளவு பெரிய பதிலா? ஒரு மரணத் துக்குப் பின்னால் இவ்வளவு விசயங்களா? நெஞ்சுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கு.''

சங்கருக்கு இரக்க சுபாவம் அதிகம். அதனால் தான் இப்படி எல்லாம் அவனால் சிந்திக்க முடிகி றது. மற்ற உயிர்களில் உள்ள கருணையினால்தான் அவன் மாமிசமே சாப்பிடாமல் விட்டுவிட்டான்.

''என்ன சொல்கிறாய் ப்ரியா சங்கர் மாமிசமே சாப்பிடுவது இல்லையா?''

''ஓம்! நாலு வயசாக இருக்கும்போதே மாமிசம் சாப்பிடுவதை நிறுத்திவிட்டான்.''

''அப்படியா? ஏன்?''

''சின்ன வயசில் அப்பாகூட மீன்வாங்க கடற் கரைக்குப் போனான் கடலில் நீந்தித் திரியும் மீன் களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் அது அவன் மனதில் ஆழமாய் மனதில் பதிந்திருக்கு; அப்பா மீனை வாங்கிய பிறகு அந்த மீனைக்கடலில் போடும்படி கேட்டான். அப்பா ஏன் என்று கேட்

டார். அந்த மீன் தண்ணீரில் ஓடும்போது அழகாய் இருக்கும் என்று சொல்லி இருக்கான். இதுசெத்துப் போச்சு ஓடாது என்று அப்பா சொல்லி இருக்கார் அந்தப் பதில் அவனைப் பாதிச்சிருக்கு. வீட்டுக்கு வந்து பின்பும் கடலில் ஓடிக் கொண்டிருந்த மீன் களின் நினைவு தொடர்ந்து வந்திருக்கு. மீன்கறி யைச் சாப்பிட மறுத்திட்டான். அன்றில் இருந்து மீனையோ கடலில் இருந்து பிடிக்கின்ற. வேறு எதையுமோ அவன் சாப்பிடுவதில்லை''

''இன்னொருநாள் மாமாவுடன் ஆட்டிறைச்சிக் கடைக்குப் போனான் ஓர் ஆட்டைக் கட்டி வச்சிருந்தாங்க. இந்த ஆட்டை ஏன் கட்டி வைச்சி ருக்காங்க என்று மாமாவைக் கேட்டிருக்கான். இந்த ஆட்டை வெட்டித்தான் இறைச்சியை வாங்கப் போகிறேன் என்று மாமா சொல்லி இருக்கிறார். அந்தப்பதில் அவனைப் பாதிச்சிருக்கு. மாமா அந்த ஆடு பாவம் வீட்டுக்குப் போவோம் என்று அடம் பிடித்து இறைச்சியை வாங்க விடாமலேயே அவரை யும் கூட்டிக் கொண்டு வந்திட்டான். அதற்குப் பிறகு அவன் இறைச்சியையும் சாப்பிடுவதே இல்லை. அம்மா அவனுக்கு முதலில் மரக்கறி சமைத்து வைத்து விட்டுத்தான் எங்களுக்கு மச்சம் சமைப்பா. சிலநேரம் அம்மா சத்தம் போடுவா. உனக்கு மரக்கறி மற்றவர்களுக்கு மச்சம் இரண்டு சமையல் செய்வது எவ்வளவு கஷ்டம் என்று. கொஞ்சம் கொஞ்சமாய் மரக்கறிகளை வெட்டித் தானே சமைக்கப் பழகிவிட்டான். சில நாட்களில் அவன் தான் சமைப்பான். நல்ல ருசியாய்ச் சமைப்

பான். சிலநேரம் நாங்கள் அவன் சமைத்த கறிகளை அவனுக்குத் தெரியாமல் எடுத்துச் சாப்பிடுவோம்.''

''எங்க வீட்டில் சங்கர்தான் இரக்க மனம் உள்ளவன்; இன்னொரு விசயத்தைச் சொன்னால் ஆச்சரியப்படுவாய்! பச்சைமரங்களின் தடிகளையோ இலைகளையோ வெட்டமாட்டான் கேட்டால் மரங் களுக்கும் உயிர் இருக்கு அது வாழ்வதற்காக தடி களாகவும் இலை ஓலைகளாகவும் பரப்பி இருக்கு அதை வெட்டக்கூடாது என்று சொல்வான். எங் களுக்கு கைகள் விரல்கள் போலத்தான் மரங்களுக்கு தடிகளும் இலைகளும் என்று சொல்வான். மண்புழு இருக்கில்ல அதை கடி எறும்புகள் கடித்துக் கொண் டிருந்தால் துடித்து நெளியும் இல்லையா? இவன் என்ன செய்வான் தெரியுமா? அந்த மண்புழு வைத் தூக்கிக் கொண்டு போய்த் தண்ணீரில் போட்டு எறும்புகள் எல்லாவற்றையும் கலைச்சுட்டு தண்ணீர் ஓடுகிற வாய்க்காலில் குழியைக் கிண்டி அதற்குள் மண்புழுவைப் போட்டு மூடிவிட்டு வரு வான். எறும்புகளுடைய சாப்பாட்டை ஏன் நீ தடுக்கிறாய்? என்று கேட்டால் எறும்புகள் அரிசி சீனியைச் சாப்பிடட்டும் என்று சொல்வான்.''

''ப்ரியா கடவுள் நல்ல இதயம் உள்ள ஒருவரை என் வாழ்க்கையில் சந்திக்க வைத்திருக்கிறார். எல் லோரும் கடவுளின் குழந்தைகள் தான் ஆனால் சங்கர் போன்றவர்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப் பட்ட அபூர்வக் குழந்தைகள்.''

''அம்மாவுக்கும் எல்லாப் பிள்ளைகளிலும் பார்க்க அவன் மேல்தான் பாசம் கூட அவன் மனம் துன்பப்படக் கூடாது என்று கவனமாக இருப்பா அவன் கண்முன்னால் மீனையோ இறைச்சியையோ வெட்டமாட்டா.''

''போனமாதம் எங்க ஆடு குட்டி போட்டுச்சு அந்த நேரத்தில் அம்மா சங்கரை யாழ்ப்பாணம் போய் சமையல் சாமான்களை வாங்கிவர அனுப் பிட்டா.

''அவன் இருந்தா உதவியாய் இருக்கும் என்று அம்மாவிடம் சொன்னேன்.''

''ஆடு குட்டி போடும் போது வேதனைப்படும் சத்தம்போடும் இல்லையா ரத்தமாய் கொட்டும் அதைப் பார்த்தால் அவன் கவலைப்படுவான். அது அவன் மனதில் பதிஞ்சிடும். அது அவன் வாழ்க்கையைப் பாதித்துவிடும் என்று சொன்னா.''

''நான்என்ன சொல்கிறேன்என்று புரிகிறதா?''

அவள் விழித்துப் பார்த்தாள்.

''மக்கு இது கூடவா புரியவில்லை?''

தான் கல்யாணம் முடித்து மனைவி கற்பமாகிக் குழந்தை பிறக்கும் போது இந்த ஆட்டைப் போலத் தானே வேதனைப்படுவாள் என்று யோசித்து கல் யாணம் முடிக்கவே மறுத்து விடுவான்.''

''ஓடுகிற மீன் செத்துப் போய்விட்டதே இந்த ஆடு சாகப் போகிறதே என்று சாப்பிடமல் விட்ட

வன் கல்யாணம் முடிக்கிறதிற்கும் மறுத்துவிடுவான்.''

''எதுவும் கிட்ட இருந்தால் சுலபமாகக் கிடைத்தால் அதனுடைய அருமை தெரிவதில்லை.''

''யாழ்ப்பாணத்தைவிட்டு ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் என்று ஆசைப்படுகிறாய் அது போலத்தான்.

உனக்கு அண்ணனாய் இருப்பதனால் அவருடைய இரக்கமுள்ள மென்மையான இதயத்தை உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சங்கரைப் பொறுத்தவரையில் உன் அம்மா பரவாயில்லை. நானும் உன் அண்ணன் விடயத்தில் அவதானமாய் இருக்க வேண்டும். மறந்துகூட அவர் மனம் புண்படாமல் நடந்து கொள்ள வேண்டும். அன்று அவர் முகத்தை எச்சில் படுத்திய போதும் கோபப்படாமல் மன்னிக்கும் சுபாவம் எல்லோருக்கும் அவ்வளவு சுலபத்தில் வந்துவிடாது.''

தாய் கோயிலுக்கு வரக்கேட்டதை மறுத்துவிட்டு ப்ரியாவின் வீட்டுக்கு வந்தாள். என்ன ஒருவரையும் காணவில்லை என்று எண்ணியபடி உள்ளே வந்தாள். சாய்மனைக் கதிரையில் வெளியில் போவதற்கு ஆயத்தமாக ஆடை உடுத்தபடி தூங்கிக் கொண்டிருந்தான்.

எவ்வளவு அழகாக இருக்கிறார் ஆண்மைக்களை அவன் முகத்தில் விரவி நின்றது. அவள் உள்உணர்

வுகள் விழித்துக் கொண்டன. இளமை உள்ளம்ஆனந்தத்தினால் ஆகாயத்தில் மிதந்தது. இந்த அழகு எனக்கு, எனக்கு மட்டும்..... சிரித்துக் கொண்டாள். தூங்கும் இளைஞனின் அழகைக் கன்னிப் பெண் பார்த்து ஆசைப்படக்கூடாது என்பது நினைவுக்கு வர தூ. தூ. தூ. என்று மூன்று முறை பொய்யாகத் துப்பிக் கொண்டாள். அவன் தூக்கம் கெட்டு விடக்கூடாது என்று மெல்லப்ரியாவை அழைத்தாள்.

"வாடி, சங்கர் எழுந்திரு சாந்தா வந்திருக்கிறாள்!"

துடித்துப் பதைத்துக் கொண்டு எழுந்தவன் அவளைக் கண்டு சிறிது வெட்கத்துடன் உள்ளே சென்று முகத்தை அலம்பிக் கொண்டான்.

"ப்ரியா ஒருவர் தூங்கும் போது குழப்பக் கூடாது. அது பாவம் வேலைப் பழுவினாலும் சிந்தனையாலும் அலைக்கழிந்து களைத்துப்போய் உடம்புக்குள் இருக்கும் ஆத்மா அமைதி அடைந்திருக்கும் நேரம் தூங்கும்போது மட்டும்தான்"

"அவன் எங்கோ முக்கிய வேலையாகப் போகப் புறப்பட்டான். நேரம் இருந்தும் கதிரையில் இருந்தபடியே தூங்கிவிட்டான். இப்பவந்து ஏன் எழுப்பிவிடவில்லை என்று கத்துவான். நீ இருக்கிற படியால் பேசாமல் இருப்பான். நீ போன பிறகு சத்தம் போடுவான்."

"சத்தம் போடமாட்டார் நான்சொல்கிறேன்"

சங்கர் வந்தான்.

"நான் போனதற்கு ப்ரியாவுடன் ஏன் எழுப்பவில்லை என்று சத்தம் போடாதீங்க சங்கர். சத்தம் போடுவதினால்போனநேரம் திரும்பிவந்துவிடுமா?"

அவள் பேச்சில் உள்ள உண்மையைப் புரிந்து கொண்டு சிரித்தான்.

பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளைகள் ஏன் குறை வாகவந்திருக்கிறார்கள்?

''செல் அடிச்சிருப்பான் அல்லது குண்டுபோட் டிருப்பான் அதைவிடு இந்த இரண்டு விரலில் ஒன் றைத் தொடு சாந்தா.''

''என்ன குழந்தைப் பிள்ளைகள் போல்விளை யாட்டு?''

''சரி அப்படித்தான் இருக்கட்டும். தொடேன் என்ன விசயம் அதை முதலில் சொல்லு?

''ஒரு விசயம்பற்றி நான் நினைப்பது சரியா பிழையா என்று தீர்மானிப்பதற்குத்தான்.''

விசயத்தைச் சொல் முடிந்தால் நான் சொல்கி றேன்.

''இது உன்னைப் பற்றிய விசயம் நான் தான் தீர்மானிக்க விரும்புகிறேன்.''

''என்னைப் பற்றிய விசயமா? என்னிடம் கேளேன்.''

முதலில் தொடேன். பிறகு உனக்குச் சொல்கி றேன்.

''நீ நினைப்பதற்கு எதிர்மாறான விரும்பாத விரலைத்தொட்டுவிட்டால் சொல்லமாட்டாயே.''

''எதுவானாலும் சொல்கிறேன்''

ஒரு விரலைத் தொட்டாள்.

''நான் நினைத்தது சரிதான்'' ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் அவளைப் பார்த்தாள்.

''சொல் ப்ரியா!''

''இல்லை வேண்டாம்!''

''எதுவானாலும் சொல்வதாக வாக்களித்திருக்கிறாய்!''

''வேண்டாம் சாந்தா நான் நினைப்பதற்கு மாறாக இருந்துவிட்டால் உன்மனதிற்கு சங்கடமாக இருக்கும் எனக்கும் கவலையாக இருக்கும்.''

''இல்லைப் ப்ரியா சங்கடப்படமாட்டேன் தைரியமாகச் சொல்லு.''

''நீ சங்கரை விரும்புகிறாயா?''

பதிலை எதிர்பார்த்து அவள் முகத்தைப் பார்த்தாள்.

தலையை மெல்லத் தாழ்த்திக் கொண்டாள்.

''ஓம் உன் அண்ணனை நான் விரும்புகிறேன் ப்ரியா''

அவள் தோளைத் தொட்டு கையால் நிமிர்த்தி

''உண்மையாகவாடி''

சம்மதத்துக்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

கையைப்பிடித்துக் கொண்டவள். ''ரொம்பச் சந்தோசமாக இருக்கடி; நீ சங்கரைத் திருமணம்

முடித்தால் அவனிலும் பார்க்க மகிழ்ச்சி அடைப வள் நான் தாண்டி.''

''ஏன்டி சங்கரும் உன்னை விரும்புகிறானா?''

''ஓம்''

''இரண்டுபேரும் பூனை மாதிரிஇருந்துகொண்டு காதலிச்சிருக்கிறீங்களா. நான்ஒரு வெகுளி இதைக் கவனிக்காமல் இருந்து விட்டேன். கொஞ்சம்கூட நினைக்கவில்லை பாடம் படிக்க வந்தவள் அவனை லவ் பண்ணுவாள் என்றும் படிக்க வந்தவளை அவன் காதலிப்பானென்றும். உனக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தால் என்வீட்டுக்கே வந்து அவனை லவ் பண்ணி இருப்பாய். இரண்டு பேரும் பேசி வைச்சுக்கொண்டு தானே எனக்குத் தெரியாமல் காதலிச்சிருக்கீங்க. எனக்கு ஒரு வார்த்தை ஒரு வார்த்தை சொல்லி இருக்கக் கூடாதாடி. நான் என்ன வேண்டாம் என்றா சொல்லி இருப்பேன். இப்பதான் எல்லாம் புரியுது. எனக்குப் பாடம் சொல்லித்தரக் கண்டபடிதிட்டியவன்எப்படிஉனக்கு மட்டும் மீண்டும் மீண்டும் சொல்லித்தந்தான் என்று அடுத்த வீட்டு கலைவாணி அம்மா மூலம் பாடம் சொல்லித் தரும்படி கேட்டபொழுது அடியோடு மறுத்தவன் உனக்கு மட்டும் எப்படிச் சொல்லித்தரச் சம்மதித்தான் என்று. அன்று அவன் முகத்தில் உன் எச்சில் தப்பு தப்பு உன் வாய் அமிர்தம் வழிந்த பிறகும் எப்படி உனக்குப் பாடம் சொல்லித்தர மறுக்காமல் விட்டான் என்று. மூன்று நாள் காதல் பறவையைப் பார்க்க முடியாமல் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவர அவனும் ஒன்றுமே நடவாதது போல் நடந்து கொண்டது.

இது ஒரு முட்டாள் காதல் பாடத்தின் அரிச் சுவடே தெரியாத ஏமாளி என்று என்னை நினைத் துக்கொண்டு தானே உங்க பாட்டில் காதல்நாடகம் ஆடி இருக்கிறீங்க இரண்டு பேரும்.''

''சிரிக்காதேடி! எனக்குப் பத்திக் கொண்டு வருகுது! வயசானவர்கள் சொல்வது எவ்வளவு உண்மை, பஞ்சையும் நெருப்பையும் பக்கத்துக்குப் பக்கம் வைக்கக்கூடாது. வைச்சால் பத்திக்கொள் ளும்என்று. என் அம்மாவுக்குத் தெரிந்தால் நீ தானேடி அவளைக் கூட்டிக்கொண்டு வந்தாய் என்று என்னைத் திண்டு கைகழுவிப் போடுவா. என்ன செய்யப் போறேன் என்றுதான் புரியவில்லை.''

சாந்தாவுக்குக் கொஞ்சம் பயம் பிடித்துக் கொண்டது ப்ரியானவ விழித்துப் பார்த்தாள்.

''முழியைப் பார் முழியை திருட்டுமுழி செய்கி றதை எல்லாம் செய்திட்டு முழிக்கிறாள். உடம் பெல்லாம் கள்ளப் புத்தி!''

சாந்தா கவலை தோய்ந்த முகத்தைக் குனித் துக் கொண்டாள்.

ப்ரியாவுக்கு சிரிப்பு வந்தது. கூடஆச்சரியமும் வந்தது இவ்வளவு அமைதியான பெண்ணால் எப் படிக் காதலிக்க முடிந்ததென்று.

அவள் மனதில் பயத்தை ஏற்படுத்தியது போதும் இனியும் அவள் மனதைக் கவலைப்பட விடுவது மனதுக்குப் பாவமாக இருந்தது.

அவள் முகத்தை நிமிர்த்தியவள்;

''என் மச்சாள் அழகாக இருப்பது எனக்குச் சந்தோஷம் தான். பெண் பார்க்கிற பிரச்சனையே இல்லாமல் செய்து விட்டான் சங்கர்!''

இவ்வளவு நேரமும் பயமூட்டத்தான் பேசி இருக்கிறாள் என்பது புரிந்ததும் முகமெல்லாம் மல்லிகையாய் சிரித்தாள் சாந்தா.

அவள் சிரிப்பில் உள்ள அழகு ப்ரியாவுக்குக் கூட மகிழ்ச்சியைக் கொடுத்தது.

''இப்படிச் சிரிச்சுச் சிரிச்சுத்தான் சங்கரை வலையில் போட்டியா?''

''உன்சிரிப்பைப் பார்த்தால் எனக்கே ஆசையா இருக்கு ஆண்பிள்ளை சங்கருக்கு எப்படி இருந்திருக்கும் கல்யாணம் முடிக்காமலே சொர்க்கத்தின் வாசலைப் பார்த்திருப்பான்.''

வெட்கத்தினால் திரும்பிக் கொண்டாள்.

கூதிரையில் புத்தகம் படிப்பதுபோல் சங்கரின் நடவடிக்கைகளை அவதானித்தாள்.

குளித்து ஆடைகளை மாற்றி தேநீரைக் குடித்தவன் குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

சங்கர் வெளியில் போகவில்லை?

அவளைப் பார்த்தவன் மேசையில் உள்ளபுத்தகங்களைப் புரட்டினான்.

''சாந்தா இன்று வரமாட்டாள்.''

''ஏன்?''

''ஒவ்வொருநாளும் வரவேண்டும் என்று சட்டமா?''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''நான் தான் வரவேண்டாம் என்று சொன்னேன்.''

''ஏன்? எதற்கு? எப்படிச் சொன்னாய்?''

''ஏன் பதட்டப்படுகிறாய்?''

''நான் ஒன்றும் [பதட்டப்படவில்லை-''

''அப்போ வெளியில் போகத்தானே வெளிக்கிட்டாய் போவதுதானே!''

''நேற்றைய பாடம் பாதிதான் முடிந்தது மீதிப் பாடம் இன்று சொல்லித் தருவதாகக் கூறி இருந்தேன்.''

''என்ன பாடம் காதல் பாடமா?''

திருதிரு என்று விழித்தான்.

''முழிக்கிற முழியைப் பார் கோட்டான் மாதிரி

ப்ரியாவுக்கே ஆச்சரியமாக இருந்தது என்னால் எப்படி சிரிக்காமல் பேசமுடிகிறதென்று.

இத்தோடு விடக்கூடாது இவனை. இன்னும் கொடுக்கவேண்டும் என்று நினைத்தாள்.

''நான் அவளைக் கூட்டிவந்தது பாடம் படிக்கத் தான் நீ காதலிக்க இல்லை. எங்க வீட்டில் வைத்தே அவளைக் காதலிக்க உனக்கு எவ்வளவு தைரியம்? என்னை ஒரு முட்டாள் என்று நினைத்துக் கொண்டு தானே அவளோடு பழகி இருக்கிறாய். அம்மாவுக்குத்

தெரிந்தால் என்ன நடக்கும் தெரியுமா? என்னை அடித்து நொருக்குவா. இவ்வளவு தூரம் நடந்த தற்கு நீதான் காரணம் என்று.''

''எல்லாரையும் முட்டாள் என்று நினைக்காதே! என்னைப் போலவே விசயம் அவள் வீட்டுக்குத் தெரிந்து அவளுடைய அம்மா, பூவரசம் தடியால் வாங்கு வாங்கென்று வாங்கி உடம்பெல்லாம் ஒரே தளும்பு; கன்னம் இரண்டும் வீங்கிப் போச்சு! பள்ளிக்கூடமும் வேண்டாம் படிப்பும் வேண்டாம் பேசாமல் வீட்டில் இரு என்று சொல்லிட்டாங்க.''

''உன்னால் தானே அவளுக்கு இது நடந்தது. கொஞ்சம்கூட யோசிக்காமல் நடந்தால் இப்படித் தான் நடக்கும்.''

அவன் முகம் முழுவதும் கறுத்து விட்டது. வேதனை அவன் முகத்தில் வந்து ஒட்டிக்கொண்டது.

அட எப்படி வாடிப் போனான் முகம். அவ்வளவு அன்பு வைச்சிருக்கிறானே. போதும் இனி மேலும் நோகும்படி பேசுவது சரிஇல்லை.

''உனக்கு எப்படித் தெரியும் ப்ரியா?''

''பக்கத்து வீட்டுச் சின்னப் பெண் வந்து சொன்னாள்.''

''ஏன் என்ன செய்யப் போகிறாய்?''

''சாந்தாவுக்கு நீ உதவி செய்யக் கூடாதா?''

''என்ன உதவி செய்யச் சொல்கிறாய்?''

''வீட்டுக்குப் போய் பார்த்து வாயேன்.''

''அவங்க வீட்டில் என்மேலும் கோபம் இருக்

கும் தானே.

என்ன செய்யலாம் ப்ரியா?''

''நீ முதலிலேயே சொல்லி இருந்தால் விசயம் வெளியில் தெரியாமல் செய்திருக்கலாம் இப்ப விசயம் முழுவதும் தெரிய வந்த பிறகு என்ன செய்கிறது''?

''சாந்தா ரொம்ப அமைதியானபெண். அடிபட்டு துன்பப்படுவதை நினைத்தால் வேதனையாக இருக்கு. ஏதாவது ஒருவழியில் சாந்தாவுக்கு உதவி செய்ய மாட்டா ஆ ஆ ஆ....''

அவன் பார்வை வெளியில் சென்றது; சாந்தா வந்து கொண்டிருந்தாள்.

''என்ன அவள் கன்னத்தைப் பார்க்கிறாயா? அடிவிழுந்த தழும்புகள் இருக்கிறதா என்று?''

திரும்பி ப்ரியாவை முறைத்துப் பார்த்தான்.

''உன்னைக் கொஞ்சம் பிந்திவரச் சொன்னேனே! சரியான நேரத்துக்கு வந்து அவனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லையா?''

சாந்தாவுக்குக் கொஞ்சம் புரிந்து விட்டது தங்கள் இரண்டு பேருடைய விசயத்தை வைத்துச் சங்கரைப் பயப்படுத்தி இருக்கிறாள் என்று.

சாந்தாவின் சிரிப்பில் இருந்து சங்கரும் புரிந்து கொண்டாலும் ப்ரியாவுக்குத் தெரிந்து விட்டதால் அசட்டுப் பார்வை பார்த்தான்.

''வழியாதே எல்லா விசயமும் எனக்குத் தெரியும் என்றவள்'' எழுந்து உள்ளே சென்றாள்.

''சாந்தா எங்கள் விசயம் உங்கள் வீட்டில் தெரியுமா?''

''இல்லை. ப்ரியா உங்களையும் பயம்காட்டி இருக்கிறாள்.''

''அப்படி என்றால்''

''நேற்று உங்களைப் போல்தான் நானும் பயந்துவிட்டேன். எங்கள் விசயம் முழுவதும் ப்ரியா வுக்குத் தெரியும். நேற்று நான் சொல்லிவிட்டேன். நாங்க அவளுக்கு மறைத்தது கொஞ்சம் கோவம் அதனால் தான் இரண்டு பேரையும் பயப்படுத்தி னாள்.''

''நான் உண்மையில் 'நன்றாகப் பயந்துவிட் டேன். விசயம் தெரிந்து உங்க அம்மா கண்டபடி அடித்து விட்டா என்று சொன்னாள். பயத்தில் நெஞ்சில் கொஞ்சம் நடுக்கம் கூடவந்துவிட்டது.''

அவனுடைய அன்பு அவள் உணர்வில் சிலிப்பை உண்டாக்கியது.

''ப்ரியா யாழ்ப்பாணம் போனாள் இன்னும் வரவில்லை. போய்த் தேடிப்பாாத்துக் கூட்டிவா. ஆமி செல் அடிக்கிறாங்கள். பயமா இருக்கு. சொன் னேன் கேட்காமல் போனாள்.''

அம்மா யாழ்ப்பாணத்துக்கு ஏன் போனாள்.

நான் கேட்கவும் இல்லை. அவள் சொல்லவும் இல்லை.

சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

பஸ் நிலையத்தில் இருவரும் நின்றிருந்தார்கள்.

''சைக்கிளில் போவோம் வாங்க!''

''நீபோ நாங்கள் பஸ்சில் வருகிறோம்''

''பஸ் இப்போதைக்கு புறப்படமாட்டாது. பஸ்சில் ஆட்கள் நிறைய ஏறிய பிறகுதான் எடுப்பான் இல்லாவிட்டால் அவனுக்கு நட்டம் தான் வரும்.''

''சாந்தா நீ சங்கருடன் போ நான் பஸ்ஸில் வருகிறேன்.''

''இல்லை ப்ரியா நீ போ யாராவது தெரிந்தவர்கள் பார்த்தால் பிரச்சினை வரும்.''

''இரண்டு பேரும் போகலாம் வாங்க''

''இரண்டு பேரும் ஏறினால்சங்கருக்கு சைக்கிள் மிதிக்க கஷ்டமாக இருக்கும்.''

''ம்ம்.,.. இப்பவே அவனுடைய உடம்பைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கி விட்டாயா?''

நமட்டுச் சிரிப்பு சிரித்தாள்

சிரிப்பை மறைப்பதற்குக் குனிந்து கொண்டாள் சாந்தா.

அவன் தலையைத் திருப்பிக் கொண்டான்.

''வாடி போவோம்''

சாந்தாவின் கையைப் பிடித்துக்கொண்டு பஸ் நிலையத்தை விட்டு தெருவில் நடந்தார்கள்.

''சங்கர் ஐஸ்கிறீம் வாங்கித் தருகிறாயா?'' ப்ரியா தான் கேட்டாள்.

சாந்தா அவளின் கையில் கிள்ளினாள்.

என்ன என்ற கேள்வியுடன் பார்த்தாள்.

''சங்கரிடம் காசு இருக்குமோ தெரியாது?''

''போடி! அவனிடமா காசு இருக்காது. வீட்டுக்குப் பொருள்கள் வாங்க அம்மா காசு கொடுத்தால் எல்லாப் பொருள்களுக்கும் கொஞ்சம் விலையைக் கூட்டிச் சொல்லி வெட்டி வைத்திருப்பான் எத்தனை நாள் நானே அவன் சட்டைப் பைக்குள் இருந்து களவெடுத்திருக்கேன்.''

''சங்கருக்குத் தெரியாதா? கேட்க மாட்டாரா?''

''தெரிந்தாலும் கேட்கமாட்டான். கேட்டால் அம்மாவிடம் காசு வெட்டியது தெரிந்து போகும்.''

''நீ சுத்த மோசம் ப்ரியா பிச்சை எடுத்தாராம் பெருமாள் தட்டிப் பறிச்சாராம் அனுமார்.''

''நான் காசு கேட்டால் நூறு கேள்வி கேட்பா அம்மா நான் என்ன செய்கிறது? சங்கரின் சட்டப் பைதான் தஞ்சம்.''

மூவரும் ஐஸ்கிறீம் கடைக்குள் புகுந்து வாயைத் துடைத்துக் கொண்டு சைக்கிளில் ஏறினார்கள் சாந்தா பின்னுக்கும் ப்ரியா முன்னுக்கும் ஏறியதும் வேகமாகச் சைக்கிளை மிதித்தான். வேகமாக இருட்டிக் கொண்டு வந்தது. சாந்தாவை அவள் வீட்டின் முன் இறக்கி விட்டு ப்ரியாவுடன் வீட்டுக்கு வந்தான்.

''ஏன்டி இவ்வளவு நேரம்!'' தாய் சிடுசிடுத் தாள்

''அம்மா பஸ் கிடைக்காமல் நின்றாள். சைக் கிளில் வரும்போது காற்றுப் போய்விட்டது இடை வழியில். ஓட்டிக்கொண்டு வர நேரமாகிவிட்டது.''

எவ்வளவு பொருத்தமாகப் பொய் சொல் கிறான்.

''காதலிக்கத் தொடங்கி விட்டதால் பொருத் தமாகப் பொய்யும் சொல்லத் தொடங்கி விட்டாய். ஒருநாள் அம்மாவிடம் பிடிபடப் போகிறாய்.''

''நீ சொல்லாமல் இருந்தால் போதும்; அம்மா வைச் சமாளிக்க எனக்குத் தெரியும். சாந்தா சொல்லாவிட்டால் எங்கள் விசயம் எப்படி உனக்குத் தெரிந்திருக்கும்.''

''நேற்றிரவு வீட்டில் ரீ.வியில் படம் போட்டுப் பார்த்தோம் நல்ல படம்; அதில் வந்த ஒரு நடிகை ரொம்ப அழகா இருந்தாள் உன்னைப்போல்.''

''பொய் சொல்லாதே.''

''ஏன்டி பொய் சொல்கிறேன் பொய் சொன் னால் பணமா தரப்போகிறாய்? அந்த நடிகையைப் பார்த்தபோது பட்டென்று உன் ஞாபகம் வந்தது.''

''தாமரைப் பூப்போல் அழகான கன்னம் என்ற படி அவள் கன்னத்தைத் தொட்டாள்.''

''சீ போடி'' கையைத் தட்டி விட்டாள்.

''ஏன் நான் தொட்டால் என் கறுப்பு உன்னில் ஒட்டிக் கொள்ளுமா?''

''ப்ரியா!'' அதிர்ச்சியுடன் அவள் கையைப் பிடித்துக் கொண்டாள். ''ஏன் இப்படி எல்லாம் பேசுகிறாய். உன்மனம் நோகும்படி நான் எப்பவாவது நடந்திருக்கிறேனா! அப்படி எப்பவாவது நடந்திருந்தால் என்னை மன்னிச்சிடு ப்ரியா. ஆனால் இப்படிஎல்லாம் பேசி நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டாதே. என்னால் தாங்கவே முடியாது.''

கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''ஏன்டி அழுகிறாய்; எடுத்ததற்கெல்லாம். ஒரு விளையாட்டுக்குத்தானே சொன்னேன்.''

''விளையாட்டுக்குக் கூட அப்படிச் சொல்லாதே!'' ''உன்னை என் சிநேகிதியா நினைத்துப் பழகவில்லை ஒரு சகோதரியாகத் தான் நினைக்கிறேன்.''

உணர்ச்சி வசப்பட்டாள். அவளின் கடைசிவரியால் ஆதரவோடு அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''நிறத்தில் எதுவும் இல்லை ப்ரியா. நல்லமனம் இருக்க வேண்டும். உன் நிறத்தைப் பார்த்தா உன்னோடு பழகினேன். உன் மனம் எவ்வளவு

அழகானது. அது உனக்குத் தெரியாது. உன்னுடன் பழகுகின்ற மற்றவர்களுக்குத் தான் தெரியும் அழகான மனதில் இருந்து தான் நல்ல எண்ணங்கள் பிறக்கும் கறுப்பான பெண்கள் எல்லாம் திருமணமே முடிக்கவில்லையா? காதலிக்கவில்லையா? உன் அம்மா என் அம்மா எல்லாம் கறுப்புத்தானே அவர்கள். கல்யாணம் முடிக்கவில்லையா எங்களைப் பெறவில்லையா? கறுப்புப் பெண்களை ஆண்கள் காதலிப்பதில்லையா? மனம் இரண்டு ஒன்றை ஒன்று விரும்பிவிட்டால் நிறம் குறுக்ககே நிற்கவே முடியாது.

''ப்ரியா ஓர் இளவரசன் தன் இளமையைக் கொடுத்துவிட்டுத் தந்தையிடம் இருந்து முதுமையைப் பெற்றுக் கொண்டானாம் தகப்பன் மேல் உள்ள அன்பினால். எனக்கும் சக்தி இருந்தால் என் நிறத்தை மகிழ்ச்சியோடு உனக்குத் தந்துவிட்டு உன் நிறத்தை மகிழ்ச்சியோடு வாங்கிக் கொள்வேன்.

''சாந்தா!''

''கறுப்பு என்று ஏன் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கிறாய்; எல்லாத்துக்கும் மனம் தான் காரணம். மனதை ஒழுங்காக வைத்துக் கொண்டால் துன்பத்தில் பாதி குறைந்துவிடும். நீ கறுப்பே இல்லை ப்ரியா பொதுநிறம் கறுப்பென்றால் ஆபிரிக்க நீக்ரோ மக்கள் தான் கறுப்பு. நீ எவ்வளவு முகலட்சணமாய் இருக்கிறாய்! புகழ்ச்சிக்காக நான் சொல்கிறேன் என்று நினைக்காதே உண்மையில் உன்முகத்தில் வசீகரம் இருக்கு ப்ரியா.

நீ சொன்னாயே நேற்றுப் பார்த்த படத்தில் வந்த நடிகையைப் பற்றி, அவள் கூடக் கறுப்பாக இருக்கலாம் மேக்கப்பால் மாற்றி விடுவார்கள் எல்லாம் போலி வாழ்க்கை யதார்த்தமாக பார்க்கப் பழகிக் கொள்''

வீட்டை நோட்டம் விட்டாள். சங்கர் இல்லை உறுதிப்படுத்திக் கொண்டு அவள் அறைக்குள் நுழைந்துமேசை இழுப்பறையை ஆராய்ந்தாள். உம் அகப்பட வில்லை அடுத்த இழுப்பறை சுத்தமாக இல்லை ஏமாற்றத்துடன் மூடினாள் அவன் சட்டைப்பையை ஆராய்ந்தவள் தன்னை யாரோ கவனிக்கிறார்கள் என்ற உணர்வு உறுத்தவே வாசலை நோக்கித் திரும்பினாள். சங்கர் நிலையில் சாய்ந்தபடி மெல்லிய சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான்.

''பலநாள் கள்ளன் ஒருநாள் பிடிபடுவான்'' என்று சொல்லியபடி அவள் அருகே வந்தவன் சட்டைப் பைக்குள் இருந்து ஐம்பது ரூபா தாளை அவளிடம் நீட்டினான்.

வேண்டாம் என்று சொல்லிவிட்டு போக எத்தனித்தவளை குறுக்கே கையை நீட்டித்தடுத்தான்.

''நீ தேவை இல்லாமல் செலவழிக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும் வைத்துக் கொள்.''

''உங்க இரண்டு பேருடைய விசயத்தையும் அம்மாவிடம் சொல்லக் கூடாது என்பதற்கு லஞ்சமா?''

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்.''

வாங்கிக் கொண்டாள்.

''அம்மாவுக்கு விசயம் தெரியுமா?''

''நான் சொல்லவில்லை.''

''அம்மாவுக்குத் தெரிந்தால் சம்மதிப்பாவா?''

''தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் சாந்தாவை நீ கல்யாணம் முடிக்கிறது சந்தோசம்தான். அவளைப் போல் ஒருத்தி தான் உனக்குப் பொருத்தமாய் இருக்கும். நீயும் ரொம்ப அமைதியானவன். அவளும் பயந்த சுபாவம் உள்ளவள். ஒரு முரடன் அவளுக்குக் கணவனாக வந்தால் வாழ்கைமுழுவதும் நரகம் தான். ஒரு வாய்க்காரி உனக்கு வாய்த்தால் உன் வாழ்க்கை முழுவதும் அமைதி இராது.''

''சாந்தாவின் குடும்ப நிலைமை எப்படி?''

''பெரிதாய் சொல்ல முடியாது எங்களிலும் பார்க்க வசதி குறைவுதான். குடும்பப் பின்னணி எங்க குடும்ப பின்னணி தான் அதில் உனக்குப் பிரச்சினை வராது. நான் ரியூசனுக்கு போகிறேன். அவளால் போகமுடியாமல் அல்ல. ஏனோ ரியூசனுக்கு போகமாட்டேன் என்று சொன்னாள் அது தான் இங்கே கூட்டி வந்தேன் உன்னிடம் பாடம் கேட்க''

''ப்ரியா கொஞ்சம் ஆழமாக விபரங்களை அறிய முயற்சி செய்!''

''ஏன்?''

''சாந்தாவுக்கு ஏதோ பிரச்சனை இருக்கு?''

''என்ன பிரச்சனை ?''

''பல தடவை கேட்டேன். எதுவுமே சொல்லாமல் மறைக்கிறாள். கொஞ்சம் வற்புறுத்திக் கேட்டால் முகம் வாடிப் போய் மௌனமாக இருக்கிறாள்.''

''நீ என்ன கேட்டாய்?''

''திருமணத்துக்கு உங்க வீட்டில் சம்மதிப்பார்களா என்று கேட்டேன்? பதிலே சொல்லாமல் இருந்தாள். திரும்பத் திரும்பக் கேட்டேன் கண் கலங்கினாள் பேசாமல் விட்டுவிட்டேன்.''

''ஏதோ பிரச்சனை இருக்கு இல்லாவிட்டால் திருமணத்தைப் பற்றிக் கேட்டால் மற்றப்பெண்கள் சந்தோசப்படத்தான் செய்வார்கள் இவள் ஏன் கண்கலங்க வேண்டும்?''

''நானும் அவளைக் கவனித்திருக்கிறேன் பள்ளிக்கூடம் வந்தால் சில நாட்கள் முகம் வாட்டமாய் இருப்பாள். ஆழமாய் யோசித்துக் கொண்டிருப்பாள் கேட்டால் மனம் சரி இல்லை என்று சொல்லுவாள். நான் காரணம் கேட்கவில்லை.''

''பள்ளிக்கூடத்திலும் பார்க்க எங்க வீட்டில் இருக்கும்போது கொஞ்சநேரம் என்றாலும் ரொம்ப சந்தோசமாய் இருப்பாள். மலர்ந்த முகத்துடன் கலகலப்பாய் இருப்பாள். தன் வீட்டுக்குப் போக

ஆர்வம் காட்டமாட்டாள். நேரமாகிவிட்டது போ என்று சொன்ன பிறகுதான் போவாள். நீ பாடம் முடித்து விட்டுப் போன பிறகும் என்கூட இருந்து கதைப்பாள் எத்தனையோ நாள் சைக்கிளில் கூட்டிக் கொண்டுபோய் வீட்டில்விட்டு வந்திருக்கிறேன். எனக்கென்றால் பொழுது படமுன் வீட்டுக்குவர வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். அவளுக்கு அந்த எண்ணம் இல்லாமல் இருப்பாள். எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது நீ சொன்ன மாதிரி அவள் வீட்டில் ஏதோ பிரச்சினை இருக்கு. என்ன இருந்தாலும் அவள் உன்னை உயிராகவே நேசிக்கிறாள். அது மட்டும் உண்மை. நான் கேட்பதிலும் பார்க்க நீயே கேள். உனக்குக் கட்டாயம் சொல்வாள். நீ ஒன்றும் யோசிக்காதே. அம்மா நீ அவளைக் கல்யாணம் முடிக்கச் சம்மதிப்பா. பிரச்சனை என்வடிவில் வந்தால் நான் உன்பக்கம் இருந்து உனக்கு ஆதரவாகப் பேசுகிறேன். அவள் சொல்லத் தயங்கினால் உன்னையே கல்யாணம் செய்கிறேன் என்று அவள்மேல் சத்தியம் செய்து பிரச்சினை என்னவென்று தெரிந்துகொள். பின்னாடி கவலைப் படக்கூடாது. இன்று பின்னேரம் வருவாள் கட்டாயம் கேள்.''

''நான் கேட்கிறேன் நீயும் அவள் மனதை நோகாமல் மெல்லத் தெரிந்து கொள்ள முயற்சி செய்.''

''**சா**ந்தா இன்றைக்காவது மனம் விட்டு பேசுவீங்க என்று நம்புகிறேன். நான் உங்களை முழுமை

யாக விரும்புகிறேன் உங்க மனதில் சிறு சந்தேகம் கூட இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதுபோல் நீங்களும் என்னை விரும்புவதாகச் சொன்னால் மனதில் குழப்பம் இருக்காது இல்லையா?''

''சங்கர்! எனக்கென்று ஒரு வாழ்க்கை இருந்தால் அது உங்களோடு மட்டும்தான் உணர்வு பூர்வமாக இருக்கும். உங்களை என் உயிராகவே நினைக்கின்றேன். கல்யாணம் முடிக்காமல் உள்ளத்தில் உங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இப்படிச் சொல்ல நான் வெட்கப்படவில்லை. உண்மையாக அன்பு செலுத்துபவர்களிடம் உண்மையை மறைக்க என்மனம் விரும்பாததால் சொல்கிறேன்.''

''அப்படி என்றால் கல்யாணம் முடிக்க சம்மதிப்பீங்க தானே.''

''சங்கர் எனக்குக் கொஞ்சம் அவகாசம் தாங்க.''

''ஏன் சீதனப் பிரச்சனை வரும் என்று யோசிக்கிறீங்களா?''

''நீங்க சீதனத்தை எதிர்பார்க்கிறீங்களா?''

''வேண்டாம் என்று சொல்ல மாட்டேன் இல்லை என்றால் கேட்க்கவும் மாட்டேன்.''

''இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள் அப்போது சம்மதிப்பீங்களா?''

''நிச்சயமாக ஒரு சீதனமும் வேண்டாம் நீங்க போட்டிருக்கும் உடுப்பைக்கூட வீட்டில் விட்டு நான் வாங்கித்தரும் சேலையை உடுத்திக்கொண்டு வாங்க மகிழ்ச்சியோடு கையைப் பிடித்துக் கூட்டி வந்து விடுகிறேன். என்மனம் உங்களை விரும்பத் தொடங்கிய போது சீதனத்தை மனதில் வைத்து நேசிக்கவில்லை. அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்க.''

''நீங்க என்மேல் வைதிருக்கிற அன்பு எனக்குத் தெரியும். சொன்னபடியே செய்வீர்கள் என்றும் தெரியும். ஆனால் உங்க வீட்டில் பிரச்சனை வராதா?''

''இல்லை நிச்சயமாக வராது.''

''நகைகள் இல்லாவிட்டாலும் கூடவா?''

உங்களுக்குத் தேவையான ஆசைப்படுகின்ற நகைகளை எல்லாம் நானே செய்து போடுகிறேன் போதுமா?''

''சங்கர்!''

உணர்ச்சி பொங்க அவனைப் பார்த்தாள். கண்ணீரை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. எழுந்து அவள் அருகே வந்தவன் அவள் தலையைப் பரிவுடன் தன்னோடு அணைத்துக் கண்ணீரைத் துடைத்தான். அதிகநாள் அவகாசம் எடுக்க வேண்டாம் சாந்தா! முடிந்தவரையில் விரைவாகச் சொல்லுங்கள். மனதுக்கு அமைதியாக இருக்கும்.''

''முயற்சிக்கிறேன் சங்கர்!''

''பணம் தேவை என்றால் என்னிடம் கேளுங்கள் தருகிறேன்.''

''நான் கேட்காமலேயே பல நாட்கள் தந்திருக்கிறீர்கள். எனக்கு அப்படி பெரிய செலவு ஒன்றும் இல்லை. தேவை என்றால் உங்களிடம் கேட்ப்பேன் வேறு யாரிடம் நான் கேட்கமுடியும் மனம்விட்டு.''

''சங்கர் நீ சொன்னது சரிதான் சாந்தா வீட்டில் பிரச்சினை இருக்கிறதுதான் அதுவும் சிக்கலான பிரச்சினை.''

''என்ன பிரச்சினை?''

''சாந்தாவின் அம்மாவுக்குத் தமையன் இருக்கிறார். அது தான் மாமா. அவர் சாந்தாவின் குடும்பத்துக்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறார். மூத்த அண்ணனுக்கு கொழும்பில் வேலை எடுத்துக் கொடுத்திருக்கிறார். அடுத்த அண்ணனைக் கனடாவுக்கு அனுப்பி இருக்கிறார். மூத்த அக்காவுக்கு அவர் தான் தன்செலவில் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார். அடுத்த அக்காவுக்கும் அவர் தான் திருமணம் பேசி முடிவு செய்திருக்கிறார். அதுவும் விரைவில் நடக்கப்போகுது. இதற்குப் பதிலாக அவருடைய மகனுக்கு சாந்தாவைக் கல்யாணம் முடிச்சு வைக்க வேண்டுமாம். இரண்டாவது அக்காவை மாமா மகனுக்குத் திருமணம் செய்ய அவள் வீட்டில் விரும்பினார்கள். ஆனால் மாமா வேண்டாம் சாந்தா தான் தனக்கு மருமகளாக வரவேண்டுமாம். மற்ற எல்லோரிலும் பார்க்க.

சாந்தா நல்ல நிறமும் அழகும். அவள் தான் தன் மகனுக்குப் பொருத்தம் என்று சொல்கிறார் மாமா. இவ்வளவுக்கும் மாமாவின் ஒரே மகன் குடிகாரனாம். ஒவ்வொரு நாளும் குடிப்பானாம் கண் மண் தெரியாமல். சாந்தாவின் தாய்க்கும் விருப்பமில்லைத்தான். ஆனால் தமயன் தன் குடும்பத்துக்கு செய்த உதவியினால் மறுத்துச் சொல்ல முடியாமல் இருக்கிறாங்க.''

''கொழும்பில் இருந்து அடிக்கடி மாமாவின் கடிதம் வருமாம் சாந்தாவை கொழும்புக்கு அனுப்பச் சொல்லி. அவள் படிப்புச் செலவுக்கு பணமும் அனுப்புவாராம். இவள் அந்தப் பணத்தைத் தொடவே மாட்டாள். மாமா அனுப்பும் பணத்தில் ரியூசனுக்குப் போகவோ கொப்பிகள் வாங்கவோ வேறு செலவுகளுக்கோ பயன்படுத்த மாட்டாள். இது மட்டும் இல்லை தாயும் அடிக்கடி மாமா தான் எங்க குடும்பத்துக்கு உதவி செய்தவர். மாமா தான் எங்க குடும்பத்தை தூக்கி விட்டவர். மாமா இல்லாவிட்டால் எங்க குடும்பம் தலை நிமிர்ந்து இருக்கவே முடியாது. நன்றி மறக்கக் கூடாது. இப்படிச் சொல்லி சொல்லி திருமணத்துக்கு சம்மதிக்கும்படி சொல்லுவார்.

தாய் சொல்வதில் உண்மை இருந்ததினால் இவளால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை எதிர்த்துப் பேசவும் முடியவில்லை.

தாய் தகப்பன் சகோதரங்கள் எல்லோரும் கடிதங்கள் மூலமும் நேரடியாகவும் வற்புறுத்துவதால்

இவளால் திருமணத்துக்கு எதிர்ப்பு சொல்ல முடியாமல், படித்து முடிந்த பிறகு பார்ப்போம் என்று சொல்லி இருக்கிறாள். இந்தப் பிரச்சினை வருவதற்கு முன்பே அவள் மனதை உன்னிடம் விட்டு விட்டாள். பாவம் சாந்தா என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கிறாள். எந்தப் பெண்ணும் அவள் நிலையில் இருந்தால் முடிவு எடுக்கிறது கஷ்டம் தான். இனி அவளை வற்புறுத்தாதே சங்கர். இங்கே இருக்கின்ற கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியாக இருக்கட்டும்.''

ஹெலிகொப்டரில் இருந்து சராமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகமும் கிறனைற் தாக்குதலும் நடந்து கொண்டிருந்தது. வீதியில் மக்கள் நடமாட்டமே இல்லை வீதிச் சுவர்களிலும் வேலிகளிலும் சைக்கிள்கள் சாத்தி பூட்டப்பட்டிருந்தன. சிலவீதிகளில் அனாதரவாக அங்கும் இங்குமாக விழுந்து கிடந்தன. சங்கரும் தெருவில் விழுந்து படுத்துவிட்டு ஹெலிகொப்டர் சென்ற பிறகு எழுந்து சைக்கிளை மிதித்தான். ஓரிடத்தில் மக்கள் கூட்டமாக நின்றிருந்தார்கள். மறுபடி ஹெலிகொப்டர் வர எல்லோரும் சிதறி ஓடினார்கள் பாதுகாப்புத் தேடி வீடுகளினுள்ளே.

''சங்கர்!''

''ப்ரியாவின் குரலாக இருக்கிறதே என்று சத்தம்வந்த திசையைப்பார்த்தவன். நிலத்தில் சாந்தா

இருப்பதைக்கண்டு அவசரமாக அவ்விடத்துக்கு விரைந்தான். வேறும் ஏழு எட்டுப்பேர்கள் காயப் பட்டிருந்தார்கள். எல்லோரும் மற்றவர்களின் உத வியுடன் பக்கங்களில் உள்ள வீடுகளுக்குள் கொண்டு செல்லப்பட்டார்கள்.

''சங்கர்! சாந்தாவுக்கு காலில் காயம் பட்டு விட்டது.'' சொல்லும்போதே அழுதுவிட்டாள் ப்ரியா. சைக்கிளை அவளிடம் கொடுத்து வீட்டுக் குள்ளே வைத்துப் பூட்டும்படி சொல்லிவிட்டு சாந் தாவின் பக்கம் திரும்பியவன் அவள் காலில் இருந்து ரத்தம் ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டு அவளால் நடக்க முடியாது என்பதை ஒரு நொடிப்பொழுதில் புரிந்துகொண்டு அவசரமாக அவளைத் தூக்கி கை களில் ஏந்தியபடி வீட்டுக்குள் வேகமாகப் போனான். கெலிகொப்டர் வட்டமிட்டு சரமாரியாகச் சுட்டுக் கொண்டே இருந்தது.

அந்த வீட்டுக்காரரிடம் கேட்டு பழம் துணி வாங்கிக் காயத்தில் கட்டுப் போட்டான் அப்பவும் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

கெலிகொப்டர் சென்று விட்டது.

காயப்பட்டவர்களை ஏற்றிச் செல்ல மற்றவர் கள் செஞ்சிலுவை வாகனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். வீதிக்கு வந்த சங்கர் தெரு வில் போன ஓட்டோவை கைதட்டி நிறுத்தி ப்ரியாவை ஏறச் சொன்னான். சாந்தாவை கையில்

ஏந்திக்கொண்டு வந்து ஓட்டோவில் ஏற்றி யாழ்ப் பாணம் அரச பொது மருத்துவமனைக்கு விரைந் தான். ரத்தப்பெருக்கினால் சாந்தா சோர்ந்துபோய் அவன் மேல் சாய்ந்து கொண்டாள் அவளை ஆதர வாகப் பிடித்துக் கொண்டான்.

மருத்துவமனைக்குள் அவளைத் தூக்கிச்சென்ற போது நர்சுகளும் டாக்டரும் அவனுக்கு நிறைய உதவினார்கள். மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற சாந்தா விரும்பவில்லை டாக்டரும் வீட்டுக்குப் போக விரும்பினால் போங்க என்று சொன்னதினால் அதே ஓட்டோவில்ஏறி சாந்தாவை அவள் வீட்டில் ப்ரியாவின் உதவியுடன் இறக்கிவிட்டு சைக்கிள் விட்ட வீட்டுக்கு அதே ஓட்டோவில் வந் தான், ஓட்டோ வாடகையை கொடுத்தவன் சைக்கி ளில் வீடுவந்து சேர்ந்தான்.

**"வா** ப்ரியா!''

''சாந்தா எப்படி இருக்கிறாள் அன்ரி.''

''உள்ளே தான் இருக்கிறாள்.''

''என்னடி நடக்க முடியுமா?''

''ப்ரியா என்ன இதுவெல்லாம் நிறைய செல வாகி இருக்குமே'' கோர்லிக்ஸ்சுடனும் ஒரு கூடை நிறைய தோடம்பழத்துடனும் வந்திருந்தாள்.

''நானா வாங்கினேன் அவ்வளவு காசு என்னி டம் இல்லை சங்கர் தான் வாங்கித் தந்து உன்னைப் போய் பார்த்து வரச் சொன்னான்''

''ரத்தத்தைப் பார்த்தாலே தலையைச் சுற்றும் என்று சொல்லுவான். எப்படி உன் காலில் இருந்து ரத்தத்தைப் பார்த்த பின்பும் தைரியமாக உன்னைத் தூக்கி வந்தான்.'' ''சாந்தா நீ எத்தனை கிலோ எடை.''

''தெரியவில்லை ஏன்?''

''இல்லை தலையணையைத் தூக்கிக் கொண்டு வருவதுபோல் உன்னைத் தூக்கி வந்தான் அதுதான் கேட்டேன்.'' கேலியாகச் சிரித்தாள்.

சாந்தாவுக்கும் வெட்கத்துடன் கலந்து சிரிப்பு வந்தது.

''ஆபத்தான நேரத்தில் ஒரு பலம் வந்துவிடும். சங்கருக்கும் அப்படித்தான் வந்திருக்க வேண்டும்.''

''சப்பைக் கட்டு கட்டாதே. இதுதான் தரணம். உன்னைத் தொடுவதற்கென்று தூக்கிவிட்டான்.''

''என்னடி சிரிக்கிறாய்''

''அந்த நேரத்தில் என்னால் ஒன்றுமே செய்ய முடியாமல் கைகளைப் பிசைந்து கொண்டு இருக்க எவ்வளவு தைரியமாகவும் வேகமாகவும் செயல்பட்டான். ஆணுக்குப் பெண் சரிசமன் என்று காட்டுக்கத்து கத்தினாலும் ஆண்பிள்ளை ஆண்பிள்ளை தாண்டி. ஆணுக்குப் பெண் சமனாய் வரவே முடியாது.''

''ப்ரியா! ஒட்டோவில் மருத்துவமனைக்குக் கூட்டிக் கொண்டு போனது திரும்பி வந்தது என்று

நிறைய செலவாகி இருக்கும் அது போதாதென்று இவைகளை வேறு கொண்டு வந்திருக்கிறாய். சங்கர் பாவம் எவ்வளவு செலவாகியது என்று சொல்லேன் அம்மாவிடம் வாங்கித் தருகிறேன்.''

''ஏன்டி அவன் உன்னைத் தொட்டுத் தூக்க மட்டும் விடு. ஆனால் அவன் செய்த உதவிகளையும் வாங்கித் தந்தவைகளையும் மட்டும் விலை பேசுகிறாயா? இதைப் போய் அவனிடம் சொன்னால் மனம் துடித்துப் போவாண்டி; அவன் உன்மேல் எவ்வளவு அன்பும் ஆசையும் வைத்திருக்கிறான். இதை ஏன் நீ புரிந்து கொள்ளமாட்டேன் என்கிறாய்.''

''ப்ரியா! நான் சங்கரின் அன்பையோ ஆசையையோ குறைத்து நினைக்கவில்லை. சங்கர் உழைத்தால் மறுக்காமல் வாங்கலாம். அவர் பணத்துக்கு எங்கே போவார். உன் அம்மாவிடம் தானே வாங்க வேண்டும்.''

''அதைப்பற்றி நீ கவலைப்படாதே அவன்பாடு அம்மா பாடு. அவன் கேட்டால் அம்மா ஏன் என்று கேட்காமலே கொடுப்பா. அவசியமில்லாமல் செலவழிக்கமாட்டான் என்று அம்மாவுக்குத் தெரியும்; சுகம் வந்தவுடன் வீட்டுக்கு வாடி உன்னைப் பார்க்க ஆசையோடு இருப்பான்.''

''**வா**டி மச்சாள்!''

''அன்ரி வீட்டில் இல்லையா?''

''இருந்தால் இப்படி அழைப்பேனா? உதை தான் விழும்;

வா சாந்தா! இன்னும் இரண்டுநாள் ஓய்வு எடுத்திருக்கலாமே.''

''உண்மையாகவா சொல்கிறாய் பைத்தியம் பிடித்த மாதிரி குறுக்கும் மறுக்கும் நடந்து கொண்டிருந்தாய் அவள்வராமல். அவளுக்கும் கண்ணெல்லாம் பூத்திருக்கும் ஐந்துநாள் உன்னைக் காணாமல் ஓடிவந்திருக்கிறாள்.''

''போயிருந்து இரண்டு பேரும் அலட்டுங்க'' தப்பு தப்பு அவள் பாடம் படிக்க நீ சொல்லிக்கொடு அவன் சொல்லித்தந்து நீ படித்துப் பாஸ் செய்து டாக்டராகி.....''

''என்னடி சிரிக்கிறாய்?''

''பாடம் படிக்கிற முகத்தைப் பார்''

''நான் ஒரு பைத்தியம் இரண்டு பூனைகளுக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டு....''

சமையல் அறைக்குள் சென்றாள்.

..............................

என்ன? என்ன? நான் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் போகக்கூடாதே...........''

''இல்லைப் ப்ரியா சாந்தாவின் கண்ணுக்குள் தூசி விழுந்து விட்டது. அது தான்.........''

கண்ணுக்குள் ஊதிவிட்டாயா?

தெரியுமே உன்னைப் பற்றி

கண்ணுக்குள் ஊதினாயா? காதுக்குள் ஓதினாயா? ''காதல் வேதம்''

சாந்தாவின் கண்கள் சிவந்திருப்பதைக் கண்டாள். ''ஏன்டி என்னைக் கூப்பிட்டிருக்கலாமே?''

''உனக்கேன் சிரமம் என்று. . . .''

''அவனை ஊதச் சொன்னாயா? எனக்குச் சிரமம் என்பதற்காக இல்லை இதே சாக்கில் அவனைப் பக்கத்தில் பார்க்கலாம் என்று தான்.''

சாந்தா மேசையில் தலையைக் குனித்துக் கொண்டாள்.

''சங்கர் இப்பவே ஏன் காக்காய் பிடிக்கிறாய்! கல்யாணம் நடந்தால் காலைப் பிடிப்பாய் போலிருக்கே.''

''காலை அன்றைக்கே பிடித்தாச்சு.''

''அப்படியா? அப்போஇன்றைக்கு கன்னத்தைப் பிடித்தாயா?''

''ப்ரியா இப்ப என்ன நடந்து விட்டதென்று கத்துகிறாய்!''

''கத்துகிறேனா அப்படித்தான் உனக்குத் தெரியும்'' ''நான் சமயத்தில் வராவிட்டால் இன்னுமொரு முறை என்று கண்ணுக்குள் ஊதிவிட்டு கன்னத்தில் கொஞ்சி இருப்பாய். அவளும் சந்தோசத்தில் தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் இருப்பாள். நான் வருகிறேனா என்று கடைக்

கண்ணால் பார்த்துவிட்டு பிறகும்அவளைக் கொஞ்சு வாய். உன்னை எனக்குத் தெரியாதா?''

''சரி சரி வெட்கப்பட்டது போதும் கோப்பி யைக்குடி ஆறிடப் போவுது.'' ''ஏற்கனவே அவன் கண்ணுக்குள் ஊதி சூடாக்கி இருப்பான். இதையும் ஆறவிடாமல் குடி.''

''பரீட்சையை நல்லா எழுதி இருக்கிறாயாடி''

''ஏதோ எழுதி இருக்கிறேன் வருவது வரட் டும்!''

''இனி என்ன செய்யப் போகிறாய் வீட்டில் இருந்தால் போர் அடிக்குமே.''

''தையல் பழகலாம் என்று நினைக்கிறேன் இனி எனக்குப் படிக்க விருப்பமில்லை.''

''பக்கத்து வீட்டில் தையல் பழகும் இடம் இருக்கு. இரண்டு பேரும் போய்ப் பழகுவோம்.''

''ஒவ்வொரு நாளும் வீட்டுக்கு வாயேன்! தை யலும் பழகலாம் எனக்கும் பொழுது போகும் சங் கரையும் பார்த்த மாதிரி இருக்கும்.''

''அம்மா வெளியில் அனுப்ப சம்மதிப்பாவோ தெரியவில்லை.''

''சம்மதிக்காவிட்டால் கதைப்புத்தகம் வாங்கப் போவதாகச் சொல்லிவிட்டு வாயேன்.''

''கள்ள மூளையை நீயே சொல்லித் தாராயா?''

''ஏன் உனக்குக் கள்ளமூளை இல்லை என்று சொல்கிறாயா?''

''நான் இல்லை என்று சொல்லவில்லையே. கதையை வளர்க்காதே அடிக்கடி வருகிறேன்.''

''வெற்றிகரமான பின்வாங்கல்.''

''நீஎங்கே தாக்குவாய் என்று எனக்குத்தெரியும்

''நழுவப் பார்க்கிறாயா?''

''இல்லை சரணமே அடைகிறேன்.''

''பேச்சில் என்னை நீ வெல்ல முடியாது.''

''ஒப்புக் கொள்கிறேன் ஆனால். . . .''

''ஆனால். . . .''

''வேண்டாம் விடு''

''இல்லைச் சொல்லு.''

''பேச்சில் நான் மட்டும் வெல்ல வேண்டும் என்று நினைக்கக்கூடாது. அதுசில நல்ல காரியங்கள் நடப்பதைத் தடுத்து விடலாம்; மறுபக்கத்தில் நிற்பவர் வெல்லட்டும் என்று விட்டு விடுவதும் வாழ்க்கையில் சில வெற்றிகளை எங்களுக்குத் தரலாம்; விட்டுக் கொடுப்பதிலும் ஒருசுகம், ஆனந்தம் இருக்கு ப்ரியா!''

''நீ எதைச் சொல்ல வருகிறாய் என்று எனக்குப் புரியுது. உன் மனநிலை போல் என் மனநிலை இல்லை உன் சுபாவமும் எனக்கில்லை. சங்கர் உன்னை நேசிப்பதற்கு உன்னிடமுள்ள நல்ல சுபாவங்கள் தான் காரணம் என்பது எனக்கு விளங்குது.

''என்ன சத்தம் கேட்குது?''

''இந்தியன் ஆமியின் வாகனங்கள் போகுது.''

''அவர்கள் ஓரிடத்தில் இருக்காமல் ஏன் ஓடிக் கொண்டு திரியிறாங்கள்.''

''சண்டையை நிறுத்த வந்திருக்கிறதாகச் சொன்னார்கள். பேப்பரைப் பார்த்தால் புலிகளுக் கும் இந்தியன் ஆமிக்கும் இடையே பிரச்சினை வலுத்துக் கொண்டு வருகுது.''

என்னவோ அமைதிப்படை என்று சொல்லித் தான் வந்திருக்கிறான். இரண்டு நாடுகளுக்கிடையே சண்டையில் பயன்படுத்துகின்ற பீரங்கிகளை ஏன் கொண்டு வந்திருக்கிறான். சிங்கள ஆமியுடன் சண்டை பிடிக்கவா?

''என்னவோ ஒப்பந்தம் செய்துவிட்டுத் தானே வந்திருக்கிறான். தன்னுடைய படைகளுடன் சண் டைபோடச் சிங்கள அரசு இந்தியன் ஆமியைக் கூப்பிட்டு இருக்குமே?''

''எல்லாம் அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்தும் விளையாட்டுத்தான். இது எங்கே போய் முடியப்போகிறதோ கடவுளுக்குத்தான் தெரியும்!''

''ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்''

''என்ன?''

''விடுதலைப் புலிகளை இந்தியாக்காரன் முட் டாள்கள் என்று நினைத்தால் இந்தியாக்காரனை முட்டாளாக்கி விடுவார்கள் புலிகள்.''

''ப்ரியா எனக்கென்னவோ பயமாக இருக்கு கொஞ்ச நாளாக இரவில் கெட்ட கனவெல்லாம் வருகுது.'' ''பயத்தினால் நடுச்சாமத்தில் கத்துகி

றேன் அம்மா வந்து பக்கத்தில் படுத்துக்கொள்கிறா. இரவில் நாய்கள் எல்லாம் ஊளை இடுகுதுகள்; சுடலைக்குருவிகள் நடுச்சாமத்தில் கத்துதுகள் முருகனை நினைத்துக் கந்தசஷ்டிக் கவசத்தை சொல்லிக் கொண்டு படுப்பதால் பயம் கொஞ்சம் குறைவாக இருக்கு.''

''நாங்கள் பயப்படுவதினால் நடக்கிறதைத் தடுக்க முடியுமே. துன்பப்பட வேண்டும் என்றுபலன் இருந்தால் துன்பப்படத்தான் வேண்டும். ஆனால் யாருக்கும் துன்பம் செய்துவிட்டு தப்பிவிடலாம் என்று நினைக்கக் கூடாது. மேலேஇருந்து இறைவன் பார்த்துக் கொண்டிருப்பான்; ஒருநாள் தீர்ப்பு வழங்குவான். அப்பதான் முன்பு செய்த பாவத்துக் கான தண்டனை என்று நினைப்பு வரும்.

உடுப்புகளைக் கிணற்றடியில் போட்டுவிட்டு வந்தேன் அலம்பவேண்டும். கடவுள் விரும்பினால் நாளைக்குச் சந்திப்போம்.''

**வி**டுதலைப் புலிகளுக்கும் இந்தியன் ஆமிக்கும் இடையே போர் தொடங்கி விட்டது. மக்கள் மத்தியில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. என்ன நடக்கப்போகிறது என்று புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறினார்கள். மாலை வானொலிச் செய்தியில் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருப்பதாக ஒலிபரப்பியது. இந்தியன் ஆமி புலிகளுடன் சண்டை பிடிப்பதற்காகச்

சிங்கள அரசாங்கம் வானொலி மூலம் ஊரடங்குச் சட்டத்தைப் போட்டது. சிங்கள ஆமி தங்கள் முகாம்களில் வானொலியையும் தொலைக்காட்சியையும் பார்த்துக்கொண்டு சிகரட்டையும் மதுவையும் குடித்துக்கொண்டு ஜாலியாகக் கும்மாளம் அடித்துக்கொண்டிருந்தார்கள். இலங்கைவானொலி நிகழ்ச்சியை இடையில் நிறுத்தி அவசர அறிக்கை என்று ஒலிபரப்பியது. யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் கோயில்களிலும் பாடசாலைகளிலும்போய்த் தங்கும்படி கோரியது அந்த அறிக்கை.

அப்பாவிப் பொதுமக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பினார்கள். எல்லோரும் கோயில்களிலும் பாடசாலைகளிலும் போயிருந்தால் வீடுகளில் யார் இருக்கப்போகிறார்கள் என்று சிறுவர்கள் பெற்றோரைக் கேள்வி கேட்டார்கள். பாடசாலைகளிலும் கோயில்களிலும் குளிக்க வசதி இருக்கா? மலகூட வசதி இருக்கா? வயசு வந்த பெண்பிள்ளைகள் எப்படி பிரச்சினைகளைச் சமாளிக்கப் போகிறார்கள் என்று எல்லோரும் பதில் கிடைக்காத கேள்வியைக் கேட்டார்கள். குடிக்கத் தண்ணீர் சாப்பிட உணவு என்று பலபிரச்சினையைச் சிந்தித்தார்கள்.

இந்தியாக்காரன் தன்னுடைய வானொலி மூலமும் தொலைக்காட்சி மூலமும் தன்நாட்டையும் உலகத்தையும் ஏமாற்றத் தொடங்கினான். தன் நாட்டு மக்களை முட்டாள் ஆக்கியவன் உலகத்தை

யும் முட்டாள் ஆக்கிவிடலாம் என்று எண்ணிக் கொண்டான். உலகம் பேசாமல் இருக்கத் தான் சொல்வதை உலகம் நம்பி விட்டது என்று நினைத் தான் வடிகட்டிய முட்டாள் என்று வாயை மூடிக் கொண்டு உலகம் சிரித்தது. அமைதிப்படை அல்ல ஆக்கிரமிப்புப் படை என்று புலிகள் உலகுக்கு அறிவித்தார்கள். டில்லியில் இருந்து யுத்தத்தைப் பிரகடனப்படுத்த இன்னொரு நாட்டில் இந்தியன் ஆமி யுத்தத்தை நடத்தினான். யாழ்ப்பாணத்தின் நாலாபுறத்தில் இருந்தும் கடல், தரை, வான் வழியாக போர் விரிவடைந்தது. உறவினர் எல்லோராலும் கைவிடப்பட்ட அனாதைப் பெண்ணைப்போல் தனி ஒருவளாக நின்று தன் பிள்ளைகளின் துணையோடு இந்திய அநாகரீகப் படையுடன் போரிடத் தொடங்கினாள் யாழ்ப்பாணம் அன்னை. வீதிகளில் எல்லாம் தமிழர்களின் உடல்கள் சிதறிக் கிடந்தன. இரத்தம் ஆறாக ஓடியது இந்தியாவின் பிரதமராக இருந்தவன் சொல்லிய வாக்குறுதிகள் எதையுமே நிறைவேற்றாமல் புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்று கொக்கரித்தான். ஆனால் ஆயுதம் ஏந்தாத அப்பாவித் தமிழர்கள் இறந்து கொண்டிருந்தார்கள். குண்டு துளைக்காத கவச ஆடை அணிந்து கொண்டு கறுப்புப் பூனைகளின் பாதுகாப்பில் இருந்து கொண்டு இந்தியப் பிரதமர் ஆணை இட்டான். யாழ்ப்பாணத்தில் எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாமல் குண்டுகள் துளைத்து செத்துக் கொண்டிருந்தார்கள் தமிழ்மக்கள்.

வேத மந்திரங்கள் ஒலித்த இடமெல்லாம் மரண

ஓலங்களினால் நிறைந்தன; யாழ்ப்பாணம் பிணக் காடாக மாறிக் கொண்டிருந்தது. இந்தியாக்கார னின் பீரங்கிகள் கொண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில்கள், பாடசாலைகள், அரச கட்டிடங்கள் வீடுகள் என்று வேறுபாடு பார்க்காமல் இடித்து கற்குவியல்களாக மாற்றினான்;

''ப்ரியா! அம்மாவைக் கூட்டிக்கொண்டு கோயி லுக்குப் போ! நான் தேவையான பொருள்களை எடுத்துக் கொண்டு அங்கு வருகிறேன்.'' கோயில் களில் மக்கள் நிறைந்து வழிந்தார்கள். கோயிலுக்கு வராதவர்களும் வந்திருந்தார்கள். ''ப்ரியா! அவசிய மான பொருள்கள் எல்லாம் இந்தப் பைக்குள் இருக்கு. மூவாயிரம் ரூபாவை அம்மாவிடம் கொடு! இரண்டாயிரம் ரூபாவை நான் வைத்திருக்கிறேன். பைக்குள் என்ன இருக்கு அரைவாசி துணிமணி மீதி சாப்பாட்டுப் பொருள்கள் சீனி நாலுகிலோ, தேயிலை இரண்டு கிலோ, பால்ரின் மூன்று, பிஸ்கட் பக்கட்டு கள் தான் அதிகம் இருக்கு. உழுத்தம்மாவும் இருக்கு யுத்தம் எப்ப முடியுமோ தெரியாது சிக்கனமாகப் பாவிக்க வேண்டும்.'' ''பனடோல் கொண்டு வரவில் லையா?'' ஒரு பெட்டி பைக்குள் இருக்கு. மற்றவர் கள் கேட்டாலும் கொடு. அவசரத்துக்கு உதவி செய்ய வேண்டும் எத்தனையோ மக்கள் ஒன்றையும் எடுக்காமல் வந்துவிட்டார்கள் ''சாந்தா வரவில் லையா?''

''அவளைத் தான் பார்த்துக் கொண்டிருக்கி

றேன் வீட்டுக்கு போயிருக்கிறாள் அவளின் அம்மா இருக்கிறா.''

அவர்களையும் உன் கூட அருகில் வைத்துக் கொள். நான் போய் சாந்தாவைப் பார்த்து வருகி றேன்.''

''சங்கர் சத்தம் கிட்டடியில் பலமாகக் கேட் கிறது''

''என்னைப்பற்றி கவலைப்படாதே. எப்படியும் நான் என்னைக் காற்பாற்றிக் கொள்வேன். சாந்தா வைக் கூட்டி வரவேண்டும். அதற்கிடையில் ஆமி வந்து விட்டால் வேறுவழியால் போய் விடுவேன் சாந்தாவையும் கூட்டிக்கொண்டு.'' அம்மாவைக் கவனமாகப் பார்த்துக் கொள். ''பயப்பட வேண் டாம் என்று சொல்லு.''

''வேகமாகச் சாந்தாவின் வீட்டை நெருங்கிய பொழுது விழுந்து வெடிக்கப் போகும் செல்லில் இருந்து தப்புவதற்காக நிலத்தில் விழுந்து படுத் தான். செல் விழுந்து வெடித்ததும் அடுத்த செல் வருவதற்கு முன் வேகமாக எழுந்து சாந்தாவின் வீட்டுக்குள் ஓடினான். ஒரு நொடி திரும்பிப் பார்த் தான். இந்தியனின் ராட்சதப் பீரங்கி நெருப்புக் கோளங்களை எறிந்தபடி வந்துகொண்டிருந்தது.

என்ன செய்வது என்று தெரியாமல் மிகமிக அருகில் கேட்கும் பெரிய இரைச்சலைக் கேட்டுப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தவள் சங்கரைக் கண் டதும் ஓடிவந்து அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்

டாள். விண்கூவிக் கொண்டு வந்து வெடித்துச் சிதறப் போகும் எறிகணையில் இருந்து தப்புவதற்காக சாந்தாவுடன் நிலத்தில் புரண்டான் யன்னல் கண்ணாடிகளெல்லாம் வெடித்துச் சிதறின. பூட்டப்பட்டிருந்த கதவுகளின் பூட்டுக்களும் திறாங்குகளும் உடைந்து கதவுகளும் யன்னல்களும் ஓவென்று திறந்துகொண்டன.

அவளையும் தூக்கி இழுத்துக்கொண்டு வீட்டின் பின்பகுதியை நோக்கி ஓடினான். பீரங்கிகளுடன் இந்திய ஆமி கிட்டவந்துவிட்டது. ''சாந்தா இவ்வளவு நேரமும் என்ன செய்து கொண்டிருந்தாய்.''

நீண்ட அந்த வீட்டுக்காணியின் கடைசிக்கு வந்ததும் திகைத்தான். உயர்ந்த சுவரை எப்படிக் கடப்பது என்று யோசித்தான். அடுத்தடுத்து விழுந்து வெடித்துச் சிதறும் எறிகணைகளினால் சாந்தாவின் நெஞ்சம் பயத்தில் நடுங்கியது. அச்சத்தினால் சங்கரை இறுகக் கட்டிக் கொண்டாள். அவள் உடம்பு வெடவெட என்று நடுங்குவது அவன் உடம்பில் தெளிவாக உணர்த்தியது. ''சாந்தா பயத்தால் ஒன்றுமே செய்யமுடியாது நான் சொல்வதுபோல் தைரியமாக நடந்தால் இரண்டு பேரும் தப்பலாம்.''
''நீங்க சொல்வது போலவே நடக்கிறேன்.''

''சாந்தா நான் குந்தி இருக்கிறேன் சுவரைக் கைகளால் தொட்டுக்கொண்டு என் தோள் இரண்டிலும் ஏறி நில்

அவன் தோளில் கால்வைக்கத் தயங்கினாள் சாந்தா!

ஆமி வந்து கொண்டிருக்கு கெதியாய் ஏறிநில் வேறுவழி இல்லாமல் செருப்பைக் கழற்றி விட்டு ஏறி நின்று கொண்டாள். மூச்சை

உள்ளே இழுத்து சிறிது சிறிதாக எழும்பினான் அவளும் கைகளை சிறிதுசிறிதாக சுவரைத் தொட்டு தொட்டு வந்து சுவரின் மேல் பகுதியில் இருந்து கொண்டாள். அவன் கால் வழுக்க வழுக்க சுவரில் ஏறி மேற்பக்கத்துக்கு வந்து மறுபக்கம் குதித்தான். உயரத்தில் இருக்கும் அவளை எப்படி இறக்குவது. இடுப்பில் பிடித்து இறக்கச் சுவர் உயரமாக இருந்தது. திரும்பி நாலு பக்கமும் பார்த்தான் பதுங்குகுழிக் குப்போட்ட பனை மரக்குத்தி இருந்தது. உருட்டி வந்து நிமிர்த்தி சுவரில் சாத்திவிட்டு அதன்மேல் ஏறினான்.

அவள் அருகில் ஏறிவந்ததும் அவன் கழுத்தைக் கட்டிப்பிடித்தாள். ஒரு கையால் சுவரைப் பிடித்துக் கொண்டு மறுகையால் அவள் இடையைச் சுற்றி வளைத்தபடி பனை மரக்குற்றியில் சிறிது சிறிதாக இறக்கி அவளை நிலத்தில் விட்டவன் செருப்பை மாட்டிக் கொண்டு அவள் கையைப் பிடித்து இழுத் துக் கொண்டு ஓடினான். குப்பைக்குள் இருந்த உடைந்த போத்தல் ஓடு அவளின் காலைக் குத்திக் கிழித்ததினால் தடுமாறிப் விழப்போனவளை தாங் கிப் பிடித்துக் கொண்டவன் அவள் காலில் இருந்து இரத்தம் பெருகுவதைக் கண்டான்; தடுமாறினாள் என்னால் நடக்க முடியாது என்று விம்மினாள். அடுத்தடுத்து அவர்கள் இருவரையும் கடந்து சென்று விழுந்து வெடித்த எறிகணைகள் மரண பயத்தை ஏற்படுத்தின. இங்கேஇருப்பது பாதுகாப்பேஇல்லை; அவன் மனம் எச்சரித்தது அவளைத் தூக்கி தோளில் சாத்திக் கொண்டு வேகமாக நடந்தான்.

அவள் காலில் இருந்து இரத்தம் அவனுடைய ஜீன்ஸை சிவப்பாக்கிக் கொண்டிருந்தது. பல வீடு களின் வேலிகளைப் பிரித்தும் கடந்தும் இந்தியன் ஆமி வந்து கொண்டிருக்கும் பிரதான வீதியில் இருந்து முக்கால் கிலோ மீற்றர்உள்நாடி இருக்கும் தன் வீட்டை வந்து சேர்ந்தான். அவளை வீட்டின் முன்புறத்தில் உள்ள சிமெந்து தட்டைக் கூரையின் கீழ் இருக்க வைத்தான். அவள் காலில் ஏற்பட்ட காயத்தைப்பார்க்க காலைக் கையால் பிடிக்க முற் பட்டபோது

''வேண்டாம் சங்கர்'' என்று தடுத்தாள்.

அவள் கையைத்தட்டி விட்டு காயத்தைப் பார்த் தான். சிறிது ஆழமாகத்தான் காயம் ஏற்பட்டி ருந்தது. கிணற்றடிக்குச் சென்று பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து வந்து காயத்தை நன்றாகக் கழுவினான். காயத்தினால் ஏற்பட்ட நோவிலும் பார்க்க அவன் தன் காலைப் பிடிப்பது நெஞ்சு பொறுக்க முடியாத வேதனையாக இருந்தது அவ ளுக்கு.

வீட்டு அறைகள் எல்லாம் பூட்டித் திறப்புகளை அம்மா எடுத்துக்கொண்டு போனது அவனுக்குத் தெரியும். வீட்டுக்குப்பக்கத்தில் இருந்த மாமரத்தில் ஏறி ஓட்டுகூரையில் கால்வைத்து சில ஓடுகளை கழற்றினான். உள்ளே இறங்கி தன் அறையில் மருந்து போத்தல் பஞ்சு பிளாஸ்ரருடன் மேற்கு பக்கத்து கதவின் மேலும் கீழும் உள்ள திறாங்குகளை இழுத்து கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்

தான். பெருமளவு இரத்தம் வெளியேறியதினால் களைப்படைந்து சிமெந்து தரையில் சாய்ந்து விட்டாள். காயத்தில் மருந்திட்டுக் கட்டியவன் அவளைத் தூக்கிவந்து கட்டிலில் படுக்க வைத்தான்.

''ஏன் அழுகிறாய் சாந்தா! பயப்படாதே ஒன்றுமே நடக்காமல் நான் பார்த்துக்கொள்கிறேன். களைப்பாய் இருந்தால் கோப்பி குடிக்கிறாயா?''

அவளுக்குக் கடுமையான தாகமாகத்தான் இருந்தது. சம்மதமாகத் தலை அசைத்தாள்.

சுடுநீர் போத்தலை அம்மா கொண்டுபோய் விட்டது ஞாபகத்துக்கு வந்தது. விறகு வைத்து அடுப்பு மூட்டினால் புகைவரும் என்பது நினைவில் வர மண்ணெண்ணை அடுப்பை மூட்டிக் கோப்பி தயாரித்து எடுத்து வந்தான்.

''கோப்பி நல்லா இருக்கா?''

மரணபயம்சூழ்ந்த அந்தநிலையிலும்அவன்கேள்வியால் பழைய நினைவுகள் வர மெல்ல முறுவலித்தாள்.

''செருப்பை ஏன் விட்டு விட்டு ஏறினாய்?''

''உங்கதோளில் செருப்போடு எப்படிஏறுவது?''

''ஏறி இருந்தால் காலில் காயம் ஏற்பட்டிருக்காது இல்லையா?''

''உங்க ஜீன்சும் ரத்தத்தினால் நனைந்திருக்காது''

''அதற்காகச் சொல்லவில்லை கோயில் அகதி முகாமுக்கு போயிருக்கலாம் என்று சொல்லவந்தேன் இரு வருகிறேன்''

பத்துப்பதினைந்து நிமிடங்களுக்கு பின்வந்தான்

''சாந்தா! நேரம் ஆறு மணியாகப் போகிறது ஊரில் ஒரு சனமும் இல்லை அடுத்தடுத்த வீடுகளுக்குச்சென்று பார்த்தேன் ஒருவரும் இல்லை தெருக்களில் படுத்திருக்கும் நாய்கள் எல்லாம் கூட ஓடி விட்டன. என்ன செய்யலாம்?''

பயத்தோடு அவளைப் பார்த்தாள்.

''உன்னால் மெல்ல நடக்கமுடியுமா சாந்தா!''

''ஒரு அடி கூட வைக்க முடியாது சங்கர்!''

எறிகணைகள் விழுந்து வெடிக்கும் சத்தங்கள் ஓயாமல் அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தன. கதவை இறுக்க மூடினான்.

இரவு முழுவதும் இங்கேயே இருப்போம் வேறு வழிஇல்லை

வேகமாக இருண்டு கொண்டு வந்தது.

''விளக்கை கொழுத்துவோமா சங்கர்!''

''கூடாது இருட்டுக்குள் தான்இருக்கவேண்டும்''

''பயமாக இருக்கு சங்கர் விளக்கைக் கொளுத்தி சிறிதாக எரியவிடுவோம்''

விளக்கை ஏற்றி வெளிச்சம் வெளியில் தெரியாமல் தடுப்புகள் போட்டு மறைத்தான்.

இரவுச் சாப்பாடு நினைவுக்குவர மீண்டும் மண்ணெண்ணை அடுப்பை மூட்டி உப்புமாவைக் கிண்டினான்.

சாந்தாவின் பயம் ஓரளவு நீங்கியிருந்தது.

உப்புமா சுவையாக இருந்தது. மெல்லச் சிரித்தாள்.

''நல்லா இருக்கா'' மேலும் அவள் தட்டில் போட்டான் மறுக்காமல் சாப்பிட்டாள் கையை அலம்பிக் கொண்டு அவன் நீட்டிய ஓவலையும் பருகினாள்.

நேரம் இரவு எட்டு மணியைத்தொட்டது.

ப்ரியா எல்லா உடுப்புகளையும் அலுமாரிக்குள் வைத்துப்பூட்டி விட்டாள்.

தன்னிடம் இருந்த புதிய சாரத்தையும் சேட்டையும் அவளிடம் நீட்டி

உடுப்பை மாற்றிக்கொள் நான் வெளியில் நிற்கிறேன்.

..........................................

''சங்கர் உள்ளே வாங்க''

''கட்டிலில் படுப்பாய் தானே சாந்தா''

''இல்லை வீட்டில் பாயில் தான் படுப்பேன்''

பாயை எடுத்து விரித்து தலையணையையும் போட்டான்.

''நீ இங்கே படுத்துக்கொள் நான் வெளியில் படுத்துக் கொள்கிறேன்''

''எனக்குப் பயமாக இருக்கு சங்கர் நீங்களும் இங்கேயே படுங்கள்''

''பயப்படாதே! நான் வெளியே வாசலில் தான் படுத்திருப்பேன்''

''இல்லை சங்கர் இங்கேயே படுங்கள் நான் ஒன்றும் தப்பா நினைக்க மாட்டேன்''

''சாந்தா நான் ...........!''

''மறுக்காதீங்க சங்கர் உங்க மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு. இந்த அறைக்குள்ளேயே படுக்க நானே சொல்கிறேன் பிறகேன் மறுக்கிறீங்க.

படுக்கை விரிப்பை எடுத்து அவள் பாய்க்கு கொஞ்சம் தள்ளி விரித்து தலையணையையும் போட்டுக் கொண்டான்.

''நீ தூங்கு நான் கொஞ்சம் செல்லத் தூங்குகிறேன்.''

''நான் தூங்கிய பிறகு நீங்க எழுந்து போய் விடுவீங்களா?'' பயத்தோடு கேட்டாள்.

சின்ன வெளிச்சத்தில் அவள் முகத்தில் பரவிக் கிடக்கும் பயத்தை அவனால் பார்க்க முடிந்தது.

''சத்தியமாகப் போக மாட்டேன் பயப்படாமல் தூங்கு''

''ஏன் நீங்க தூங்க வில்லையா''

அவன் பேசாமல் இருந்தான்

அவனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டவள்

''சங்கர் மனம் தடுமாறும் என்று பயப்படு கிறீர்களா? எவ்வளவு தூரம் என்னைத் தூக்கித் தோளில் கொண்டு வந்திருக்கிறீங்க இரவு முழுவதும் இந்த அறைக்குள் உங்களுடன் இருக்கப்போகிறேன். இது வேறு யாருக்காவது தெரிந்தால் என்ன நினைப் பார்கள்? நாங்கள் இரண்டுபேரும் தப்பாகவே நடக்கவில்லைஎன்றால்எவருமே நம்பமாட்டார்கள்'

''என் மனசாட்சிப்படி நடக்கிறேன்''

''சாந்தா நாளைக்கு இரண்டு பேரும் எப்படி ஏதாவது ஒரு அகதி முகாமுக்குப் போய் விடுவோம்''

''உங்க விருப்பம். நீங்கள் எப்படி செய்ய விரும் புகிறீர்களோ எங்கே வரச் சொல்கிறீர்களோ அப் படியே நடக்கிறேன்''

''உங்களை விரும்பியபோது என் இதயத்தைத் தான் உங்களிடம் தந்தேன் இப்போ என்னைக் காப் பாற்றுகிற பொறுப்பும் உங்களிடம் தான்''

''நான் உன்னைவிட்டு எங்கும் போகமாட் டேன்''

''படுத்துத் தூங்கு''

''நீங்களும் படுத்துத் தூங்கினால் என் மனதுக்கு ஆறுதலாக இருக்கும்''

அவள் விருப்பத்துக்கு இசைவாகப் படுத்துக் கொண்டான்.

இருவரும் அலுப்பினாலும்களைப்பிலும் தூங்கி விட்டார்கள்.

இயற்கை அழைப்பினால் விழித்துக்கொண்ட டவள் வெளியில் போகப் பயந்தாள். அடக்கமுடியா மல் சங்கரை மெல்லத்தொட்டு எழுப்பினாள்

விழித்துக்கொண்டான்.

''என்ன சாந்தா?''

அவன் எழுந்தவுடன் எப்படிச் சொல்ல வேண் டும் என்று யோசித்து வைத்தபடி

''பாத்றூம் போகவேண்டும்''

கதவைத் திறந்து மெல்ல எட்டிப்பார்த்தான். ஓரே கும்மிருட்டு ஆளை ஆள் தெரியாது அவனுக்கே பயமாகத்தான் இருந்தது. ஏதாவது சத்தமோ அசை வுகளோ இருக்கிறதா என்று உற்றுக்கேட்டு கண்க ளால் தேடினான்.

சாந்தா அவனுடன் ஒட்டிக்கொண்டு நின்றாள் தூரம்போக வேண்டாம் மாமரத்துடன் நிற் போம் மெல்லக் கிசுகிசுத்தான்.

அவன் கையைப் பிடித்துக் கொண்டு பூனை போல் நடந்து ஐந்துஅடி தள்ளி இருந்த மாமரத்தின் இந்தப்பக்கம் நின்று கொண்டான், ஒருசில நிமிடங் கள்தான் ஆனால்மணித்தியாலங்களாகத் தெரிந்தது

மறுபடி அவன் கையைப் பிடித்துக் கொண்டு அறைக்குள் வந்து பூட்டிக் கொண்டாள் கதவை.

தூக்கம் வரவில்லை. சீ என்னிலும் பார்க்க சங்கருக்கு எவ்வளவு சங்கடமாக இருந்திருக்கும் சிலநேரம் சங்கரின் மனம் விழித்துக் கொண்டு என்னை நெருங்கினால் மறுக்காமல் இசைந்து போக லாமா?

மனம் அப்படி இசைந்து போவதையே பெரு மளவு விரும்புவது அவள் அறிவுக்குப் புரிந்தது.

கண்களில் சோர்வு வந்து மூடிக்கொண்டது. அமைதியைக் கிழித்துக்கொண்டு வெடித்தளறிகணை யால் விழித்துக் கொண்டாள்.

.................................

விடிந்து விட்டது.

எழுந்து உட்கார்ந்தவள் சங்கருக்கு மிக அருகில் எப்படி வந்தேன் சங்கர் தன்னை நோக்கி நகர வில்லை என்பது அவன் படுத்திருந்த இடத்தில் இருந்து தெரிந்தது. நான் தான் புரண்டு புரண்டு அவனுக்கு அருகில் வந்துவிட்டேன். வீட்டிலும் அப் படித்தானே என்பது நினைவுக்கு வர அவசரமாக எழுந்து சட்டையையும் சாரத்தையும் சீர்செய்து கொண்டாள். பாயைச் சுருட்டி தலையணையுடன் ஒதுக்கி வைத்தாள். நிமிந்துபடுத்திருக்கும் அவனைப் பார்த்து மனம் பூரித்து மகிழ்ந்தது. எவ்வளவு நேர் மையும் தூய்மையும் நிறைந்த மனம் சங்கருக்கு. இந்த மார்பினில் தலைசாய்த்துத் தூங்கும் அந்த நாள் என்று வருமோ?

''குட்மோர்னிங் சங்கர்!''

''குட் மோர்னிங்''

அவசரமாக ஆடைகளைச் சரிசெய்து கொண்டாள்.

''கண்கள் அவ்வளவு சுலபத்தில் காட்சிகளை மறப்பதில்லை சங்கர்.''

அவள் என்ன சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டதும் பெரிய துவாயினால் மார்பை மூடிக் கொண்டான்.

அவள் சிரித்தாள் அவன் செயலைப் பார்த்து.

''சங்கர் இவ்வளவு நேரமும் பார்த்துக்கொண்டு தான் இருந்தேன்.''

''இருக்கலாம் ஆனால் எனக்குத் தெரியாதல்லவா.''

''அது என் தப்பல்ல.''

''அப்போ நான் பார்த்தது தப்பென்று சொல்கிறீர்களா?''

சிரித்து மழுப்பினான்.

''வா வெளியில் போவோம்''

வெளியில் ஆமி நடமாட்டம் இருக்கிறதாஎன்று பார்த்துவிட்டு வெளியில் வந்தான் கூட அவளும் இணைந்து நடந்தாள். கைகால் முகம் கழுவியவள் அவன் போர்த்திருந்த துவாயை எடுத்து முகத்தை துடைத்தவள் விசமமாய் அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவனுக்குக் கூச்சமாய் இருந்தது திரும்பிக் கொண்டான்.

''சரி நான் பார்க்கவில்லை'' என்றவள்

துவாயை அவன் முதுகுப்புறமாகப் போர்த்தி முன்பக்கமாக துவாயின் இரு அந்தலைகளையும் போட்டான்.

அவசரமாக அறைக்குள் வந்தவன் மேல் சட்டையைப் போட்டுக் கொண்டான்.

''சாந்தா! கால் எப்பிடி இருக்கு. நடக்க முடியுமா?''

''ஓம் ஓரளவுக்கு நடக்கலாம்.''

''கதிரையில் இரு! புதிதாக மருந்து போடுவோம்.'' அவள் மறுக்கவில்லை.

காயத்தை நன்றாகத் துடைத்துச் சுத்தப்படுத்தி மருந்திட்டுக் கட்டினான்.

''முருகா சங்கரின் காலைத் தொட்டுக் கும்பிடும் அந்த நாளை விரைவில் தரமாட்டாயா'' மனத்தினால் பிரார்த்தித்துக் கொண்டாள்.

''சாந்தா தேநீரையும் காலைச் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு ஏதாவது ஒரு முகாமுக்குப் போய் விடுவோம். உடுப்பை மாற்றிக்கொள். இந்த உடுப்பும் அழகாய்த்தான் இருக்கு ஆனால் இந்த உடுப்புடன் வெளியில் போக முடியாது.''

''சாப்பிட்டு விட்டு மாற்றுகிறேன்.''

''ஓவலைக் கரையுங்க.''

சங்கரின் மனைவியாக,.......... ஒருநாள் இந்த வீட்டிற்கு மணப்பெண்ணாக,........ சங்கரின் சின்ன விரலை என் சின்ன விரலால் பிடித்துக் கொண்டு .......... கடைக்கண்ணால் இரகசியமாக அவரைப்

பார்த்து...............

''சாந்தா என்ன யோசனை?''

சிலிர்த்துக் கொண்டு சிரித்தாள்.
ஓவலை வாங்கிப் பருகினாள்.

''சிரிப்புக்கான காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?''

''ஓவல் நன்றாக இருக்கு. உங்களுக்கு வரப் போகும் மனைவி உண்மையில் கொடுத்து வைத்தவள்.''

''அதுநீயாகஇருந்தால் காலமெல்லாம் உன்னை மார்பில் தாங்கிக் கொள்வேன். கடவுளுக்கும் நன்றி சொல்வேன் உன்னை என்னோடு இணைத்து வைத்தால்.''

அவன் காலைச்சாப்பாடு தயார் செய்ய உள்ளே போய்விட்டான்.

வீட்டுப்பிரச்சனை நினைவுக்குவர ஒரே அடியாக முகம்வாடி மனம் சோர்ந்து போனாள். திடீர்என்று அவள் உடம்பில் ஏற்பட்ட மாற்றம் முகத்தைச் சுழிக்கச் செய்தது. இந்த நேரத்தில் இது. மனம் கசந்தது.

''சாந்தா சாப்பிடலாம் வா.''

அவள் வராததினால் வெளிவந்து.

''சாப்பிட்டுப் புறப்படுவோம்.''

அவள் பேசாமல் தலை குனிந்து கொண்டிருந்ததினால்.

அவள் அருகில் வந்து

''என்ன சாந்தா! கால் வலிக்குதா?

''பாத்றூம் போகவேனும்.'' சொல்லி முடிப் தற்குள் வெட்கத்தினால் சுருங்கிப் போனாள்.

''இப்பதானே பாத்...........'' பொறிதட்டியது.

ப்ரியாவின் மேசை இழுப்பறையைத் திறந்து சனற்றறி நாப்கின்ஸ் பொதியை அவள் முன் உள்ள மேசைமேல் வைத்துவிட்டு.

''பயப்படாமல் போ ஆமி இப்போ வரமாட் டான்'' தைரியம் சொன்னான்.

தொட்டியில் நீர் இருந்தது வசதியாய்ப் போய் விட்டது.

காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டார் கள். மீதியைக் கட்டி எடுத்துப் பையில் வைத்துக் கொண்டாள். சமையல் அறையில் இருந்து எடுக்கக் கூடிய எல்லாவற்யையும் எடுத்துவைத்துக் கொண் டாள்.

''சாந்தா எந்த முகாமுக்குப் போகமுடியுமோ தெரியாது. நீயும் நானும் தங்குமிடத்தில் இருப்ப தற்கான எல்லாவற்றையும் கொண்டு போவது நல்லது.''

சாந்தா தன் ஆடைகளை மாற்றிக்கொண்டாள்.

சாந்தாவிடம் வேறு உடுப்புகள் இல்லாததினல் தன்னுடைய இரண்டு சாரத்தையும் இரண்டு சேட் டையும் அவளிடம் கொடுத்தான். படுக்கை விரிப்பை மடித்துப் பைக்குள் வைத்தான். கதவுகளை எல்

லாம் சாத்திப் பூட்டினான் யன்னல்கள் எல்லாம் பூட்டப்பட்டிருக்கிறதா என்று சரிபார்த்துக்கொண்டான்.

"சாந்தா இனி இங்கே இருப்பது பாதுகாப்பில்லை. பிரதான வீதியில் தன்நிலையை வலுப்படுத்திக் கொண்டு ஆமி உள்நாடி வருவான். மனதைத் தைரியமாக வைத்துக் கொள் பயப்படக்கூடாது. உனக்கு ஒன்றுமே நடவாமல் நான் பார்த்துக் கொள்கிறேன் சரிதானே."

அவனுடைய அன்பினால் உணர்ச்சி வசப்பட்டுப் போனவள் அவன் மார்பில் முகம் புதைத்து விம்மி அழுதாள்.

அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

"சங்கர்........... சங்கர்..........."

வேறு வார்த்தைகளை அவளால் சொல்ல முடியவில்லை.

"தாமதிக்கக்கூடாது சாந்தா."

அவளை அழைத்து வந்து வீட்டின் பின்புறம் நிறுத்திவிட்டு உள்ளே போய் பொருட்கள் வைத்த பையை அவளிடம் கொடுத்தான். உள்சென்று வீட்டைப் பூட்டிவிட்டு கூரையின் மூலம் வெளிவந்து பழையபடி ஓடுகளை சரிசெய்தான். தன்னுடைய செருப்பை அவளிடம் கொடுத்தவன் பையைத் தூக்கிக் கொண்டான். இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர் சிரித்தபடி அவள் கன்

னத்தைக் கிள்ளினான். துன்பமெல்லாம் நீங்கிய மனதுடன் களங்கமில்லாமல் சிரித்தாள்.

''போகலாமா''

''ம்'' அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''என்ன உல்லாசப் பயணமா போகிறோம்''

மனதில் உல்லாசம் இருந்தால் பயணம் இனிமையாகத் தான் இருக்கும்.

ஒரு கையால் அவள் இடையை சுற்றி வளைத்து அணைத்தபடி நடந்தான்.

''எங்கள் வீட்டு வளவில் இருந்து ஒன்பது வீட்டுக் காணிகளைக் கடந்து போனால் ஒரு ஒழுங்கை வரும், அந்த ஒழுங்கையினால் போனால் ஒரு பாடசாலை வரும் அங்கும் அகதிகள் இருக்கிறார்கள். முதலில் அங்கு போவோம். பிறகு ப்ரியா இருக்கும் கோயிலுக்குப் போவோம்.''

ஒன்பது காணிகளையும் கடந்து ஒழுங்கைக்கு அருகே வந்தார்கள்.

''நீ இங்கேயே இரு நான் போய் ஒழுங்கையில் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு வருகிறேன். போகலாம் என்றால் உன்னையும் வந்து கூட்டிக் கொண்டு போகிறேன்.''

''எனக்குப் பயமாக இருக்கு. தனியாக என்னால் இருக்க முடியாது சங்கர் இரண்டு பேரும் சேர்ந்தே போவோம்.''

அவள் சொல்வது சரி என்றே தோன்றியது.

"நடக்கக் கஷ்டமாக இருக்கா."

"கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கு."

"தூக்கிக் கொண்டு போகட்டா" சிரித்தபடி கேட்டான்.

"என்னைத் தூக்கித் தூக்கித்தானே உங்களுக்குப் பழக்கமாப் போச்சே. தூக்குங்க கஷ்டப்படாமல் போகிறேன். ஆண்களுக்கு எப்பவுமே பெண்களைத் தூக்குவதென்றால் சந்தோசம் தான்."

"அவசரமாக நடக்காதே!"

இருவரும் ஒழுங்கையைப் பார்த்தார்கள்.

மயான அமைதி சனநடமாட்டமே இல்லை.

"பயமாக இருக்கு சங்கர்"

"ஒழுங்கையால் போகமல் வளவுகளுக்குள்ளால் போவோம்."

ஒவ்வொரு வேலியாகப் பாதை உண்டாக்கிக் கொண்டு சென்றார்கள்.

சங்கரின் காலில் செருப்பு இல்லாததால் கல்லும் முள்ளும் அவன் காலைப்பதம் பார்த்தன. இடை இடையே நின்று காலில் தைத்த முட்களை எடுத்து எறிந்து கொண்டு வந்தான்.

சாந்தாவின் மனம் வேதனைப்பட்டது. எனக்காக எவ்வளவு வேதனைப்படுகிறார் என்று.

சனங்களின் ஆரவாரம் கேட்டது. சாந்தா நிம்மதியாக அவனைப் பார்த்தாள்.

அதிஷ்டதேவதை பக்கத்தில் வரும்போது என்ன கவலை அவள் கன்னத்தை செல்லமாகக் கிள்ளினான்

பாடசாலையை நெருங்கி விட்டார்கள்.

''சாந்தா நாங்கள் இப்பொழுது தான் அகதி முகாமுக்கு வருவதாக எவருக்கும் சொல்லக்கூடாது. காட்டிக் கொள்ளவும்கூடாது. நேற்றே வந்துவிட்டோம் முகம் கழுவ, பாத்றூம் போக வெளியில் போனோம் என்று சொல்வோம். முடிந்தவரை ஒருவருடனும் கதைக்காதே சனங்கள் கூட்டமாக நடமாடும்போது சட்டென்று அவர்களுடன் கலந்து கொள்வோம் ஆமி இன்னும் இந்தப்பக்கம் வரவில்லைப்போல் தெரிகிறது வந்திருந்தால் இப்படி மக்கள் நடமாட விடமாட்டான்.

சாந்தா ஏழுஎட்டுப் பெண்கள் முகாமுக்குப் போக வருகிறார்கள் நீ அவர்கள் பின்னால் போ. சிறிதுநேரத்தில் நான் உன்னைவந்து சந்திக்கிறேன்''

இருவரையும் கடந்து சென்ற பெண்களுக்குப் பின்னால் சாந்தா நடக்கத் தொடங்கினாள்.

சிறிது நேர இடைவேளைக்குப் பின் சங்கர் முகாமை வந்தடைந்தான்.

''சாந்தா நீ இங்கேயே இரு நான் கோயில் முகாமுக்குப் போகலாமா என்று விசாரித்து வருகிறேன்.''

..............................

சிறிது நேரத்தில் திரும்பி வந்தான்.

''புறப்படு சாந்தா கோயில் முகாமுக்குப் போவோம். இங்கே இருப்பதிலும் பார்க்க அங்கே சனங்கள் கூடவாக இருக்கிறார்களாம். பறவாய்

இல்லை நாம் அங்கேயே போவோம் உன் அம்மா, என் அம்மா, ப்ரியா, எங்களைக் காணாமல் தவித்துக் கொண்டிருப்பார்கள்.''

பையை எடுத்துக் கொண்டவன்.

ஒரு நிமிடம் தயங்கினான்.

''என்ன சங்கர்!''

''நீ இங்கேயே இரு நான் ப்ரியாவைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து போனால் கோயிலில் எங்களுக்குத் தெரிந்த எல்லோரும் இருப்பார்கள். இரவு எங்கே இருந்தீர்கள் என்று கேட்பார்கள். பையையும் நீயே வைத்துக் கொள் போன இடத்தில் திரும்ப வரமுடியாமல் ஆமி வந்துவிட்டால் இந்தப் பையில் இருப்பதை நீ பாவிக்கலாம். இந்தா ஆயிரம் ரூபாவையும் வைத்துக் கொள்.''

''ப்ரியாவிடம் கூட இரவு இரண்டு பேரும் வீட்டில் தங்கியதைச் சொல்லாதே. பள்ளிக்கூடத்துக்கு நேற்றே வந்துவிட்டோம் என்று சொல்ல வேண்டும் மறந்து விடாதே.''

''சங்கர் என்னைத் தனியே விட்டு போகவேண்டாம் உங்க கூடவே கூட்டிப் போங்க''

''பயப்படாமல் தைரியமாக இரு உன்னைத் தனியே விட்டு விட மாட்டேன் என்னை நம்பவில்லையா நீ?''

''நம்பாமலா உங்க கூட வந்தேன்?''

''அப்போ ப்ரியாவைக் கூட்டி வரும்வரை பொறுத்துக்கொள் வந்துவிடுகிறேன்.''

வேகமாக கோயில் முகாமை அடைந்தான். சங்கரைக் கண்ட ப்ரியா எழுந்து ஓடி வந்தாள்.

''சாந்தா எங்கே?''

''பள்ளிக்கூட முகாமில் இருக்கிறாள் அம்மாவிடம் சொல்லிவிட்டு வா.''

அதற்கிடையில் தாய் அங்கே வந்தாள்.

''நேற்றிரவு எங்கே இருந்தாய் சங்கர். நாங்கள் இரண்டு பேரும் பயந்தபடி இருந்தோம்.''

''அம்மா, சங்கர் பள்ளிக்கூடத்தில் இருந்தானாம்.'' சாந்தாவும் பள்ளிக்கூடத்தில் தான் இருக்கிறாளாம் நான்போய் கூட்டி வருகிறேன்.''

''சங்கர் வா போவோம்.''

ப்ரியாவைக் கண்ட சாந்தா எழுந்து வந்தாள்.

சங்கர் பையைத் தூக்கிக் கொண்டான்.

சொன்னபடி வந்துவிட்டேன் சரிதானே சாந்தா

நன்றி சொல்வதற்கு வார்த்தைகளுக்குத்தான் பஞ்சமாக இருக்கு.

''ப்ரியா! நீ சாந்தாவைக் கூட்டிக் கொண்டு போ.''

''சிறிது நேரம் செல்ல நான் வருகிறேன்.''

''காரணம் சாந்தாவுக்குத் தெரியும்''

''ப்ரியாவுடன் கோயில் முகாமை நோக்கி டந்தாள்.

கோயிலின் வடக்கு வீதியில் பரந்து விரிந்திருந்த ஆலமரத்தின் கீழ் சாந்தாவை நிற்க வைத்துவிட்டு கோயிலுக்குள் சென்று தாயிடம் உள்ளேவர முடியாத காரணத்தைச் சொல்லி வெளியே கூட்டி வந்தாள்.

தாயின் கண்களைப் பார்த்தவுடன் புரிந்து கொண்டாள் இரவெல்லாம் தூங்கவில்லை என்று கண்கள் இரண்டும்வீங்கிச் சிவந்திருந்தன. தாயன்பை எண்ணி மனம் உருகினாள்.

''இரவு எங்கே தங்கினாய்?'' குரலில் ஏக்கம் தொனித்தது.

பள்ளிக்கூட அகதிமுகாமில் தங்கினேன் அம்மா.

விசாரித்தவர் எல்லோருக்கும் அதே பதில் தான் சொன்னாள். சங்கர் எவ்வளவு புத்திசாலித் தனமாக நல்ல பதிலைச் சொல்லித்தந்தார். பெண் புத்தி ஒன்று இருக்க ஒன்றைச் சொல்லி அகப்படாமல் தப்பித்தேன். இதற்குத் தான் எந்தக் காரியத்தையும்ஒரு ஆணின் ஆலோசனையோடு செய்வது நல்லதென்று சொல்வார்கள் வயசானவர்கள் என மனதிற்குள் எண்ணிக் கொண்டாள்.

சங்கர் பையுடன் வந்து சேர்ந்தான்.

''என்ன ப்ரியா ஆலமரத்துக்குக் கீழே கூடாரம் அடிப்போமா?''

''வேறுவழி? கோவிலுக்குள்ளே போகமுடியாது ஒருவர் சுவாசித்தகாற்றை மற்றவர் சுவாசித்து வருத்தம் தான் வரும். ஆடுமாடுகள் மாதிரி சனங்கள் அடைஞ்சு கொண்டு இருக்கிறார்கள்.''

ஆலமரத்துக்கு எதிரே இருந்த வீட்டில் இருந்து ஒரு வயசான அம்மா வந்தாள். சங்கர் அந்த அம்மாவிடம் சென்று.

''அம்மா அந்தப் பிள்ளைகள் சுகமில்லாமல் இருக்கிறார்கள் உங்க வீட்டை கொஞ்சம் பயன் படுத்திக் கொள்ள அனுமதிப்பீர்களா?''

''என்ன தம்பி கேட்டுக் கொண்டு நிற்கிறாய்'' ஆபத்துக்காலத்தில் உதவி செய்யாவிட்டால் மனிதனாய் பிறந்து என்னபயன்? எத்தனைபேர் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் நீங்களும் பயன் படுத்திக் கொள்ளுங்க.''

''ரொம்ப நன்றி அம்மா!''

''ப்ரியா உள்ளே வா! அம்மா சம்மதிச்சிட்டாங்க.'' மூன்று பேரும் உள்ளே வந்து இருந்தார்கள். பலபேர் ஏற்கனவே அங்கு தேநீர் வைத்துக் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

''ப்ரியா கோயிலுக்குள் போய் அம்மாவையும் சாந்தாவின் அம்மாவையும் கூட்டிவா.''

கோயிலுக்குள் போனாள் ப்ரியா.

''பகலில் கோயிலுக்குள் ஏன் இருக்கிறீங்க. ஆமிக்காரன் வரும்வரை வெளியில் இருப்போம் வரப்போகிறான் என்று தெரிந்ததும் கோயிலுக்குள் சென்றுவிடலாம்.''

ஐந்துபேரும் ஒன்றாக இருந்து கொண்டார்கள்.

''சங்கர்! முகாமில் தரும் சாப்பாடு அம்மாவுக்கு ஒத்துக்கொள்ளவில்லை நேற்று வாந்தி எடுத்து விட்டா.''

''ஏன் நாங்க சமைச்சுச் சாப்பிட்டா என்ன?''

''சமைக்க பாத்திரங்களுக்கு எங்கே போவது?''

வீட்டுக்கார அம்மாவிடம் போய் கேட்டான் சங்கர். சோறு சமைக்கக்கூடிய ஒரு அலுமினியப் பாத்திரத்தை வாங்கி வந்தான். மேலும் ஒரு அலுமினிய பாத்திரத்தை அந்த அம்மா தந்தா.

தண்ணீரைக் கொதிக்க வையுங்க அரிசி வாங்கி வருகிறேன்.

அரைமணித்தியாலத்தில் அரிசியுடன் வந்தான். இன்னொரு பைக்குள் மரக்கறி வாங்கி வந்திருந்தான்.

''ஒரு கறியை வைத்தால் போதும்.''

மதிய உணவு உண்மையில் ஐந்து பேருக்கும் சுவையாக இருந்தது.

மாலை நேநீர் வைத்துக் குடித்தார்கள்.

இருட்டிக் கொண்டு வந்தது.

எல்லோரும் கோயிலுக்குள் போனார்கள். சாந்தாவும் ப்ரியாவும் கோயில்வெளிமண்டபத்திற்கு அருகே நின்ற சகடையில் அமர்ந்து கொண்டார்கள் ஆமி வந்தால் மண்டபத்துக்குள் இரண்டுஅடி வைத்தால் போய் விடலாம்.

''பள்ளிக்கூடத்தில் நேற்றிரவு வசதி எப்படி இருந்தது? நீ மட்டும் தனியே போனாயா? சங்கரை எப்படிச் சந்தித்தாய்?''

உண்மையை மறைக்க விரும்பவில்லை அவள். ப்ரியாவிடம் சொன்னால் தான் மனம் ஆறுதல் அடையும் போல் இருந்தது.

நேற்று வீட்டில் சங்கரைச் சந்தித்த பயங்கர சூழ்நிலையில் இருந்து கோயில் முகாம்வரை நடந்த எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் கோர்வையாகச் சொல்லி முடித்தாள்.

அவள் சொல்ல ஒரு கதைப்புத்தகம் படிப்பது போல் ஆவலுடனும் திகைப்புடனும் கேட்டுக் கொண்டு வந்தவள் சொல்லி முடித்ததும் உடம்பை சிலிர்த்துக் கொண்டாள் ப்ரியா.

''சங்கர் என் அண்ணன் என்பதற்காகச் சொல்ல வில்லை. உண்மையில் நல்லவன் நீ இசைந்து போக மனம் விரும்பி இருந்தாலும் அவன் சம்மதித்திருக்க மாட்டான்.''

''மனம் சமாதானம் அடையமாட்டேன் என் கிறது ப்ரியா!''

''எனக்கே சங்கடமாகத்தான் இருக்கு.''

''அவனைத் தானே கல்யாணம் முடிக்கப் போகிறேன் என்று. மனதுக்கு ஆறுதல் சொல்லு. மனம் சமதானம் அடைய வேறுவழி இல்லை. உண் மையில் எந்தப் பெண்ணுக்கும் ஏற்படாத வித்தி யாசமான அனுபவம் தான்.''

''உன்னிடம் கூட சொல்ல வேண்டாம் என்று தான் சங்கர் சொன்னார்.''

''ஏன் வேறு யாருக்கும் சொல்லி விடுவேன் என்று பயப்படுகிறானா? நீ பயப்படாதே வேறு யாருக்குமே நான் சொல்ல மாட்டேன்.''

''வா சங்கர்''

ப்ரியாவுக்கு பக்கத்தில் தள்ளி இருந்தான். இரண்டு பேரும் படுக்க உள்ளே இடம் இருக்கா?

நீ வெளியில் படுப்பதாக இருந்தால் நாங்களும் வெளியில் படுத்துக்கொள்கிறோம்.''

''அப்படியே செய்வோம் அம்மாவிடம் போய் படுக்கை விரிப்பு இரண்டு வாங்கிவா.''

''சங்கர் நேற்று நடந்ததை எல்லாம் ப்ரியாவிடம் சொல்லிவிட்டேன். இப்பதான் மனம் அமைதியாக இருக்கு. என்மேல் கோபப்படுகிறீர்களா?

உன் நன்மைக்குத் தான் சொன்னேன் உனக்கு சரி என்றுபட்டால் சொன்னதில் எனக்குக் கோபமில்லை.''

படுக்கை விரிப்புகளை சிறிது இடைவெளி விட்டு விரித்தாள். ப்ரியாவும் சாந்தாவும் ஒன்றிலும் மற்றதில் சங்கரும் சாய்ந்து கொண்டார்கள்.

''நேற்று கோயிலுக்குள்ளே படுத்தேன் ஒரே புழுக்கம். நாளை அன்ரியையும் அம்மாவையும் வெளியில் படுக்கச் சொல்வோம்.''

''எத்தனை நாட்களுக்கு இந்த அகதி முகாம் வாழ்க்கையோ?''

**யா**ழ்ப்பாணத்துச் சனங்கள் என்ன பாவம் செய்தார்களோ? இப்படிக் கஷ்டப்படுகிறார்கள். கோயிலைச் சுற்றி ஏற்பட்ட சுகாதாரச் சீர்கேட்டினால் பல்வேறு நோய்கள் ஏற்பட்டு கஷ்டப்பட்டார்

கள். மருந்துகள் இல்லாமல் தொடர்ந்து கஸ்டப் பட்டார்கள் அதிகவிலை கொடுத்து அரிசி, பருப்பு போன்ற சமையலுக்குத் தேவையானபொருட்களை சங்கர்ஆமியின் அச்சுறுத்தலின் மத்தியிலும்அலைந்து திரிந்து வாங்கி வந்து நாலு பெண்களையும் நோயில் இருந்தும் பசியிலிருந்தும் காப்பாற்றினான். சாந்தா வும் ப்ரியாவும் சிறிதளவு நோய்வாய்ப்பட்டார்கள். நாலைந்துவீடு தள்ளி இருந்த ஒரு இடத்தில் இருந்து காலையும் மாலையும் ஒருபோத்தல் பால் வாங்கி வந்து அவ்விருவருக்கு மட்டும் கொடுத்தான். பகல் பொழுதில் கோயிலுக்கு வெளியே இருக்கும்படி அந்த நால்வரையும் கேட்டுக் கொண்டான். அநேகமாக முகாமில் இருந்த எல்லோருமே நோயினால் தாக்கப் பட்டார்கள். நாட்கள் செல்ல நான்கு பெண்களை யும் கோயிலுக்குள்ளே போகாமலே தடுத்ததினால் நோயிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். கோயில் வெளிமண்டபத்திலும் அகதிமக்கள் கூடிக்கொண்டு வந்ததினால் ஆலமரத்தின் கீழேயே இரவும் பகலும் தங்கிக் கொண்டார்கள். ஓரளவு உணவுப் பொருட் களை சங்கர் சேர்த்து வைத்துக் கொண்டான். இந்தியன் ஆமி அந்த அகதிமுகாமையும் சுற்றி வளைத்தது. மக்கள் ஒருபக்கமும் நகரமுடியாது சிறைவைக்கப்பட்டார்கள்; பத்து நாட்கள் ஓரளவு வாழ்ந்தவர்கள் மீதி நாட்கள் நரக வாழ்க்கை வாழ்ந் தார்கள்.

முப்பது நாள் அகதி முகாம் வாழ்க்கை என்றுமே மறக்க முடியாமல் மனதில் உறைந்துவிட்டது. நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யா

மல் இருந்திருக்கலாம் இந்தியா. பாரதம் பற்றி தமிழ்மக்களின் மனங்களில் இருந்த நல்ல எண்ணங் களை அந்தகார இருளுக்குள் புதைத்து விட்டது. இந்திய இராணுவம். அடுத்த ஐந்து ஆறுதலை முறை களுக்கு பொழுதுபோக்கு கதைகளாகவும் பாட்டிக் கதைகளாகவும் பெரியவகள் முதல் சிறியவர் குழந் தைகள் வரை சொல்லும்படி நடந்து கொண்டுவிட் டது இந்தியா. இரத்தத்தையே உறைய வைக்கும் சிலசம்பவங்கள் பாட்டிமார்களிடம் கேட்கப்போகும் குழந்தைகள் திகிலுடன் விழிப்பதை மனக்கண்ணால் காணமுடிகிறது. வாய்மையே வெல்லும் என்ற தன் நாட்டுத் தாரக மந்திரத்தை ஏன் இந்தியா மறந் தது என்று சிலருக்கு இன்னும் புரியவே இல்லை. உலக அரசியல் சுழற்சியில் சிக்குண்டுபோய் இந்தியா வும் தப்புச் செய்து விட்டதா? இந்த மண்ணின் வரலாற்றில் ரத்தக் கறை படிந்த அத்தியாயங்களை இந்தியா எழுதியது ஏன்? இந்திய இராணுவத்தைக் குற்றம் சொல்லி என்ன பயன்? எய்தவன் இருக்க அம்பை நோவானேன்? தர்மம் தான் சக்கரமாய் சுழலும் என்கிறார்களே உண்மையா? அப்படியா னால் காலச்சுழற்சிக்குக் காத்திருக்க வேண்டியது தான் தீர்ப்பு வரும்வரை. அரசியல் காரணங்களுக் காக புலிகள் கூட இந்தியாவை மன்னித்து உறவை புதுப்பித்துக் கொள்ளலாம். அது மனிதர்கள் செய் கின்ற முடிவு. சத்தியமும், தர்மமும், நீதியும் இந் தியாவை மன்னிக்குமா? தண்டிக்காமல் விட்டு விடுமா? உப்பைத் தின்றவன் தண்ணி குடிப்பான் என்பார்களே! எத்தனை எத்தனை அப்பாவி உயிர்

கள்................ காற்றை விதைத்தவன் புயலை அறுவடை செய்வான் என்ற சத்தியவாக்கு பொய்க்குமா? கதறி அழுத பெண்களுக்கு நடந்த கொடுமைகள் வார்த்தைகளில் அடங்குமா? கனவுகளுடன் புதையுண்டு போனவர்களின் நினைவுகளை நெஞ்சம் மறக்குமா? மனிதன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்பது அனுபவ வாக்கு. சிவந்து போன இந்தமண்ணின் சாபம் இந்தியாவின் கண்களைத் திறக்கட்டும். வேதனைகளுடன் வாழத்துடிக்கும் இந்த மண்ணின் மக்களுக்கு ஒருவழி பிறக்கட்டும். இறைவா உன்னைக் கைகளை ஏந்திக் கண்ணீரை வடிக்கிறோம்.

கனத்த நெஞ்சங்களுடனும் விரக்தியான மனங்களோடும் மக்கள் மெல்ல மெல்ல வீடுகளைத் தேடிச் செல்லத் தொடங்கினார்கள். இடிந்த கட்டிடங்களும் தெருத்தெருவாக முழத்துக்கு முழம் எரிந்து கருகி சாம்பராகிவிட்ட மனித எச்சங்களும்;

என் இனிமைத் தாய்நாடே உனக்கா இந்தக் கதி? உயிரிலும் மேலாக உன்னை நேசித்தோமே! உன்னை இந்த நிலையிலா காணவேண்டும்? இறந்து போன ஆயிரம்ஆயிரம் மக்களுடன் நாங்களும்இறந்து போய் இருக்கக் கூடாதா? இந்தக் கொடுமையான காட்சிகளை எம் கண்கள் காணாமல் இருந்திருக்குமே! இந்தக்கொடுமைகளைச் செய்வதற்கு இந்திய மண்ணிற்கு நாம் என்ன தீங்கு செய்தோம்? காலதேவனே! எவராலும் ஏமாற்ற முடியாத நீதிதேவனே! நீயாவது பதில் சொல்.''

தினமும் கோயில்களையும், வீடுகளையும், வள வுகளையும், வீதிஓரங்களையும் அலுவலகங்களையும் பாடசாலைகளையும் கூட்டித் தண்ணீர் தெளித்து அழகாக வைத்திருந்தோமே! ஏன்? எதற்கு? இப்படி நடந்தது? தாய்த் திருநாடே எங்களுக்குப் புரிய வில்லை அம்மா! கடலலைகள் தாலாட்ட இன்பத் தென்றல் பாராட்ட செந்தமிழாள் நடை பயின் றாளே எல்லாம் எங்கே? எங்கே? எங்கே?

யர்ழ்ப்பாணம் அன்னையே! இனிய என் தாய் நர்டே! தெய்வங்களே நீங்களும் உங்கள் கண்களை மூடிக்கொண்டா இருந்தீங்கள்! இவ்வளவு கொடுமை களும் நடக்கும்போது!

வீடுகளுக்குச் சென்ற மக்கள் விறைத்துப் போனார்கள். தங்கள் தங்கள் வீடுகளும் வளவு களும் இருக்கின்ற நிலையைப் பார்த்து. நாங்கள் உல் லாசமாக நடந்து திரிந்த வீதிகளா இவைகள்? என்று தடுமாறிப் போனார்கள். மனித நடமாட்டமே இல்லாதுபோன பேய்கள் குடிகொண்டுவிட்ட இட மாகவே யாழ்ப்பாணம் காட்சி அளித்தது. வழக் கத்துக்கு மாறாகத் தங்கள் வீடுகளுக்காக அல்ல அடுத்தவர்களின் வீடுகள் இருக்கும் நிலைகளைப் பார்த்து மனம் உருகிக் கண்ணீர் விட்டார்கள். எல்லோரும் சேர்ந்தது தான் சமுதாயம் மற்றவர் கள் சந்தோசமாக இருந்தால் தான் நாங்களும் சந்தோசமாக இருக்கலாம் என்றஉண்மையைரத்தம் தோய்ந்த யாழ்ப்பாணம் மக்களுக்கு உணர்த்தியது.

ஒருவருடன் ஒருவர் கைகளைகோர்த்துக் கொள்ள வேண்டிய நேரம் என்று எல்லோரும் சுயநலத்தை

விட்டுஇணைந்து கொண்டார்கள் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாக. இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குப் கொடுத்தார்கள். இல்லாதவர்கள் நன்றியுடன் பெற்றுக்கொண்டார்கள். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தார்கள். சோர்ந்து விடுவதாலோ விரக்தி அடைவதாலோபிரச்சினைகள் தீர்ந்துவிடுவதில்லை; பிரச்சினைகளைத் தீர்க்க எங்கிருந்து தொடங்குவது என்று யோசித்துக் காலத்தை விரயமாக்காமல் ஏதோ ஓா இடத்தில் இருந்து தொடங்க வேண்டியதுதான் பிரச்சினைகள் ஒருநாள் முடிவுக்கு வந்தே தீரும் புதிய பிரச்சினைகள் தோன்றுவது வேறுவிடயம்!

வீடுகளைத் துப்பரவாக்கினார்கள் வளவுகளைத் துப்பரவாக்கினார்கள் தெரு ஒரங்களை மட்டுமல்ல தெருவையே கூட்டித் துப்பரவாக்கினார்கள். ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிவிடில் அனைவருக்கும் தாழ்வு'' என்றுபொழுது போக்காகவா பழந்தமிழன்பழமொழியாகச்சொல்லி வைத்தான். புதிய உறுதி மொழியுடன் மீண்டும் எழுந்தாள் யாழ்ப்பாணம் அன்னை. தன் சாம்பலிலேயே உயர்ந்தெழும் பீனிக்ஸ் பறவைகளுக்கு விடுதலைப் புலிகளை ஒப்பிட்டவர்கள் யாழ்ப்பாணத்தின்வேகமான புதிய மலர்ச்சியைக் கண்டு ஒப்பீட்டை ஒத்துக்கொள்ளவே செய்தார்கள். பூமாலையைக் கொண்டு வந்தவர்கள் மரணமாலையாக்கினார்கள். நேசக்கரம் என்று சொல்லி நீட்டினார்கள் இந்தியர்கள். புலிகள் என்ன தமிழர்களே பற்றிக் கொள்ள மறுத்ததினால் ஏமாற்றத்துடன்

கீழே விழுந்தது அவர்களின் கைகள். எதிர்ப்பிலும் பார்க்க அலட்சியம் எவ்வளவு பலமானது என்பது இந்தியப்படையிடம் தமிழர்கள் காட்டிய அலட்சியம் அவர்களைக் கூசிக்குறுகித் தலைகுனிய வைத்தது. ஏன் வந்தோம் என்று அவர்கள் மனம் அவர்களையே கேட்டது. இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் சமுதாயத்தின் உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடம் கருத்துக்களைப் பரிமாற முற்பட்டபோது புலிகள் ஒன்றும் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்லர்; எங்கள் இரத்தத்தில் உதித்தவர்கள்; அவர்களை ஒதுக்கச் சொல்வது எங்களை நாங்களே ஒதுக்குவதாகவே கருத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது என்ற பதிலால் ஒரே அடியாக அவர்களின் வாயடைத்துப் போகும்படி செய்து விட்டது. நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறோம் என்று சொன்ன இந்தியத் தமிழ் இராணுவ அதிகாரியிடம் ''உங்களிடம் உணவும் பொருளும் நாங்கள் எதிர் பார்க்கவில்லை உண்மையில் நீங்கள் எங்களுக்கு உதவவிரும்பினால் எங்கள் நாட்டை விட்டு வெளியேறுங்கள். எங்கள் பிரச்சினையை ஆயுத மூலமாகவோ பேச்சுவார்த்தை மூலமோ சிங்கள அரசுடன் நாங்கள் தீர்த்துக் கொள்கிறோம்.'' என்ற பதிலால் தங்கள் உதவிகளைக் கூட யாழ்ப்பாண மக்கள் நிராகரிக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்தியது. உங்களை நீங்களே I.P.K.F. என்று சொல்லிக் கொள்கிறீர்கள். ''Indian Peace Keeping Force'' என்று விளக்கம் கொடுக்கிறீர்கள். நாங்களும் I.P.K.F என்றுதான் சொல்கிறோம். ஆனால் அதன் கருத்து

''Indian Peace Killiing Force'' என்றோ அல்லது ''Innocent People Killing Force'' என்ற கருத்திலேயே சொல்கிறோம் என்று ஓர்இந்திய இராணுவ உயர் அதிகாரிக்கு யாழ்ப்பாணத்தில் அரசபணியில் இருக்கும் ஓர் உயர் அதிகாரி சொன்னபோது மனசாட்சி உள்ள அந்த இந்திய இராணுவ அதிகாரி மன்னிப்பு கோரியதுடன் மேலிடத்தில் இருந்துவரும் கட்டளைகளை நிறைவேற்றுவது தான் எங்கள் கடமை. உங்கள் நாட்டில் நடந்த இந்த சம்பவங்களுக்காக தனிப்பட்ட முறையில் வேதனைப்படுகிறேன் என்று சொன்னார். புலிகள் இந்த மண்ணுக்காகவும் இந்த மக்களுக்காகவும் போராடினார்கள்; போராடுகிறார்கள்; போராடுவார்கள் நீங்கள் யாருக்காக புலிகளுடன் போராடினீர்கள் போராடுகிறீர்கள். முன்பு புலிகளும் சிங்கள இராணுவமும் போராட இந்தியா மத்தியஸ்தராக இருந்தது இப்பொழுது புலிகளும் இந்தியாவும் போராட நான் மத்தியஸ்தராக இருக்கிறேன் என்று சிங்கள அரசுத் தலைவர் சொன்ன பிறகாவது உண்மை நிலையை நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்களா? எங்களைப் பொறுத்தவரையில் தொலைபேசியில் பேசும்பகுதி இல்லை காதால் கேட்கும் பகுதி மட்டுமே தரப்பட்டிருக்கிறது, அரசியல்வாதிகளிடம் தொலைபேசியின் காதால் கேட்கும் பகுதி இல்லை வாயால் பேசும் பகுதி மட்டுமே உண்டு. நீங்கள் படித்தவர்கள் புரிந்து கொள்வீர்கள் என்று அந்த இராணுவ அதிகாரி சொன்ன பொழுது யாழ்ப்பாணத் தமிழ் அரச அதிகாரிக்கு உண்மை விளங்கியது. காலங்கள் யாருக்

காகவும் காத்திருப்பதில்லை யாழ்ப்பாண மக்கள் திறந்த சிறைச்சாலைக்குள் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். காலத்தின் மாற்றத்துக்குக் காத்திருப் பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியே இல்லை.

அகதி முகாமில் சந்தித்த பிறகு சாந்தா வீட் டுக்கு வரவே இல்லை. ''நீ சாந்தா வீட்டுக்கு போக வில்லையா? ப்ரியா!''

''நாலைந்து நாள் போய்விட்டேன் வருவதாகச் சொன்னாள் ஏனோ வரவில்லை?''

''கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்றிலிருந்து வேலையை ஏற்றுக்கொள்ளும்படி நியமனக் கடிதம் வந்திருக்கு; உடனே போகவேண்டும் அதற்கு முதல் சாந்தாவைப் பார்க்க வேண்டும் கூட்டி வருகி றாயா? இன்று இல்லாவிட்டாலும் நாளைக்காவது வரச்சொல்லு. அதன்பிறகு என்னைச் சத்திப்பது எப்போது என்று சொல்ல முடியாது.''

அகதி முகாமில் மகள் சங்கரோடு பழகியவிதம் தாய்க்குச் சந்தேகத்தைக் கொடுத்தது ஆனால் மகளைக் கேட்கவில்லை. முகாமில்இருந்து வீட்டுக்கு வந்தபின் ப்ரியா வீட்டுக்குப் போகப் புறப்பட்ட போது வேண்டாம் என்று தடுத்தாள். ''பரீட்சை எல்லாம் முடிந்துவிட்டது தானே இனி ஏன் அங்கே போகிறாய்?'' என்று கேட்ட பொழுது அவளால் பதில் சொல்ல முடியவில்லை. ப்ரியா பலமுறை அழைத்த போதும் வருவதாகச் சொல்லி விட்டுப் போகாமல் விட்டுவிட்டாள்.

நான் சங்கரை விரும்புவது ஓரளவுக்கு அம்மா வுக்கும் தெரிந்திருக்கும் என்று ஊகித்தாள்.

ஒருநாள் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தாயிருக்கும் அறைக்குள் வந்தவள் கதவை மெல்லச் சாத்திப் பூட்டினாள்.

''அம்மா''

''என்ன?''

''விமலை எனக்கு மணந்து கொள்ள விருப்ப மில்லை!''

''அதைத்தான் சொல்லிக் கொண்டிருக் கிறாயே!''

''அவர் மது பாவிப்பவர் என்பது மட்டும் காரணமில்லை.''

''அப்போ?''

''ப்ரியாவின் அண்ணா சங்கரை நான் விரும்பு கிறேன்.''

''நான் நினைத்தேன் நீயே சொல்லட்டும் என்று பேசாமல் இருந்தேன்.''

''விமலின் திருமணப் பேச்சு எடுக்க முன்பே நான் சங்கரை விரும்பி விட்டேன். அவரையே நான் திருமணம் முடிக்க விரும்புகிறேன் நான் மனநிறை வோடு வாழ வேண்டும் என்று நீ விரும்பினால் சங்கரையே மணமுடித்து வை!''

''ஒரு தாய் தன்பிள்ளை சந்தோசமாக வாழ் வதைத்தான் விரும்புவாள். நீ சங்கரை மணந்து கொள்வதில் எனக்கு மறுப்பே இல்லை. அவன் நல்ல பிள்ளை தான். ஆனால் நான் மட்டும் சம்மதித்து

என்ன பயன்? வீட்டில் மற்றவர்கள் சம்மதிக்க வேண்டுமே முக்கியமாக உன் சின்னக்கா மதனாவின் திருமணமே உன்கையில் தான் தங்கி இருக்கு.''

''அது எனக்கு விளங்குதம்மா.''

என் நிலமையை நீ கொஞ்சமாவது தெரிந்துகொள் ளம்மா! கோயில் முகாமில் இருந்து வீட்டு உடுப்பு களை எடுக்க வந்திருந்தேனே அன்று நடந்தது உனக்கே தெரியாதம்மா.''

''நீ என்ன சொல்கிறாய் ஏதாவது............?''

''நீ நினைப்பதுபோல் ஒன்றுமே நடக்கவில்லை. அப்படி நடந்திருந்தால் இப்போ நான் உன்னைக் கேட்டுக் கொண்டிருக்கத்தேவையில்லை.''

''எல்லோருமே சங்கரைத் தான் மணந்து கொள்ளச் சொல்வார்கள். அப்படி பொய்சொல்லி அவரை மணந்து கொள்ளலாம் தான் ஆனால் அது எனக்குக் கெட்டபெயர் வந்துவிடும் என்பதற்காக அல்ல.'' ''சங்கரின் சுயகெளரவத்தை பாதிக்கும் அவர் உங்களை தலைநிமிர்ந்து பார்க்கக் கூச்சப்படு வார் என்னுடைய பெண்மையும் தன்மனமும் உங் கள் எல்லோருடைய பார்வையிலும் கேவலமாகத் தெரியும்.''

''அன்று என்ன நடந்தது அதைச் சொல்லு.''

நடந்ததை ஒழிக்காமல் முழுவதையும் சொன்ன பொழுது தாய் உண்மையில் சங்கரை உயர்வாகவே நினைத்தாள்.

''ஒரு இரவு முழுவதும் ஒரு ஆண்பிள்ளைக்கு

அருகில் தூங்கி இருக்கிறேன். தாய் என்றபடியால் நீ நம்புவாய் மற்றவர்கள் நம்புவார்களா?''

''நெருப்பையும் பஞ்சையும் பக்கத்துக்கு பக்கம் வைத்தால் பற்றிக் கொள்ளாமலா இருக்குமென்று பட்டென்று கேட்பார்கள் அதனால் தான் பாடசாலை முகாமில் இருந்தேன் என்றி பொய் சொன்னேன்; நீ என்னை நம்புகிறாயா அம்மா?''

''நம்புகிறேன். உனக்கும் சங்கருக்கும் திருமணம் நடப்பதாக இருந்தால் உன் சின்னக்கா மதனாவின் திருமணம் நின்றுபோகும். எங்க குடும்ப நிலை உனக்குத் தெரியும். இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. உனக்கு விருப்பமில்லாத திருமணத்தை முடித்துவைத்த பாவம் எனக்கு வேண்டாம். என்ன செய்ய வேண்டும் என்று நீயே முடிவு செய்துகொள். நீ எடுக்கும் முடிவை நான் மாற்றிக் கொள்ளச் சொல்லமாட்டேன். நீயும் என் பிள்ளைதான் மதனாவும் என்பிள்ளை தான் ஒன்று வாழ ஒன்று கண்ணீர்விட எந்தத் தாயும் விரும்பமாட்டாள்.''

சங்கர் எந்தச் சீதனத்தையும் எதிர்பார்க்கமாட்டார். வெறுங்கையோடு போனாலும் அவர் என்னை ஏற்றுக்கொள்வார் அம்மா! தாலிக்கொடி உட்பட கல்யாணச் செலவெல்லாவற்றையும் அவரே பார்த்துக் கொள்வார்.

''அது தான் சொல்லி விட்டேனே உன் விருப்படி செய்யென்று உன் அப்பாவிடமோ மற்றவர்களிடமோ உனக்காக கதைக்க முடியாமல் இருக்கிறேன். இதற்குமேல் நான் என்ன செய்யலாம் என்று சொல்லு. உன்னையும் பத்து மாதம் சுமந்து தான் பெற்றேன். ஒருவருக்கும் சொல்லாமல் சங்கருடன் போக முடிவு செய்தால் கூட இப்பவே உன்னைத் தாயாக இருந்து ஆசீர்வதிக்கிறேன் சாந்தா! இதுக்கு மேல் நான் என்ன செய்யமுடியும்.''

''அம்மா!'' என்று கதறியபடி தாயைக் கட்டிப் பிடித்து ஓவென்று அழுதாள்.

பிள்ளைப் பாசத்துடன் மார்போடு அணைத்தவள் கண்களிலும் ஈரம் கசிந்தது.

காலடிச் சத்தம் கேட்டு அவசரமாக சேலைத் தலைப்பால் சாந்தாவின் கண்களைத் துடைத்து விட்டு தன்முகத்தையும் துடைத்துக் கொண்டாள்.

கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்று விட்டாள் தாய்.

அம்மாவால் இதற்குமேல் உதவமுடியாது. மதனாவின் வாழ்வா என் வாழ்வா என்று முடிவு செய்ய முடியாமல் மனம் தவித்தது. வாழத்துடிக்கும் மதனாவின் முகம் மனக்கண் முன்னே வந்து அவளிடம் கையேந்தி நின்றது.

நானும் ஒருபெண் எனக்குஆசைகள் இல்லையா? உணர்ச்சிகள் இல்லையா? சங்கருடன் இவ்வளவு தூரம் பழகியபின் வேறு ஒருவருடன் மனத்தாலும் உடலாலும் என்னால் வாழ முடியுமா?

தலை விண்விண் என்று வலித்தது.

"முருகா! ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? எந்த ஒரு உயிருக்கும் தீங்கு நினைக்காத என் மனதை ஏன் வேதனைப்படுத்துகிறாய்? எல்லா உயிரும் உன் படைப்பென்றால் நானும் உன் படைப்புத்தானே எனக்கொரு வழிகாட்டமாட்டாயா?" கண்களும் மனமும் சோர்ந்து போகக் கட்டிலில் சாய்ந்து கொண்டாள்.

"சாந்தா! என்னடி பகலில் தூக்கம் எழுந்திரடி!"

விழித்துக் கொண்டவள் கையை நீட்டினாள் ப்ரியாவை நோக்கி. களைந்திருந்த அவள் ஆடைகளை சீர்செய்து விட்டு கையைப் பற்றி நிமிர்த்தினாள்.

"ஏன்டி ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?"

"எல்லாம் கல்யாணப் பிரச்சினை தான்."

"என்ன முடிவு செய்தாய் சங்கரா? மாமா மகனா? என்று தானே."

"உன்நிலையைப் பார்த்தால் எனக்கே சங்கடமாய் இருக்கு எடுக்கிற முடிவை நாளைக்கிடையில் எடு."

"ஏன்?"

"சங்கர் நாளை மாலை கொழும்புக்கு வேலையைப் பொறுப்பேற்கப் போகிறான். போக முன்பு உன்னைச் சந்திக்க விரும்புகிறான் வாறாயா?"

''சங்கரைச் சந்தித்து எந்தப்பதிலைச் சொல்ல? சங்கருக்குச் சாதகமான பதிலைச் சொல்லா விட்டால் அவருக்கு ஏமாற்றமாக இருக்காதா?''

''கண்டிப்பாக அவனுக்குப் பெரிய ஏமாற்ற மாகத்தான் இருக்கும்; மனம் இடிந்து போவான்: உன்மேல் உயிரையே வைத்திருக்கிறான்.''

''ஆண்கள் தான் பெண்களை ஏமாற்றுவதாக கதைகளில் படித்திருக்கிறேன் பெண்பாவத்தைக் கதாநாயகன் சம்பாதித்துக் கொண்டான் என்று வாசிக்கும்போது நெஞ்சுக்கு வேதனையாக இருக்கும்.''

''நான் சங்கரின் மனதில் ஆசைகளை வளர்த்து விட்டு ஏமாற்றுவதால் ஆண்பாவம் எனக்கு வராதா?''

''ஆண்பாவம் என்று ஒன்று இல்லையா?''

''இது ஒரு சிக்கலான கேள்வி எனக்குப் பதில் தெரியவில்லை.''

''நீ நாளைக்கு வருவியா? இல்லையா? அதைச் சொல்லு.''

''வந்து என்ன செய்வது?''

''இது என்னடி கேள்வி? ஒன்றும் சொல்லா விட்டாலும் வழி அனுப்பவாவது வரக்கூடாதா?''

''சரி இன்று வருகிறேன்.''

"சங்கர் அவள் பின்னேரம் வருவாள். ஆனால் அவள் மனதை நோகச் செய்யாதே கவலையே

அவளுக்குப் பெரிய நோயாகிவிடும். பெண்ணாய்ப் பிறந்தது போதும். அவள் மனம் படும் பாடும் போதும் மனம் என்ற ஒன்றை ஏன்தான் இறைவன் படைத்தானோ தெரியவில்லை? வேதனை தான் வாழ்க்கையின் பெரும் பகுதியை விழுங்கி விடுகிறது. அவள் மனம்ஆறுதல் அடையும்படி நடந்துகொள்.''

ப்ரியாவின் வார்த்தைகளினால் அவன் மனம் குழம்பினாலும் நிதானமாகச் சிந்தித்தான். அவள் வந்தால் எப்படிக் கதைப்பது என்ற எல்லைகளை வரைந்து இறுதியான முடிவுக்கு வந்தவன் மனதில் எழுந்த எதிர்வாதச் சிந்தனைகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தெளிவுபெற்ற மனதுடன் எழுந்து குளியலறைக்குச் சென்றான்.

''வா சாந்தா! இப்படி உட்கார்!''

''சில விசயங்களை மனம் விட்டுப் பேசுவது இருவருக்கும் நல்லது என்று நினைக்கிறேன். உன்னுடைய நிலை எனக்குப் புரிகிறது. அப்பா, அம்மா சகோதரங்களுடைய எதிர்பார்ப்புகள் தவிர்க்கமுடியாதபடி அவர்களுக்கு விருப்பமான ஆனால் உன் மனதுக்கு விருப்பமில்லாத முடிவை நீஎடுக்கவேண்டி வரலாம். முக்கியமாக உன்னுடைய இரண்டாவது அக்காவுடைய திருமணம் உன்னுடைய முடிவில் தான் தங்கி இருக்கிறது. நான் சொல்வது சரியா சாந்தா?''

''என் நிலையைச் சரியா புரிஞ்சிருக்கிறீங்க!''

''நீ உன் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கவேண்

டும் என்று விரும்பி எடுக்கும் முடிவு உன் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுடைய சுயநலப்பார்வையில் வெறுப்பு நிறைந்திருக்கும் என்று எனக்குப் புரிகிறது உன்னுடைய மாமா மகனைத் திருமணம் முடிக்க நீமுடிவெடுத்தால் எனக்கு ஏமாற்றமும் கவலையும் இருக்கும் தான்.''

''எனக்கு நானே பொய் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் உன் வாழ்க்கையில் நான் ஒரு தடைக்கல்லாகவோ, உன் வாழ்க்கைக்கு எதிரியாகவோ என்றுமே இருக்க மாட்டேன்; சாந்தா! இது நான் உன்மேல் வைத்திருக்கும் உண்மையான அன்பின் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். நேசிக்கப்பட்ட இதயத்தை துன்பப்படுத்துவது செலுத்தப்பட்ட அன்பில் எங்கோ குறைபாடு இருந்தால் தான் நடக்கும்.''

''மூன்றாம் தர மனிதர்களைப் போல் எனக்குக் கிடைக்காத பொருள் மற்றவருக்கும் கிடைக்கக்கூடாது என்று சிந்திக்க என் இதயத்தால் முடியாது. எந்த நிலையிலும் நீ என்னைத்தான் கல்யாணம் முடிக்கவேண்டும் என்று நான் வற்புறுத்த மாட்டேன். உன் மாமா மகனைத் திருமணம் முடிப்பதில் ஏதாவது தடைகள் ஏற்பட்டால் என் இதயத்தைத் தேடிவா. உன்மேல் உள்ள பழைய அன்பு மாறாமலே என் உள்ளம் உன்னை இருகரம் நீட்டி அணைத்துக் கொள்ளும்.''

''நீ எனக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக நான் உன்மேல் வைத்திருக்கும் அன்பு என்றுமே

அழிந்து விடாது. அது என்றுமே என் இதயத்தில் மங்காமல் வாழ்ந்து கொண்டே இருக்கும். இந்த மண்ணில் இருந்து நான் மறையும்வரை.''

''சாந்தா! உன் நினைவாக என்னிடம் இருப்பது உன்னுடைய இந்த ஒரே ஒருபடம் தான் நீசம் மதித்தால் நான் வைத்துக் கொள்கிறேன்.''

''சங்கர் இந்தப் படத்தால் என் வாழ்வில் புயல் வீசாமல் இருக்குமானால் நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள் எனக்கு ஆட்சேபனை இல்லை.''

''உன் மனதில் ஒரு சந்தேகப்பொறி கூட எழுவதை என்மனம் விரும்பவில்லை இந்தப் படத்தை நீயே எடுத்துக்கொள்.''

''எப்பவாவது உன் மனம் நோகும்படி நான் நடந்திருந்தால் தயவு செய்து என்னை மன்னித்து விடு சாந்தா!''

சங்கர்! உங்களையும் உங்கள் இதயத்தையும் எனக்குத் தெரியும்! என்மனம் நோகும்படி என்றுமே நடந்ததில்லை; தப்பாக நடப்பதற்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருந்தன; ஆனால் எவ்வளவு கண்ணியமாகவும் பண்போடும் நடந்து கொண்டீர்கள் என்று என் இதயத்துக்குத் தெரியும்! நீங்கள் மன்னிப்புக் கேட்பதற்கே இடமில்லை. அப்படி நான் மன்னிப்பதாகச் சொன்னால் அது என் இதயத்தின் பலவீனமாகத்தான் இருக்கும். என் நிலையைச் சொல்லி உங்களிடம் அனுதாபம் பெற வேண்டிய தேவையே இல்லை. மற்றவர்களுடைய மனதைப்

புரிந்து கொள்ள முடியாதவர்களிடம் தான் அனுதாபத்தை எதிர்பார்க்க வேண்டும்.''

''எனக்காக எவ்வளவோ செய்திருக்கிறீர்கள் கடைசியாக ஒன்று செய்வீர்களா?''

''அதை நீ சொன்ன பிறகுதான் பதில் சொல்ல முடியும்.''

''நீங்க வேறு ஒரு பெண்ணைத் திருமணம் முடித்து வாழவேண்டும் என்று என் மனம் விரும்புது.''

''உன் மனம் விரும்பலாம் ஆனால் என்மனம் விரும்பவேண்டுமே. மனதில் ஒரு வாழ்க்கையும் உடலால் இன்னொரு வாழ்க்கையும் வாழ என்னால் முடியாது; இப்படிச் சொல்வதினால் என்னைக் கோழையாக நீ நினைத்தால் நான் கோழையாகவே இருந்து விட்டுப்போகிறேன். உன்பாதையை வகுத்த பிறகு என் பாதையை வகுக்க உனக்கு உரிமை இல்லை!''

''உன்நிலைமை வேறு; என் நிலைமை வேறு. உன் இதயம் விலை பேசப்பட்டிருக்கிறது என் இதயம் ஒரே ஒரு நினைவுடன் சுதந்திரமாக இருக்கிறது. அதற்கு விலங்கு போட நான் விரும்பவில்லை; அது என்றும் உன்நினைவுடன் மட்டுமே வாழும்!''

''சங்கர்! நீங்க வாழாமல் இருப்பது என்மனதிற்கு வேதனையைத் தரும் இல்லையா?''

''உன்னைத் திருப்திப்படுத்துவதற்காகவும் உன் மனம் சந்தோசப்படவேண்டும் என்பதற்காகவும்

இப்போது உனக்கு நான் திருமணம் முடித்துக்கொள் கிறேன் என்று சொல்லலாம். அது பொய்யாகத் தான் இருக்கும்; உன் உள்ளத்துக்குப் பொய்சொல்ல என்மனம் விரும்பவில்லை; பொய் சொன்னாலும் பின்னால் தெரியவரும் போது என்னை நேர்மை யில்லாதவன் என்று நினைப்பாய். நீ அப்படி நினைப் பதை நான் விரும்பவில்லை.''

''உங்களை மறந்து என்னால் வாழ முடியும் என்று நினைக்கிறீர்களா?''

''நெஞ்சின் அலைகள் ஓய்வதும் இல்லை;

அன்பின் நினைவுகள் தூங்குவதும் இல்லை!''

''இறைவன் விரும்பினால் உன்னோடு என்வாழ்வை இணைக்கட்டும். விதியை யாரால் மாற்ற முடியும்? உனக்கு ஏதாவது தேவை என்றால் தயங்காமல் ப்ரியா மூலம் எழுது; அனுப்பி வைக்கிறேன். உனக்கு என்னால் உதவமுடிகிறதே என்று என்மனதுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும். எழுதுவாயா?''

''உங்க மனதுக்கு கொஞ்சமாவது ஆறுதலாக இருக்குமானால் கட்டாயம் எழுதுகிறேன்.''

''ப்ரியா உன்னைச் சிநேகிதியாக என்னிப்பழக வில்லை ஒரு சகோதரியாகத்தான் பழகினாள். அவளை அடிக்கடி சந்திக்க மறக்காதே நானும் போனபிறகு தனித்துப் போவாள்.''

''சாந்தா! உன் திருமணத்துக்கு நான் வரமுடி யாமல் போகலாம்; இப்பொழுதே மனப்பூர்வமாக

வாழ்த்துகிறேன். நாளை கொழும்பு பயணம். போய் வருகிறேன்.''

''தன் இதயமே தன்னை விட்டுப் போவதைப் போல் இருந்தது. பசுமையான நினைவுகளை மட்டும் தன்னிடம் விட்டுப் போய்க் கொண்டிருக்கும் அவன் போவதை மட்டும் பார்ப்பதைத் தவிர வேறு எதையுமே அவளால் செய்யமுடியவில்லை. துயரமெல்லாம் ஒன்று சேர்ந்து இரும்புக்குண்டாக மனதை அழுத்தியது. உணர்ச்சிகளுக்கு வரம்புகட்டி எவ்வளவு பண்போடு பழகிய உள்ளத்தை இழந்து விடுகிறேனே! முருகா'! என் உள்ளம் உடைந்து போகாமல் காப்பாற்று!''

வள்ளி மணாளனை மனமுருகக் கண்களை மூடிப் பிரார்த்தனை செய்தாள்.

''சாந்தா, என்ன சொன்னான்.''

''உன்னை அடிக்கடி வந்து சந்திக்கச் சொன்னார்.

அதைக்கேட்கவில்லை; உங்க இருவரைப்பற்றியும் என்ன தீர்மானத்துக்கு வந்திருக்கிறான்.''

''என் நிலைமையைத் தெளிவாகப் புரிந்திருக்கிறார். என் விருப்பப்படியே நடக்கும் படியும் தான் என் வாழ்க்கையில் தடைக்கல்லாக இருக்க மாட்டேன் என்று சொன்னார். திருமணம் நடக்கும் முன்பே வாழ்த்துக் கூறிவிட்டார்.''

கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

கனவுகள் கதைகளாகவே போய்விட்டன. நாங்கள்

விரும்புவது போல் நடக்கும் என்று எதிர்பார்த்தது எங்கள் தவறு தான்.

இப்படித்தான் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புவதற்கு மட்டும் தான் எங்களால் முடியும். ஒவ்வொருவருக்கும் இப்படித்தான் வாழ்வு என்று முடிவு செய்வது இறைவன்.

மூன்றாம் ஆள்; என்னால்கூட பிரிவைந் தாங்கிக் கொள்ள முடியவில்லை நீங்கள் இரண்டு பேரும் எப்படித்தான் தாங்கிக் கொள்ளப் போகிறீர்களோ? ஒருவரை ஒருவர் விரும்பச் செய்தது கடவுள் என்றால் ஏன் பிரிக்க வேண்டும்? விரும்பாமல் செய்திருக்கலாமே! கடவுள் இருப்பதிலேயே சந்தேகம்தான் வருகிறது சாந்தா!''

''கல்யாணத்தில் முடியும் என்று எவ்வளவு ஆனந்தத்தில் இருந்தேன். விரக்தி மட்டும்தான் மிஞ்சி இருக்கு. பிறந்த உடன் இறந்து போவது எவ்வளவோ மேல்; வளர்ந்த பிறகு கனவுகளுடன் வாழ்ந்த பிறகு சீ என்ன வாழ்க்கை......................''

''என்ன புறப்பட்டாயா? சங்கரும் போய்விடுவான். நீயும் போகிறாய். தனித்துப் போகவேண்டி''

ப்ரியாவின் கையைப் பரிவோடு பற்றிக்கொண்டாள்.

''சங்கருக்குப் பக்கத்தில் மட்டுமல்ல உனக்குப் பக்கத்திலும் இருக்கலாம் என்று ஆசைப்பட்டேன் எல்லாம்.................''

''அடிக்கடி வந்தால் சங்கரோடு பழகிய நினை வுகள் வந்து மனதை உறுத்தும். உனக்காவது ஆறு தலாக இருக்கும் வருவேன் ப்ரியா.''

"என்ன சங்கர் தலையை வலிக்கிறதா?''

''ப்ரியா! எங்கள் இரண்டு பேருடனுமே துன் பம் நின்றிருக்கக்கூடாதா. உன்னையும் பிடித்துக் கொண்டது.

''சாந்தாவை வீட்டுக்குக் கூட்டி வந்து உங்க இருவருக்கும் இடையே அன்பு வளர்வதற்கு நான் தானே காரணம். பிரிவில்வரும் துன்பத்தில் எனக்கு மட்டும் எப்படி பங்கு இல்லாமல் போகும்?

எங்க மூன்று பேரையும் தவிர வேறு எவருக் குமே இந்த விசயம் தெரியாமல் போனது எவ்வளவு நல்லது. இல்லாவிட்டால் சாந்தாவின் வாழ்வு நரக மாகிப் போயிருக்கும். எங்க மூன்று பேருக்குள் ளேயே இந்த விசயம் புதையுண்டு போகட்டும்; என் னால் எந்தச்சந்தர்ப்பத்திலும் வெளிவராது. நீயும் கவனமாக இரு. நான் தான் வாழாவிட்டாலும் அவளாவது வாழட்டும்.''

''சாந்தாவால் சந்தோசமாக வாழ முடியும் என்று நீ நினைக்கிறாயா?''

''இல்லை. எனக்குத் தெரியும்! ஆனால் எத்தனை பெண்கள் தாங்கள் விரும்பியவனை மணம் முடிக் காமல் வேறு ஒருவருடன் வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள் உனக்குத் தெரியுமா?'' ''அதுபோல் சாந்

தாவும் வாழட்டும் அந்த வாழ்க்கையாவது அவளுக் கிடைக்கட்டும்!''

''சாந்தா இங்கே வராவிட்டால் நீ அவள் வீட் டுக்கு போ அவள் மனம் சோர்ந்து விடாமல் விரக்தி அடையாமல் பார்த்துக்கொள். நான் போனபிறகு வீட்டில் உனக்கும் தனிமை தான். கொழும்பு வாழ்க்கை எப்படி அமையுமோ தெரியவில்லை. எல் லாம் அவரவர் விதிப்படிதான் நடக்கும்.''

''பஸ்ஸுக்கு நேரமாகிவிட்டது. போய்விட்டு வாறேன் ப்ரியா.''

கைகளுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள். அவள் தோளைத் தொட்டு அணைத் துக் கொண்டவன் ''அழுவதினால் ஒன்றுமே நடப் பதில்லை ப்ரியா! மனதைத் தேற்றிக்கொள். ஒரு தங்கையாய் மட்டுமில்லை ஒரு தோழியாகக் கூட இருந்தாய். சூழ்நிலைக்கு ஏற்றதாக மனதைப் பழக்கி வாழப் பழகிக்கொள்! கொழும்புக்குப் போய் கடிதம் போடுகிறேன். உனக்கும் சாந்தாவுக்கும் ஏதாவது தேவை என்றால் எழுது; வாங்கி அனுப்பு கிறேன் அப்பாவுடன் கதைத்து உன் திருமணத்தை யாவது விரைவாக முடித்து வைக்க முயற்சிக்கப் போகிறேன் அது தான் நான் உனக்குச் செய்யக் கூடிய உதவியாக இருக்கும். அண்ணாவும் அக்காவும் நான் இருக்கிறேன் என்றுதான் உன்கல்யாணத்தைப் பற்றி யோசிக்கவில்லை இப்போ என்தடை உனக்கு விலகிவிட்டது; அக்காவின் கல்யாணத்தை அண்ணா செய்து வைத்தார். உன் கல்யாணத்தை நான்

செய்துவைக்கிறேன். என்னவோ நீ என்னோடு சண்டைபிடித்துக் கொண்டிருந்தாலும் என்னோடு பழகியதுபோல் அண்ணாவுடனும் அக்காவுடனும் பழகவில்லை. அண்ணாவுக்கும் அக்காவுக்கும் இடையில் பாசப்பிணைப்பு உனக்கும் எனக்கும் இடையில் இருந்ததுபோல் இருக்கவில்லை என்னவோ அண்ணா தங்கை என்ற பிறப்பு உறவு தான் இருந்தது. நீயும் நானும் அடிபட்டு பேச்சுப்பட்டுக் கொண்டு இருந்தோம். நான் கொழும்புக்குப் போன பிறகு தான் உன்னுடைய அருமை எனக்குத் தெரியவரும். என்னுடைய அருமை உனக்குத் தெரியவரும். கொழும்பில் வசதியாக வீடு கிடைத்தால் உன்னையும் அம்மாவையும் கூட்டிக்கொண்டு போகிறேன் அதுவரை பொறுமையாய் இரு.''

''கொழும்பில் கதைப் புத்தகங்கள் வாங்கி அனுப்பு! கேட்டதற்காக ஒரு புத்தகத்தை வாங்கி அனுப்பி விட்டு பேசாமல் இருந்து விடாதே!''

''சரி! பத்துப் பதினைந்து வாங்கி அனுப்புகிறேன்.

அம்மா! போயிட்டு வாறேன்.''

''எல்லாம் எடுத்துக் கொண்டாயா? பத்திரமாய் போயிட்டு வா. போன உடனே கடிதம் போடு! மறந்து விடாதே!''

சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

குனிந்து தாயின் காலைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

பிறந்தது முதல் தாயைப் பிரியாதவனின் இத யம் சோகத்தில் கனத்தது.

''ப்ரியா! அம்மாவைக் கவனமாகப் பார்த்துக் கொள் கிணற்றில் தண்ணீர் அள்ளவிடாதே.''

''அம்மா! ப்ரியாவை அடிக்கடி கோயிலுக்குக் கூட்டிப் போங்க.''

வாசல் வரை வந்து ப்ரியாவும் அம்மாவும் அவனை வழியனுப்பினார்கள் கலங்கிய கண்களுடன்

பஸ் புகையிரத நிலையத்தை நோக்கி விரைந் தது.

புகைவண்டியில் பிரயாணிகள் தூங்கி வழிந்தா லும் சங்கருக்கு தூக்கமே வரவில்லை. இரவு சாப் பாட்டுக்காக உணவுப் பார்சலை விரித்தவன் தாயின் முகம் வந்து கண்களை மறைத்தது. தாய் செய்து தந்த உணவு சுவையாகவே இருந்தது. இனி எத் தனை நாட்களுக்குப்பின் சாப்பிடப் போகிறேனோ? ப்ரியா சாப்பிட்டிருப்பாளா? அம்மா தூங்கி இருப் பாவா? மீதி விடாமல் முழுவதையும் சாப்பிட்டு முடித்தான்.

அம்மாவும் ப்ரியாவும் என்னைப் போலத்தான் தூக்கம் வராமல் தவிப்பார்கள். எவ்வளவு தூரம் பிரிந்திருந்தாலும் பாசம் எவ்வளவு வலிமை மிக்கது.

''சாந்தா எனக்கு நீ கிடைக்காமலேயே போய் விடுவாயா? என்னுடன் பழகிய நினைவுகளை உன் னால் மறந்து போய் விடத்தான் முடியுமா? இந்தப் பயணம் உனக்கும் எனக்கும் இடையில் ஏற்பட்ட

வாழ்க்கைப் பயணத்தை பிரித்து விடுமோ நிரந்தர மாக.''

பத்திரிகையில் வந்த விளம்பரத்தைப் பார்த்து அந்தத்தனியார் நிறுவனத்தில் வேலைக்கு விண்ணப் பித்திருந்தான். தந்தைக்கும் அதைப்பற்றி கடிதம் மூலம் அறிவித்திருந்தான். தந்தைக்கு நிறுவனத் தில் வேலை செய்யும் ஒருவரை நன்கு தெரியும்; அவர் மூலம் சங்கருக்கு வேலை கிடைப்பதற்கு ஏற் பாடுகள் செய்தார். வேலையை வந்து பொறுப் பேற்கும்படி வந்த கடிதத்துடன் சங்கர் கொழும்பு வந்தடைந்தான்.

தகப்பன் அவனை புகையிரத நிலையத்தில் வந்து அழைத்துக் கொண்டு போனார்.

அவன் எதிர்பார்த்த படி வேலை ஒன்றும் அவ்வளவு கடினம் இல்லை. வேலையும் அவனுக்குப் பிடித்து விட்டது. அவனுடைய சுறுசுறுப்பும் அவ னுக்கு மேல் உள்ள அதிகாரிக்கும் பிடித்து விட்ட தினால் அவனிடம் அன்பாகப் பழகினார். அவர் தன் னுடன் அன்பாகப் பழகுவதினால் அவரின் பதவிக் குக் கொடுக்கவேண்டிய மதிப்பைக் கொடுப்பதிலும் பணிவாக நடப்பதிலும் மிகக் கவனமாக இருந்தான்.

மெல்லமெல்ல அங்கு வேலை செய்யபவர்கள் எல்லோருடனும் அன்புடன் பழகத்தொடங்கினான். தன்வேலைமுடிந்தபின்நேரமிருந்தால்மற்றவர்களின் வேலையில் உதவினான். அது மற்றவர்களின்வேலை

ப்பழுவைக் குறைப்பதுடன் மற்றவர்களின் வேலைகளையும் தெரிந்துகொள்ளவும் அவனால் முடிந்தது. அவசர விடுப்பில் செல்பவர்கள் சங்கரிடம் வேலைகளை ஒப்படைத்து விட்டுச் செல்வார்கள். அதனால் நிறுவனத்தின் வேலைகள் தாமதமின்றி நடக்க அவனைால் உதவ முடிந்தது. நாதன் என்பவன் அடிக்கடி விடுப்பில் செல்லும்போது சங்கரின் தலையிலேயே அவன் வேலைகள் விழுந்தன. இதை அவதானித்த தலைமை நிர்வாகம் நாதனைப் பலமுறை எச்சரித்தது. ஒருநாள் நாதனிடம் தற்காலிக வேலை நீக்கக் கடிதத்தை கொடுத்த போது அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. தன்னுடைய தவறுகளை ஒப்புக்கொண்டு தலைகுனிந்து நின்றான்.

குறித்த நேரத்தில் வேலைக்கு வருவதில்லை, வேலைக்கு வருவதில் ஒழுங்கில்லை, கடமையில் கவனமின்மை, கடமை நேரத்தில் மதுஅருந்திவிட்டு வருதல், தன்னுடைய கடமையை மற்றவர்கள் மேல் சுமத்துதல் நிறுவனத்தின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாகும்படி நடந்தமை போன்ற குற்றங்கள் அவன்மேல் சுமத்தப்பட்டிருந்தன. நிறுவனத்தில் வேலை செய்யும் மற்றவர்கள் எவருமே அவனுக்காக பேச முற்படாமல் தங்கள் கடமைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். சங்கர் அவன் மேசைக்கு வந்த பொழுது பரிதாபமாக அவனைப் பார்த்தான். அவனையும் அழைத்துக்கொண்டு தற்காலிக பதவி விலகல் கடிதத்துடன் தலைமை நிர்வாகியின் அறைக்குள் சென்றான்.

''என்ன வேண்டும் சங்கர்!'' தலைமை நிர் வாகி தான் கேட்டார்.

''ஐயா முதலில் நான் சொல்லப் போவதற் காக என்னை மன்னிக்க வேண்டும். நாதனின் தற் காலிக பதவி நீக்கல் கடிதத்தை ஆறுமாதத்துக்கு இடைநிறுத்தி வைத்தீர்களாயின் உங்களுக்கு நன்றி உடையவனாக இருப்பேன். அதற்கிடையில் நாத னிடம் இருக்கின்ற குறைபாடுகளை என்னால் நீக்க் முடியும் என்று நம்புகிறேன். தயவு செய்து இந்தக் கோரிக்கைக்கு நீங்கள் ஒப்புக் கொண்டு உதவி செய்ய வேண்டும்.''

''சங்கர் நாதனைப் பலதடவை எச்சரித்ததை நீயே அவதானித்திருப்பாய் எனக்கு வேறுவழி இல்லாமல் இந்த முடிவுக்கு வந்தேன். மேலிடத் துக்கு விசயம் தெரியவந்தால் என் பதவிக்கல்லவா ஆபத்து வரும். நானும் குடும்பகாரன் அது ஒருபுற மிருக்க நாதனுக்கு வேலை இல்லாமல் போவதில் எனக்கு என்ன லாபம் இதை நான் மகிழ்ச்சியுடனா செய்கிறேன். நாதன் நிலைமையை புரிந்துகொள்ளா ததற்கு நான என்ன செய்ய முடியும்? நாட்டில் எத் தனையோ பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். வேலை எடுப்பது எவ்வளவு கடினம் என்பது நாத னுக்குத் தெரியாதா? தெரிந்து ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்.''

''சங்கர் நீ நேர்மையாகவும் உண்மையாகவும் வேலை செய்வது எனக்குத் தெரியும். நீ என் மகன்

மாதிரி இருக்கிறாய். விடுமுறை நாட்களில் கூட அவசர வேலைகளை முடிக்க வேண்டும் என்பதற்காக என் அழைப்பை ஏற்றுக்கொண்டு வந்து உதவி செய்திருக்கிறாய். அதனால் நிறுவனத்துக்கு பல லட்சம் ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. மேலிடத்திற்கும் அறிவித்திருக்கிறேன். அவர்களும் பின்பு கவனிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். எவ்வளவு பொறுப்பாய் நீ நடந்து கொள்கிறாய். நாதனும் உன் வயதுதானே. உனக்காக ஆறுமாத காலத்துக்கு ஒத்திவைக்கிறேன் அதன் பிறகு என்னைக் குறை சொல்லக்கூடாது!

நாதன் போய் வேலையைச் செய்.''

தலைமை நிர்வாகியிடம் நன்றியைச் சொல்லி விட்டு தன்மேசைக்கு வந்தான் சங்கர்.

மாலைவேலை முடிந்ததும் சங்கர் நாதனையும் அழைத்துக்கொண்டு நேநீர்க் கடைக்குள் நுழைந்தான்.

நாதனுக்குப் பல்வேறு புத்திமதிகளைச் சொன்னான். அவனும் சங்கர் சொல்வதை மௌனமாகக் கேட்டுக்கொண்டான். அவன் குடிப்பதற்கான காரணத்தையும் அவன் மூலமாகவே கேட்டுக் கொண்டான்.

நாதன் நீ என்கூட ஒரே அறையில் வந்துதங்கினால் உனக்குப் பல வசதிகள் இருக்கும். வருகிறாயா!'' என்று கேட்டபொழுது மறுக்காமல் உடனே ஒப்புக் கொண்டான்.

இருவரும் பஸ்ஸில் நாதனின் அறைக்குச் சென்ற போது சங்கர் வாயடைத்துப் போனான். இவ்வளவு மதுப்புட்டிகளா? இவ்வளவையும் குடித் திருக்கிறானா? பிரமித்துப்போனான்.

''என்ன சங்கர்! போத்தல்களைப் பார்த்து வாயடைத்துப் போனாயா? எல்லாம் என்னுடைய கஷ்டகாலம் உன்னைப் போல் ஒருவனை எப்பவோ சந்தித்திருந்தால் இவ்வளவு போத்தல்களும் இங்கே இருந்திருக்காது. நல்ல புத்திமதிகள் சொல்ல நல்ல வன் ஒருவன் என்கூட இல்லாததினால் குடித்துக் கெட்டுப் போனேன்.''

''முடிந்து போனதை நினைத்து என்னபயன் இனி நடப்பதாவது நல்லபடியாக நடக்கமுயற்சி செய் நாதன்''

இவ்வளவு போத்தல்களையும் ஒரு பொதிகள் அனுப்பும் லொறியில் போட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவை. ஒரு நாள் இவ்வளவு போத்தல் மதுவை யும் நானா குடித்தேன் என்று நீயே நினைத்து ஆச் சரியப்படும்படி உன்னை மாற்றுகிறேன் நீ என்னு டன் ஒத்துழைத்தால்''

''அப்படியே செய்கிறேன் சங்கர்''

அவசியமான பொருட்களைஎல்லாம் சங்கரின் உதவியுடன் ஒருசாவு பெட்டிக்குள் போட்டுக் கொண்டு பஸ்சில் சங்கரின் அறைக்கு வந்தான் நாதன்.

பெரிய ஒரு அறைதான் ஆனால் அழகாக வைத் திருந்தான்.

இரவில் தங்குவதற்காக கூடுகளை நாடிவரும் பறவைகள் போன்றதே கொழும்பில் உள்ள திருமண மாகாத தமிழ் இளைஞர்களின் வாழ்க்கை.

நாதனின் மனநிலையைப்புரிந்து கொண்ட சங்கர் ஒரே அடியாக மதுகுடிப்பதை நிறுத்துவது கடினம். நிறுத்துவதும் நல்லதல்ல என்பதால் சிறித ளவு மது அருந்தும்படி சொன்னான்.

கண்களால் நன்றி சொல்லிவிட்டுத் தன்அறை யில் இருந்து கொண்டு வந்த போத்தலில் இருந்து சிறிதளவு பருகிவிட்டு இரவுச் சாப்பட்டையும் முடித்துக் கொண்டான்.

காலை ஞாயிற்றுக்கிழமையாக இருந்ததால் நாதனையும் அழைத்துக்கொண்டு டாக்டரிடம் போய் விபரங்களைச் சொல்லி அவரிடம் ஆலோச னையும் கேட்டு உடம்பையும் சோதித்து மருந்தை யும் வாங்கிவந்தார்கள் வேலை விட்டால் தங்கு மறை, தங்குமறை விட்டால் வேலை செய்யுமிடம் என்று கிரமமாக நடந்து கொள்ள நாதனுக்குப் பழக்கப்படுத்தினான். முதலில் கொஞ்சம் அவன் சிரமப்பட்டான் நாட்கள் செல்லச் செல்லப் பழகிக் கொண்டான்.

அவனுடைய மாற்றத்தைக் கண்டு தலைமை நிர்வாகி முதல் நிறுவனத்தில் வேலைசெய்த மற்ற எல்லா ஊழியர்களும் ஆச்சரியப்பட்டர்கள். நாத னின் முகத்துக்கு நேரே சங்கரை எல்லோரும் பாராட்டினார்கள். சங்கர் பாராட்டுகளை எல்

லாம் நாதனின் பக்கம் திருப்பிவிட்டான்'' ஊசி ஆடாமல் இருந்தால் தான் நூலைக்கோக்க முடியும்! நாதன் ஒத்துழைக்காமல் விட்டிருந்தால் என்னால் எதுவுமே செய்திருக்கமுடியாது. பலநாள் பழகுவதி னால் வருவதே பழக்கம். நாங்கள் தேநீர் குடிக்கி றோம் இல்லையா சிலநேரம் தேநீர் குடிக்காவிட் டால் சிலரால் வேலை செய்வதே கடினமாக இருக்கிறது. இல்லையா? அதுவும் ஒரு பழக்கம் தான். தினமும் மதியம் சோறு சாப்பிடுகிறோம். இல் லையா? அது இல்லாமல் எங்களால் இருக்கமுடிகி றதா?அதுவும் ஒரு பழக்கம் தான். சிலபேர் சிகரட் குடிக்கிறார்களே அது இல்லாமல் அவர்களால்இருக்க முடிகிறதா அதுவும் ஒரு பழக்கம்தான் மதுவை அடிக் கடி குடிக்கத் தொடங்கினால் நாளடைவில் அதற் குச் சிலர் அடிமையாகி விடுகிறார்கள் அதை அவர்க ளால் விடமுடிவதில்லை. முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை. என்னால் முடியும் என்ற வைராக் கியம் வந்துவிட்டால் கெட்ட பழக்கம் என்று சமுதா யத்தால் வரையறுக்கப்பட்டவைகளை ஒவ்வொருவரா லும் விட்டுவிடமுடியும்.

அதற்கு நாதன் நல்ல உதாரணம் அவனுடைய வைராக்கியமும், தன்நம்பிக்கையும் தான் அவனை நல்ல மனிதனாக மாற்றியது. பிறக்கும் போதே எவரும் கெட்டவர்களாகப் பிறப்பதில்லை காலமும் நேரமும் சூழ்நிலையும் சேர்கின்றவர்களாலும்கெட்ட பழக்கங்களுக்கு நாம் அறிந்தோ அறியாமலோ மாறிவிடுகிறோம்.''

சங்கர் பேசி முடிக்கத் தலைமை நிர்வாகி உட்பட எல்லோரும் கையைத்தட்டி அவன் பேச்சை ஆமோதித்தார்கள். நாதன் அந்தத் தேநீர் இடைவேளையில்எல்லா ஊழியர்களுக்கும் தேநீரும் வடையும் கொடுத்து தான் திருந்திவிட்ட மகிழ்ச்சியை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டான்.

அந்தத் தற்காலிக நீக்கல் கடிதத்துக்கு இனி அவசியமில்லை அதைக் கிழித்து எறிந்து விடுகிறேன் என்று சொல்லி சங்கரின் கைகளைப் பிடித்துக் குலுக்கினார் தலைமை நிர்வாகி.

''ரொம்ப நன்றி ஐயா!

நாதனுடனும் கைகுலுக்கியவர்.

நாதன் பிழைவிடுவது. மனிதசுபாவம் பிழை என்று தெரிந்த பின்பும் தொடர்ந்து பிழை விட்டுக் கொண்டிருப்பது எவ்வளவு அறிவீனம் கடவுளுக்கு நன்றி சொல் அவர் உன்னை ஆசீர்வதிப்பர்.''

நாதனையும் அழைத்துக் கொண்டு அந்தப் புத்தகக்களஞ்சியத்துக்கு வந்தான்.

''முன்பும் பலபுத்தகங்கள் வாங்கினாய் இப்பொழுதும் வாங்குகிறாய் யாருக்கு சங்கர்?''

''என் தங்கச்சி நிறைப் புத்தகம் வாசிப்பாள் அவளுக்குத்தான்''

''கொடுத்துவைத்த தங்கை. நல்ல ஒரு அண்ணனுடன் பிறந்தாள் அனுபவிக்கிறாள்'' என்று சொல்லிச் சிரித்தான்.

''சாந்தா புத்தகங்கள் வாசித்து முடிந்ததா?

"இல்லை ஏன்?"

"அடுத்ததொகுதிப் புத்தகங்கள்வந்துவிட்டது"

சங்கர் அனுப்பி இருக்கிறரா?

வேறுயார் எங்களுக்கு அனுப்புவார்கள்.

நிறையப் புத்தகங்களை வாங்கி அனுப்புகிறாரே செலவாகி இருக்குமே!"

"உண்மைதான் ஆனால் இந்தப் புத்தகங்கள் இல்லா விட்டால் எங்களுக்குப் பொழுது போயிருக்கதே!"

"ஏன் சாந்தா! எல்லாப் புத்தகங்களிலும் இரண்டு வரிகள் சங்கர் எழுதி இருக்கானே யாரை மனதில் வைத்து உன்னையா? என்னையா?"

"நெஞ்சின் அலையான
அன்பின் நினைவாக"

என்ற இருவரிகளையும் தன் கைப்படஎல்லாப் புத்தகங்களின் முன்பக்கத்தில் அழகாக எழுதிஇருந்தான் சங்கர்.

"இருவருக்கும் பொருந்தும். எல்லோருக்கும் பொதுவான வரிகள் தான்."

"இல்லை சாந்தா! உன்னை மனதில் வைத்துக் கொண்டுதான் அப்படி எழுதி இருக்கிறான்!"

எனக்குத் தெரியும் ப்ரியா!"

"எத்தனை உறவுகள் இருந்தாலும் ஒரு பெண்ணினுடைய நினைவு அலைகள் ஆண்களின்இதயத்தில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. அதிலிருந்து அவனால் மீளவே முடிவதில்லை. போலியான

தும் பொய்யானதுமான காரணங்களைத் தனக்குத் தானே சொல்லி அதிலிருந்து தற்காலிமாக விடுபட முயற்சிக்கிறான். ஆனால் அவனால் விடுபடமுடிவதில்லை சங்கர் மட்டும் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும். பெண்ணாய் பிறப்பது மட்டும் பாவமல்ல ப்ரியா ஆணுக்கும் அதுபொருந்தும். எத்தனை பெண்கள் ஆண்களின் மனதில் அன்பையும் ஆசைகளையும் வளர்த்துவிட்டு சுயநலத்தினாலோ வேறு காரணங்களினாலோ அவர்களை மறந்து விடுகிறார்கள் இதுவும் ஒருவகையில் உளரீதியான சித்திரவதைதான்!

''நானும் அந்தப் பெண்களில் ஒருத்திதான்'' அவள் குரலில் சோகமும் வேதனையும் இணைந்து ஒலித்தது யாழ்ப்பாணத்தில் அனேகமான ஆண்கள் அறுபதைத் தாண்டுமுன்பு அடுத்தலோகத்தையோ அடுத்த பிறவியையோ தேடி ஓடிவிடுகிறாரகள். பெண்களின் கொடுமைகளையும் துன்பங்களையும் தாங்கமுடியாமல் அடுத்தலோகமென்ன அடுத்த பிறவியிலும் யாழ்ப்பாணத்துப் பெண்கள் ஆண்களை விட்டுவைப்பார்களோ தெரியவில்லை சிலநேரம் அங்கேயும் போய் அவர்களைத் துன்பப்படுத்தினாலும் ஆச்சரியம் இல்லை.''

''சாந்தா நீபடித்தவள்தானே சூழ்நிலையைப் புரிந்து கொண்டு வாழ முயற்சி செய். கண்ணதாசன் சொன்னதுபோல் நடந்ததையே நினைத்திருந்தால் என்றும் அமைதியில்லை விட்டுவிடடி.''

''வீட்டு நிலமை எப்படி? அக்காவின் திருமணம் எந்த மட்டில் இருக்கிறது? மாமா என்ன சொல் கிறார்? பழைய நிபந்தனை தானா இல்லை மாறி விட்டாரா?

நேற்று வீட்டுக்கு மாமா வந்திருந்தார் அப்பா வும் இருந்தார். மாமா மாறவே இல்லை. நான் விம லைத் திருமணம் முடிப்பதாக என் வாயாலேயே சொன்னால் தான் மதனாக்காவின் திருமணத்தைச் செய்து வைப்பாராம். அப்பா, அண்ணா, பெரியக்கா எல்லாம் விமலைத் திருமணம் செய்து கொள்ளு வதாக மாமாவிடம் சொல்லும்படி வற்புறுத்தி னாங்க. சின்னக்கா மட்டும் வற்புறுத்தவில்லை.''

நீ விரும்பாவிட்டால் சம்மதிக்காதே சாந்தா! உன் வாழ்க்கை என்னால் பாதிக்கவேண்டாம் உனக் கென்றும் ஒரு மனம் இருக்கு அதிலும் ஆசைகள் கனவுகள் இருக்கும் அவைகளை எனக்காக இழக்கச் சொல்லி நான் கேட்கமாட்டேன் நீயும் என்னைப் போல் ஒரு பெண்தான் சகோதரி என்பதால் உன் சந்தோசத்தை எனக்காக இழந்து விடாதே. இந்தக் கல்யாணம் இல்லாவிட்டால் வேறு கல்யாணம் நடக்கும் கொஞ்சக்காலம் எடுக்கும் பரவாயில்லை என்று சொன்னா.''

''சின்னக்கா ரொம்ப நல்லவ. இந்தக் கல்யா ணம் நடக்காவிட்டால் கெட்டகாலத்துக்கு வேறு கல்யாணம் வந்துபொருந்தாவிட்டால் அந்தப்பாவம் எனக்குத் தானே வந்து சேரும். பிறகு அவளைப் பார்க்கும்போதெல்லாம் அன்று சம்மதித்திருந்தால் அக்காவுக்குத் திருமணம் நடந்திருக்குமே என்று

மனம் அழுது புலம்பும்; நான் மட்டும் கல்யாணம் முடித்து வாழ அவள் கல்யாணம் முடிக்காமல் இருந்தால்

யாருக்காக இல்லாவிட்டாலும் சின்னக்காவுக்காகவாவது சம்மதிக்க வேண்டும் என்று மனம் சொல்லிச்சு.''

''மனதைக் கல்லாக்கிக்கொண்டு மாமாவிடம் சம்மதம் சொல்லி விட்டேன். மாமா போனபிறகு சின்னக்காவின் முகத்தைப் பார்த்தேன். எவ்வளவு சந்தோசமாக இருந்தாள். வாழ்வதற்கு அவள்மனம் எவ்வளவு தூரம் துடித்துக் கொண்டிருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடிந்தது ப்ரியா. அடுத்த மாதம் 24ம் திகதி சின்னக்காவின் திருமணத்தை வைத்துக்கொள்ளலாம் என்று மாமா சொல்லிவிட்டுப் போனார்.''

அப்படி என்றால் எல்லாவற்றையும் முடிவு செய்து விட்டுத்தான் உன் சம்மதத்தைக் கேட்டிருக்கிறார்கள். உன்னுடைய ஒரு சொல்லில் தான் மதனாவின் திருமணம் ஊசல் ஆடி இருக்கு. உன் முடிவு சரியா பிழையா என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் உன் முடிவினால் ஒரு பெண்ணின் வாழ்வு மலரப் போகிறது. அது மட்டும் உண்மை. அதை நினைத்தாவது திருப்திப்பட்டுக் கொள். கடவுளின் முடிவை நீயோ நானோ மாற்றமுடியுமா? பிறக்கும்போது தலையில் எழுதித்தான் அனுப்புகிறான் அவன். கேவலம் மனிதர்கள் எங்களால் எப்படி அதை மாற்ற முடியும்? இந்த லட்சணத்தில் அதை நான் செய்தேன் இதை நான் செய்தேன்

என்று தானே பெருமைப்பட்டுக் கொள்கின்றார் கள். காரியங்களை தான் தீர்மானித்தபடி நடத்திக் கொண்டு போகக் கடவுள் மனிதனை ஒரு கருவி யாகப் பயன்படுத்திக் கொள்கிறான்.''

இரவு ஏழுமணி கட்டிலில்படுத்துக்கொண்டான்.

''நாதன் வீட்டில் இருந்தா கடிதம்.''

''அப்பா போட்டிருக்கிறார்.''

''ஏதாவது விஷேசம் இருக்கா?''

''என் திருமணத்தைப் பற்றி எழுதி இருக்கி றார்.''

''அப்படியா? மகிழ்ச்சியான செய்திதான்!''

நீண்ட நாட்களாக இதைப்பற்றிக் கடிதம் எழு திக் கொண்டு வருகிறார். நான் குடித்துக் கெட்டுப் போய் இருந்ததினால் திருமணம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தேன்.

அப்போ சொன்னது நியாயம் குடிக்கின்ற ஒரு வருடன் வாழும் பெண் துன்பம் அடைவது தவிர்க்க முடியாதது. இப்பதான் நீ குடிப்பதில்லையே! மறுக்காமல் திருமணத்தைச் செய்துகொள். அது வாழ்க்கையில் உனக்கு பிடிப்பையும் பொறுப்பையும் கொண்டு வரும். ஒரு பெண்ணுக்கு மகிழ்ச்சியான கணவனாக வாழ்க் கொடுத்து வைத்திருக்க வேண் டும்.''

''இந்தத் திருமணத்தில் ஒரு சிக்கல். நிபந்தனை விதித்து அந்தப் பெண்ணைத் திருமணத்துக்குச்

சம்மதிக்க வைத்திருக்கிறார்கள்.''

''நாதன் அது கொடுமை. எந்த ஒரு பெண்ணையும் வற்புறுத்தித் திருமணத்துக்கு சம்மதிக்க வைத்தல் மனச்சாட்சி இல்லாத செயல். மனமில்லாத வாழ்வு மணமில்லாத பூவைப்போல். ஒரு பெண்ணின் மனப்பூர்வமான சம்மதமில்லாமல் திருமணம் செய்து கொள்ளவே கூடாது. மற்றவர்களுடைய மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். தங்களுடைய வசதிக்காக ஒரு பெண்ணினுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல், புரிந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் காலத்தின் மேலும் விதியின் மேலும் பாரத்தைப் போட்டுத் திருமணத்தை முடித்துவைப்பது காலமெல்லாம் அந்தப்பெண் ஊமையாய் கண்ணீர் வடித்து ஏமற்றத்துடன் வாழ்ந்து விரக்தியுடன் தான் இறந்து போவாள். இதுவார்த்தைகளால் விபரிக்க முடியாத கற்பனை செய்தும் பார்க்கமுடியாத- உளவியல் ரீதியான சித்திரவதை; இதற்கு மட்டும் நீ துணை போய்விடாதே! பிறகு வாழ்நாள் எல்லாம் செய்தவற்றுக்காக கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டிவரும்''

''கொஞ்சம் அந்தப் பரிதாபத்துக்குரிய பெண்ணின் நிலையில் இருந்து நீ யோசித்துப்பார். விருப்பமில்லாத திருமணத்தால் அவள் சந்தோசமாகவா வாழ்வாள் என்று நினைக்கிறாய். ஒரு நாளும் இல்லை இனி உன்விருப்பம் இது உன்னுடைய சொந்த விவகாரம் நீயே முடிவு செய்துகொள். உன்விசயத்தில்

தலையிட நான் விரும்பவில்லை. முடிப்பதும் முடிக்காமல்விடுவதும் உன்கையில்தான்!''

''சங்கர்! இன்றுமொருமுறை எனக்கு உதவி செய்திருக்கிறாய் குடிப்பதை நிறுத்த உதவிசெய்தாய் இப்போ என்னை விரும்பாத பெண்ணைத் திருமணம் முடித்து. கஷ்டப்படுவதில் இருந்து காப்பாற்றிவிட்டாய்.''

''நல்லகாலம் உனக்குச் சொன்னது. இல்லாவிட்டால் திருமணத்துக்குச் சம்மதித்திருப்பேன். சங்கர் நீ எனக்குச் செய்த உதவிகளுக்கு எப்படி நன்றி சொல்லப் போகிறேனோ?''

''அந்தப் பெண் என் மாமா மகள் தான் அவளுடைய அக்காவின் திருமணத்தை நடத்திவைப்பதானால் அவள் என்னைத் திருமணம் முடிக்கச் சம்மதிக்கவேண்டும் என்று அப்பா சொல்லிவிட்டார். தன் அக்காவின் திருமணம் நடக்கவேண்டும் என்பதற்காக என்னைத் திருமணம் செய்யச் சம்மதித்திருக்கிறாள் உண்மையில் அவளுக்கு என்னைத் திருமணம் முடிக்க விருப்பமில்லை; அவளுடைய வீட்டில் உள்ள எல்லோரும் சம்மதிக்கும்படி நெருக்குதல் செய்து திருமணம் செய்ய இணங்கி இருக்கிறாள்.''

சங்கரின் நெஞ்சம் துணுக்குற்றது. என் சாந்தாவாக இருப்பாளா? சீச்சீ அப்படி இருக்காது. என் சாந்தாவுக்கு ஏற்பட்ட துயரம் எத்தனையோ பெண்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்டு தான் இருக்கிறது. தடுக்கத்தான் யாருமில்லை பத்தோடு பதினொன்றாக நாதன் சொல்லும் பெண்ணும்

இருப்பாள். பாவம்! அந்தப் பெண்ணுக்காக அனுதா பப்படுவதைத் தவிர என்னால் ஒன்றும் செய்ய முடியாது. யாழ்ப்பாண சமுதாயம் பெண்களுக்குச் செய்யும் கொடுமைகளில் பெரிய கொடுமை இது தான்.

யாழ்ப்பாணம் படித்த சமுதாயம் என்று தான் பெயர். ஆனால் அந்தச் சமுதாயத்தில் தான் இந்தக் கொடுமையும் நடந்து கொண்டு வருகிறது. பிள்ளை களைப் பெற்று வளர்த்து விட்டால் மட்டும் பெற்றோர்களின் கடமை முடிந்து விடுவதில்லை. அவர் களின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டு' அதற்கு மதிப்புக் கொடுத்து வாழவைக்க வேண்டும். பெற்றேன், வளர்த்தேன் கல்யாணம் முடித்துக் கொடுத்தேன், என்று தற்பெருமை பேசி கடமை முடிந்தது என்று நினைப்பதில் என்ன இருக்கிறது.?

''சங்கர்! என்ன கடுமையாய்ச் சித்திக்கிறாய்?''

''நாதனின் குரலால் சிந்தனை அறுபட்டது.

ஒன்று மில்லைஏதோ ஞாபகம்

மாமா மகளை உனக்குத் தெரியுமா?

தெரியும் நல்லவள். பெயர் வசந்தா.

சங்கரின் நெஞ்சில் நிம்மதியாக மூச்சு வந்தது. நாதன் மேசை விளக்கில் கதைப்புத்தகத்துக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தவன், சங்கர் பக்கம் திரும்பி மாமா மகளின்பெயர் வசந்தா என்றா சொன்னேன் வசந்தா இல்லை சாந்தா. என்றவன் கதைப்புத்தகத்தில் மூழ்கிப்போனான்.

சங்கரின் தலை சுழன்றது கண்கள் இருண்டு கொண்டு வந்தது சாந்தா, சாந்தா என்று மனம் ஓலமிட்டது!

''என்னுயிரே சாந்தா உன்னை நான் இழந்து விடுவேனா என் கையை விட்டுப் போய்விடுவாயா நீ இல்லாமல் என்னால் வாழவே முடியாது. காலமெல்லாம் உன் நினைவுடனேயே வாழவிட்டு விடுவாயா?'' கண்ணீர் பெருகித் தலையணையை நனைந்தது பழைய நினைவுகள் அலை அலையாக மனதில் மோதி தூக்கத்தை விரட்டிக் கொண்டிந்தது.

"சங்கர்! இரவு நான் படுக்கும் போது எத்தனைமணி தெரியுமா?''

'' அவனை விழித்துப் பார்த்தான்

''இரண்டு மணி''

அப்படியா? அவ்வளவு சுவாரசமான கதையா?

என் திருமண விசயமாக நீ சொன்னதை எல்லாம் டாக்டர் சிவாஎன்ற பாத்திரத்தின் மூலம் எழுத்தாளன் சொல்லி இருந்தார்,,

''எனக்கு ஒரே ஆச்சரியம் நீ அந்தப் புத்தகத்தை முதலிலேயே படித்திருக்கிறாயோ என்று?

இல்லையே? முடிவு எப்படி இருந்தது.

சந்தோசமாகத்தான் முடித்திருக்கிறார் கதாநாயகி விரும்பியவனையே மணம் முடிக்கிறாள்.

படித்துக் கொண்டிருக்கும் போது கதாநயகி அவள் விரும்பியவனையே மணம் முடிக்க வேண்டும்

என்று என் மனம் விரும்பியது அவள் வேதனைப்படும்போது எழுத்தாளன் மீது கோபம் தான் வந்தது. ஏன் அந்தப் பெண்ணைத் துன்படுத்துகிறான் என்று ஆத்திரம் வந்தது.? ஓங்கி கையால் புத்தகத்தில் குத்தி விட்டேன். மெல்லத்திரும்பிப் பார்த்தேன்.

''நீ தூங்கிக் கொண்டிருந்தாய் இல்லாவிட்டால் என் செயலைப் பார்த்துச் சிரித்திருப்பாய். கதை தான் என்று மனதைச் சமாதானப்படுத்த முடியாமல் போய்விட்டது''

உன்னைப் போலத்தான் நானும் கதாநயகிகள் அல்லது பெண் பாத்திரங்களை யாராவது கொடுமைப்படுத்துவது போல் எழுதினால் கொடுமைப்படுத்தும் பாத்திரத்தின் மேலே அடக்கமுடியாத கோபம் தான் வரும்' ஓங்கி அறைய வேண்டும் போல் பல்லைக் கடிப்பேன். எத்தனையோமுறை நாக்கைக் கடித்திருக்கிறேன்.

பெண்பாத்திரங்கள் துன்பப்படும்போது வாசிக்கமுடியாமல் கண்ணீர் எழுத்துக்களை மறைத்துவிடும்; நெஞ்சு வரண்டுபோகும். புத்தகத்தை மூடிவைத்துவிட்டு மேசையில் படுத்துவிடுவேன். சினிமாப்படம் பார்ப்பதானாலும் முதலில் சோகப்படமா என்று தெரிந்து கொண்டுதான் படத்துக்குப் போவேன். சனங்கள் குறைவான நேரம் பார்த்துத்தான் போவேன். சிலநேரம் அழுகை வந்துவிட்டால் மற்றவர்கள் பார்ப்பார்களே என்று வெட்கம் தான்!

''என் சுபாவம் தான் உனக்கும்''

''சாரசரி ஆண்களில் பெரும்பாலோர் பெண்களின் மேல் அன்பும் இரக்கமும் உள்ளவர்கள் தான் மீதிப்பேருக்கும் அன்பையும் இரக்கத்தையும் உண்டாக்கி விட்டால் பெண்கள் மேற்சுமத்தப்படும் குற்றங்கள் குறைந்து விடும். பெண்கள் கேட்பதை எல்லாம் கொடுத்துவிட்டால் பெண்களின் உரிமைக்காகப் போராடும் நிலைமையே இல்லாமல் போய் விடும். பெண்களின் விடுதலைக்காக சுதந்திரத்திற்காக அமைப்புக்களை உருவாக்கிப் போராட வேண்டிய தேவையே ஏற்படாது. சட்டங்கள் போட்டு பெண்உரிமையை நிலைநாட்டி விடலாம் என்றுநினைப்பது சுத்தமான பைத்தியக்காரத்தனம் பெண் ஆணுடன் சேர்ந்து தான் வாழ வேண்டும்; மக்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்துவதன்மூலம் தான் பெண்களின் உரிமைகளுக்கான வெற்றி தங்கி இருக்கிறது. ஆணில்லாமல் பெண் இல்லை. பெண் இல்லாமல் ஆண் இல்லை; ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்வது தான் வாழ்க்கை என்ற உண்மையை எல்லோரும் புரிந்து கொண்டால் சமுதாயத்தில் உள்ள பாதிப்பிரச்சனை தீர்ந்து போய்விடும்.

கதைப்புத்தகத்தில் தொடங்கி பெண்களின் உரிமையில் போய் முடிந்திருக்கிறது உண்மை. கதைப்புத்தகம் தான் என் திருமணத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வர உதவி இருக்கிறது. என்ன முடிவு?

சாந்தாவை அவள் விருப்பத்துக்கு மாறாகத் திருமணம் முடிக்கப் போவதில்லை என்று தீர்மானித்து விட்டேன்.

''நாதன் நீ உண்மையாகவா சொல்கிறாய்!''

''ஏன் உனக்கு அதில் சந்தேகம்?''

''இல்லை உன் அப்பா வற்புறுத்தினால் என்ன செய்வாய்?

நான் தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். வேண்டாம் என்றால் விடவேண்டியது தானே.

அப்பாவின் வற்புறுத்தலை உன்னால் மறுக்க முடியுமா?

''நிச்சயமாக, வாழத்தான் வாழ்க்கை. துன்பந்தான் வாழ்க்கை என்றால் அதை ஏன் தோளில் சுமக்க வேண்டும்.''

''சாந்தாவை நீ திருமணம் முடிக்கமாட்டாயா?''

''இல்லை. வேறு பெண்பார்க்கும்படி சொல்லப் போகிறேன்.

''நாதன் இதில் உறுதியாக இருப்பாயா?''

அவன் கைகளைப் பற்றிக் கொண்டான்

''ஏன் அப்படி கேட்கிறாய்?''

''ஒரு உண்மையை உன்னிடம் சொல்லத்தான்.''

''சொல்லு சங்கர் உனக்காக நான் எதுவும் செய்வேன்.''

''உன் மாமா மகள் சாந்தா என் இதயத்தால் நேசிக்கப்பட்டவள்.''

சங்கரின் தோள்களை இறுகப் பற்றிக் கொண்டான். இருவருமே பேசமுடியாமல் ஒருவர்முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

.......................................

''இதை ஏன் முதலிலேயே சொல்லவில்லை?''

சாந்தா உன் மாமா மகள் என்பது நேற்று ராத்திரி வரை எனக்குத் தெரியவே தெரியாது. அவளுடைய மாமா அவள் குடும்பத்துக்கு செய்த உதவிக்காக அவர் மகனைத் திருமணம் செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறாள். நானும் அவளுடைய நிலைமையைப் புரிந்து கொண்டு அவள் விருப்பப்படியே முடிவு செய்ய அனுமதித்துவிட்டேன்.

என் திருமணத்தைப்பற்றி உனக்குச் சொல்லாமல் கல்யாணம் செய்திருந்தால் சாந்தாவின் இதயத்தை மட்டுமல்ல உன்னுடைய இதயத்தையும் அல்லவா வேதனைப்படுத்தி இருப்பேன்.

''என்னை மனிதனாக மாற்றிய உனக்கு துன்பத்தையல்லவா செய்திருப்பேன்.''

''நாதன் சாந்தாவை நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன். அவளை என்னால் மறக்க முடியவில்லை. அவளை நான் .........திருமணம்............''

குளறியது சங்கரின் வாய்.

முடித்து வைப்பது என்னுடைய கடமை.

''சங்கர்!''

''நாதன்''

''இதைக்கூட நான் செய்யாவிட்டால் நன்றி என்பதற்கே அர்த்தமில்லாமல் போய்விடும்.

நாதன் உனக்கு எப்படி நன்றி சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை.''

எனக்கு நீ செய்த உதவிக்கு எப்படிப் பதில் உதவி செய்யப்போகிறேன் என்று கவலைப்பட்டுக் கொண்டே இருந்தேன். கவலையை விடு சங்கர் உனக்கும் சாந்தாவுக்கும் என்ன கஷ்டம் வந்தாலும் மணம் முடித்து வைப்பது என்னுடைய பொறுப்பு வா சாப்பிடப் போகலாம்.''

''சாந்தாவினுடைய இரண்டாவது அக்காவின் திருமணம் 24ம் திகதி நடக்கப் போகிறது அதற்கு என்னை வரும்படி அம்மா கடிதம் எழுதி இருக்கிறா

நாதன் திருமணம் நடந்து முடிந்த பிறகு சாந்தாவின் விசயத்தை அப்பாவிடம் கதைப்பது தான் நல்லது.''

''எனக்குப் புரிகிறது. இல்லாவிட்டால் திருமணத்தை அப்பா தடுத்தாலும் தடுத்து விடுவார் எனக்கேன் பெண்பாவம். கடைசிநேரத்தில் வரமுடியவில்லை என்று கடிதத்தை எழுதிப் போடப்போகிறேன்.''

"கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் நடக்குதாடி''

ம் நடந்து கொண்டுதான் இருக்கு சங்ரின் கடிதம் வந்ததா?''

''இல்லையே ஏன் கேட்கிறாய்?''

''நேற்றிரவு கனவு கண்டேன்.''

''சந்தோஷக் கனவா? துக்கமா?''

''எது என்று சொல்ல முடியவில்லை?''

''கண்ட கனவைச் சொல்லு பலிக்குமா என்று

நான் சொல்லுகிறேன்.''

''நான் அழுது கொண்டிருக்கிறேன்.''

''ஏன்டி கனவில்கூடவா அழுகிறாய் சரிபிறகு?''

''சங்கர் வந்து ஏன் அழுகிறாய் நல்லதுதான் நடக்கும் அழாதே என்று சொல்கிறார்; அவரைக் கண்டவுடன் பலமாக அழுகிறேன். நான் சொல் வதை நம்பு என்று சொல்லியபடி என் கண்ணீரைத் துடைத்தார். எப்படி நடக்கும் என்று நான் கேட் கிறேன். தூரத்தில் யாரோ சங்கரின் பெயரைச் சொல்லி அழைத்துக் கொண்டு வருகிறார்.''

''பிறகு''

''அவ்வளவு தான் கனவு கலைந்துபோச்சு!''

''ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. கனவு எத்தனை மணிக்கு கண்டாய்?''

''கனவு கண்டு கொஞ்சநேரத்தில் விடிந்துவிட் டது.''

''காலைக் கனவு கண்டிப்பாய்ப்பலிக்கும் என்று சொல்லுவார்கள்.

எப்படிப் ப்ரியா மாமாவுக்குத்தானே சம்மதம் கொடுத்து விட்டேன் அதனால் தானே அக்காவின் திருமணமே நடக்கப்போகுது.''

''கடவுள் விரும்பினால் நடக்கும்.''

''உன் வாழ்வு சங்கரோடுதான் என்று தலை யில் எழுதி இருந்தால் மாமாவால் என்ன செய்ய முடியும்? ஒரு ஆங்கிலப் பழமொழி தெரியுமா?''

''தேநீர் கோப்பையின் விளிம்புக்கும் உதட்டுக்கும் இடையில் கூட தேனீர் சிந்துவதற்குப் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன;

உன்னைப் பார்க்கும் போதெல்லாம் சங்கரும் நினைவுக்கு வருவான். என்னவோ தெரியவில்லை நீயும் சங்கரும் ஒன்றாய்த்தான் வாழ்வீங்க என்று என் மனதில் அடிக்கடி தோன்றும்.''

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது ப்ரியா! காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.''

''சங்கர் வேலைக்கு வந்த பிறகு யாழ்ப்பாணம் போகவில்லையே?''

தலைமை நிர்வாகி தான் கேட்டார் உணவு இடைவேளையின்போது.

''அடுத்த மாதம் போகலாம் என்று இருக்கிறேன்.''

என் மகனுக்கும் மகளுக்கும் திருமணம் செய்யலாம் என்று முயற்சிக்கிறேன். உனக்குத் தெரிந்தவர்களிடம் ஜாதகங்கள் இருந்தால் சொல்லு நல்லதாக இருந்தால் பார்க்கலாம்.''

''உங்க இரண்டு பிள்ளைகளுடைய ஜாதகங்களையும் தாருங்கள் முயற்சி செய்கிறேன்.''

''மேசை இழுப்பறைக்குள் இருக்கிறது வேலை முடிந்து போகும் போது தருகிறேன்.''

''உனக்குத் திருமணம் செய்யும் எண்ணம் இல்லையா?''

''இப்போ இல்லை. தங்கச்சியின் திருமணம் முடிந்த பிறகு பார்க்கலாம் என்று இருக்கிறேன்.''

''நீயும் யாழ்ப்பாணம் தானே. அங்குள்ள இளைஞர்களின் மனோபாவம் தான் உனக்கும் இருக்கும்.''

மாலை தலைமை நிர்வாகியிடம் ஜாதகங்களை வாங்கிக் கொண்டு வெளியில் வந்தான்.

நாதன் நீ வீட்டுக்குப் போ. அப்பாவிடம் போய்விட்டு இரவுச் சாப்பாட்டை வாங்கிக்கொண்டு வருகிறேன்.

பஸ்சைப் பிடித்து தகப்பன் இருக்கும் அறைக்கு வந்தபோது அவர் எவருடனோ கதைத்துக் கொண்டிருந்தார்.

ப்ரியாவின் விசயம் எந்த மட்டில் இருக்கிறதப்பா?

''அதைப் பற்றித்தான் கதைத்துக் கொண்டிருக்கிறேன் இவர் நன்றாக ஜாதகம் பார்ப்பார் இவர் ப்ரியாவின் ஜாதகத்தோடு பல ஜாதகங்களை இணைத்துப் பாத்திருக்கிறார். ஒன்றும் அவ்வளவு நல்லதாக அமையவில்லை.''

''நான் சிலநாட்களுக்கு முன் ஐந்து ஜாதகங்கள் தந்திருந்தேனே?''

''அவைகளும் பொருந்தவில்லை.''

''தன் சட்டைப் பைக்குள் இருந்த தலைமை நிர்வாகியின் மகனுடைய ஜாதகத்தைக் கொடுத்தான்.''

''ப்ரியாவின் ஜாதகத்துடன் இணைத்துப்பார்த் தார். தந்தையும் மகனும் பொறுமையாக அவரின் முடிவுக்கு காத்திருந்தனர்.''

''இந்த ஜாதகம் பொருந்தி வந்திருக்கிறது; நீங்கள் தயங்காமல் இந்தக் கல்யாணத்தைச் செய் யலாம். உங்க மகளுக்கு நல்ல அதிஷ்டம் இருந்தி ருக்கிறது. எனக்கு நேரமாச்சு வரப்போகிறேன்.''

விடைபெற்றுக் கொண்டார் அப்பாவின் நண் பர்.

''சங்கர் இந்த ஜாதகம் எப்படி உனக்குக் கிடைத்தது?''

நான் வேலை செய்கின்ற நிறுவனத் தலைமை நிர்வாகியின் மகனுடைய ஜாதகம். அவர் தான் பெண் ஜாதகம் இருந்தால் பார்க்கச் சொல்லித் தந்தார்.

ப்ரியாவுக்கு இந்த மாப்பிள்ளையைச் செய்தால் என்ன?

அவரிடம் கேட்டுப் பார்ப்போமா?''

''அவசரப்படாதே! பாத்திரம் அறிந்து பிச்சை இடு கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு என்று சொல்வார்கள். எங்கள் அவசரத்துக்கு அவளைக் கல்யாணம் முடித்து தள்ளிவிடக்கூடாது. பிற்பாடு அவள் கஸ்டப்படும்போது பிழைவிட்டு விட்டோம் என்று கவலைப்படுவதில் பயனில்லை. அப்பாவும் அண்ணாவும் என் வாழ்க்கையை இப்படிச் செய்து விட்டார்களே என்று அவள் வருந்தும் நிலை ஏற் படக்கூடாது.''

''மாப்பிள்ளை பற்றிய முழு விபரத்தையும் சரியாக விசாரித்துத் தெரிந்து கொண்டு அம்மா வுக்குக் கடிதம் எழுதி அங்கேயும் விசாரித்து யாழ்ப் பாணத்தில் இருந்து செய்யலாம் என்று பதில் வந்த பின்பு மாப்பிள்ளையின் தகப்பனுடன் பேச்சுவார்த் தையைத் தொடங்குவோம்.''

''அம்மாவுக்கு உடனே கடிதம் எழுதுங்க. நேரமாச்சு.''

''இருட்டி விட்டது தங்கிவிட்டு காலையில் போகலாமே.''

''இல்லை நான் இரவுச் சாப்பாட்டோடு வரு கிறேன் என்றுநாதனிடம் சொல்லிவிட்டு வந்தேன்.''

''எங்கே வாங்கினாய்சாப்பாடு நல்லாஇருக்கு''

''பத்மா கொட்டலில் வாங்கினேன்.''

''சங்கர் நீ சாந்தாவை மணந்து கொள்ளச் சீதனத்தை எதிர்பார்க்கிறாயா?''

''இல்லை ஆனால் அவள் கொண்டு வந்தால் வேண்டாம் என்று சொல்லமாட்டேன்.''

''அவளுக்குச் சீதனம் கொடுப்பதாக இருந்தால் அப்பாதான் கொடுக்க வேண்டும். நான் சாந்தாவை மணநது கொள்ள மறுத்துவிட்டால் அப்பாவுக்குப் பெரிய ஏமாற்றமாக இருக்கும். அவளுக்கு சீதனம் ஏதுவும் கொடுப்பதற்கு சம்மதிக்கமாட்டார். உண் மையைச் சொன்னால் வீடோ, காணியோ, பணமோ, ஏன் நகைகூட சாந்தாவிடம் இருக்காது.

இருந்த வீடு, காணி, வயல், பணம், நகை எல்லாம் அவளின் மூத்த சகோதரிகளுக்கு கொடுத்தாகி விட்டதே.''

''அப்பா பணமாக நகையாகக் கொடுத்திருக் கிறார்; எனக்குத் தெரியும். சாந்தாவின் அண்ணன் ஒருவன் வெளிநாடு செல்வதற்கும் அப்பா தான் பணம் கொடுத்திருந்தார். அவளின் குடும்பம் அப்பா வுக்குத்தான் நிறைய கடன் கொடுக்க வேண்டி இருக்கு. காதில் போட்டிருக்கும் தோட்டோடுதான் அவள் இருப்பாள்.''

''எதையுமே எதிர்பார்த்து நான் அவளைவிரும் பவில்லை காதில் இருக்கும் தோட்டைக்கூட கழற்றி வீட்டில் கொடுத்துவிட்டு வரட்டும் அவளுக்குத் தேவையான நகைகளை நான் உழைத்து வாங்கிக் கொடுக்கிறேன். அவள் மட்டும் என்கூட வந்தால் போதும் காமவேகத்தில் இப்படிச் சொல்கிறேன் என்று நினைத்துவிடாதே என்மனம் முழுவதும் அவள்தான் நிறைந்து இருக்கிறாள்.''

''அவளை எப்படி நீ சந்தித்தாய்?''

''தங்கச்சி ப்ரியாவுடன் ஒன்றாய் படித்தவள். அடிக்கடி ப்ரியாவைத் தேடி வருவாள். அதனால் அவளைச் சந்திக்க நேர்ந்தது. அவளும் என்னை நேசிப்பது எனக்குப் புரிந்ததும் ப்ரியா அவ ளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்படி கேட்ட போது பாடம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கி ஒவ்வொருநாளும் வீட்டுக்கு வந்தாள்.''

''நீ அவளை விரும்புவது வீட்டில் எவருக்கும் தெரியுமா?''

''ப்ரியாவுக்குத் தெரியும். நான் சாந்தாவை விரும்புவதில் அவளுக்கு நிறையமகிழ்ச்சி. பலதடவை உதவி செய்திருக்கிறாள்.''

''அம்மாவுக்குத் தெரியுமா?''

''இல்லை?''

''அம்மா சம்மதிப்பாரா?''

''நானும் ப்ரியாவும் சேர்ந்து அம்மாவைச் சம் மதிக்க வைக்கலாம் என்று நினைக்கிறேன். மேலும் சாந்தாவும் அம்மாவை அன்ரி என்று அழைத்து அன்பாகத்தான் பழகி இருக்கிறாள். அம்மாவும் அவள்மேல் வாஞ்சையோடுதான் பழகி வந்தார்.''

''அப்பா என்ன சொல்வார்.''

''அப்பா சம்மதிப்பாரா இல்லையா என்பது தெரியவில்லை. ஞாயிற்றுக்கிழமை அப்பாவிடம் போகிறேன். விசயத்தை சொல்லி அவரையும் சம் மதிக்க வைக்கலாம் என்று நினைக்கிறேன்.''

''எப்படியோ நல்ல விதமாக முடித்தால்சரி என் னுடைய உதவி தேவை என்றால் சொல் செய்கி றேன்.''

''எல்லாம் சரிவந்தால் கட்டாயம் உன்னிடம் உதவி கேட்பேன். என்ன கொஞ்சம் பணம் தேவைப் படும்

பணம் தானே. முடிந்தவரையில் உனக்குத் தரு கிறேன்.''

''சும்மா வேண்டாம் கடனாகத்தான் கேட்பேன் பிறகு திருப்பித் தந்திடுவேன்.''

''நீ திருப்பித் தருவது உன்னைப் பொறுத்தது ஆனால் நான் கட்டாயம் பணம் தருவேன் அதைப் பற்றிக் கவலைப்படாதே வேறு எவரிடமும் கடன் வாங்காதே. என்னைக் கேளாமல்.''

''ரொம்ப நன்றி நாதன். காலத்தால் செய்த உதவிதான் பெரிய உதவி.''

''அப்பா, அம்மாவிடம் இருந்து கடிதம் வந்ததா?

''நேற்றுத்தான் வந்தது. மாப்பிள்ளை நல்ல குடும்பம் நாதன் ஜாதகமும் நன்றாகப் பொருந்தி இருக்கிறது பேசி முடிவு செய்யச் சொல்லி எழுதி இருக்கிறா.,,

''அம்மா ப்ரியாவின் படம் அனுப்பி இருக்கிறாவா?,,

''ஓம்!,,

''அப்பா திங்கட்கிழமை நல்ல நாள் மாப்பிள்ளையின் அப்பாவிடம் போய் பேசிப்பார்ப்போமா?,,

''வேறு இடங்களிலும் ஜாதகத்தைக் கொடுத்திருக்கிறார் ஆனாபடியால் தாமதிக்காமல் முடிவு செய்வது நல்லதப்பா''

''உண்மைதான் மாப்பிள்ளை எடுப்பது கஷ்டமான காரியம். எல்லாம் பொருந்திவரும் பொழுது நாட்களைத் தள்ளிப் போடக்கூடாது.''

''சீதனம் என்னவென்று தெளிவாகச் சொல்லி விட வேண்டும்.''

''முடிந்தவரை எங்களிடம் இருப்பதை எல்லாம் கொடுத்தாவது கல்யாணத்தை முடிக்கப் பாருங் கப்பா.''

''ப்ரியா கொஞ்சம் நிறம் குறைவாக இருப்ப தனால் நாங்கள் தான் இறங்கிப் போக வேண்டும். கடன் வாங்கியாவது கேட்கும் தொகையைக் கொடுக் கப் பாருங்கப்பா?. பின்னடிக்கு உங்களுக்கும் அம்மா வுக்கும் தேவை என்று நினைத்து அவளுக்கு கொடுப் பதைக் குறைத்து விடாதீங்க உங்களையும் அம்மா வையும் நான் வைத்துக் காப்பாற்றுவேன்.''

''வரும்போது ப்ரியாவிடம் சொல்லிவிட்டுத் தான் வந்தேன். உனக்குக் கல்யாணம் முடித்து வைப் பது தான் என் முதல் வேலை என்று''

''வெறும் கையோடு யாழ்ப்பாணம்போய் அவள் முன்னால் நிற்க மனதிற்கு ஒரு மாதிரியாய் இருக் கும்.''

''என்னவோ சொல்லிவிட்டுப் போனாயே கொழும்பில் இருந்து கையை ஆட்டிக் கொண்டா வந்தாய்? என்று கேலி செய்வாள்''

''நீ விரும்பியபடியே செய்வோம் நாளை பின் நேரம் மாப்பிள்ளை வீட்டுக்குப் போவோம். அவரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு வா. மறக்காமல் காலையிலேயே மாப்பிள்ளையின் அப்பாவிடமும்

சொல்லிவிடு -வவரும் வீட்டில் இருப்பதற்கு வசதி யாக இருக்கும்''

தன்னுடைய அறைக்குப் போக எழுந்தவன் தயங்கிநின்றான்.

''எதாவது சொல்வதாக இருந்தால் சொல்லு''

''வந்தப்பா''

''என்ன விசயம் சொல்லு?''

இன்று வேண்டாம் ப்ரியாவின் திருமணத்தில் சீதனப்பிரச்சினை முடியட்டும் சிக்கல் இல்லாமல் என் உதவி இல்லாமல் முடிந்தால் பிறகு சொல்லிக் கொள்வோம் மனதை மாற்றிக் கொண்டான்.

''பிறகு சொல்கிறேன் அப்பா''

பஸ்ஸைப் பிடிக்க தெருவில் இறங்கினான்.

''குட்மோர்ணிங் ஸார்''

''குட்மோர்ணிங் வா சங்கர்''

''உங்க மகளின் ஜாதகத்துக்குப் பொருந்த மான ஜாதகம் இருக்கிறது''

''அப்படியா!''

''பெண் என் தங்கச்சி தான். இரண்டு மூன்று இடத்தில் பொருத்தம் பார்த்தோம். நல்லபொருத் தம் கல்யணம் செய்யலாம் என்று சொன்னார் கள். இது தான் என் தங்கச்சியின் ஜாதகம். நீங்களும் வேறு இடங்களில் கொடுத்துச் சரிபார்க்கலாம்''

''பெண் வீட்டுக்காரன் நீயே சொல்கிறாய் சரி யாய்த் தான் இருக்கும். எதற்கும் நானும் ஒரு முறை பார்க்கிறேன்.''

''இதுதான் என் தங்கச்சியின் படம்.''

''ம் பிள்ளை லட்சணமாய்த் தான் இருக்கிறாள்!''

''நேரில் பார்த்தால் இன்னும் அழகாய் இருப்பாள்.

ஏ.எல் சித்தி அடைந்திருக்கிறாள்.வேறு ஏதாவது விபரம் தேவை என்றால் கேளுங்கள் சொல்கிறேன்''

''உயரம் எவ்வளவு இருக்கும்?''

''ஐந்து அடி நாலு அங்குலம் இருப்பாள்.''

''நிறம் எப்படி?

''என்னிலும் பார்க்கக் கொஞ்சம் குறைவு தான்.''

''பரவாயில்லை.''

''எங்கள் குடும்பத்தைப் பற்றிய விபரம் தேவை என்றால் என்னிடம் கேளுங்கள். இல்லாவிட்டால் நீங்களே யாழ்ப்பாணத்துக்கு கடிதம் எழுதித் தெரிந்து கொள்ளுங்கள். என் அப்பா கடிதம் எழுதி உங்க குடும்பவிபரங்களை அறிந்து விட்டோம். நீங்களும் நாங்களும் ஒரே குடும்பப் பின்னணிதான்.''

''அப்படியா?. பிறகேன் நான் விசாரிக்க வேண்டும் எனக்குச் சம்மதம். எதற்கும் என் மகனிடம் படத்தைக் காட்டி சம்மதம். பெற்றுக்கெள்வது நல்ல தென்று நினைக்கிறேன். மணம்முடித்துக் கொள்ளப் போகிறவன் அவன்தானே. தன்னைக் கேட்காமல் அப்பா முடிவு செய்து விட்டரே என்று மனத்தாங்கல் இருக்கக் கூடாது இல்லையா?''

''ஓம் ஓம் அவரிடம் அவசியம் சம்மதம் வாங்குங்கள். பின்னேரம் உங்களுக்கு நேரம் இருக்குமா ஸேர்''

''ஏன்?''

''அப்பா உங்களை இன்று மாலை இது சம்பந்தமாக விபரமாகக் கதைக்க விரும்புகிறார். நீங்கள் சம்மதித்தால் நானும் அப்பவும் இன்று மாலை உங்கள் வீட்டுக்கு வரலாம் என்று எண்ணி இருக்கிறோம்.''

''....................''

''உங்களுக்கு நேரமில்லாவிட்டால் இன்னொரு நாள் வைத்துக் கொள்வோம்.''

''கல்யாணவிசயம் காலம் தாழ்த்தக் கூடாது இப்பொழுதே விடுப்பு எடுத்துக் கொண்டு போய் மகனைச் சந்தித்து ஜாதகங்களையும் சரிபார்த்துக் கொள்கிறேன் மாலை ஐந்து மணிக்கு நீயும் அப்பாவும் வாருங்கள்''

''தாங்ஸ் ஸேர்''

''வாருங்கள்''

''சந்திரன், அவர்கள் வந்து விட்டார்கள்!'' வாறேன் அப்பா.''

நான்கு பேரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக் கூடியதாக கதிரைகளில் அமர்ந்து கொண்டார்கள்.

''உங்களை அடிக்கடி பார்த்திருக்கிறேன்'' சந்திரன் தான் சொன்னான்.

உணவுத் திணைக்களத்தில் வேலை செய்கி றேன். பஸ்சில் பார்த்திருப்பீர்கள் சங்கரின் அப்பா சொன்னார்.

நான் வர்த்தகத்திணைக்களத்தில் வேலை செய் கிறேன். திணைக்கள விசயமாக அடிக்கடி உங்கள் திணைக்களத்திற்கு வந்திருக்கிறேன் தாமதமில்லா மல் எனக்குத் தரவேண்டிய ஆவணங்களைத் தந் திருக்கிறீர்கள்''

''மன்னிக்க வேண்டும் பலருடன் பழகுவதால் ஞாபகத்தில் வைத்திருப்பது கொஞ்சம் கஷ்டம் குறை நினைக்கக் கூடாது.''

''சீச்சீ அதெல்லம் ஒன்று மில்லை. நானே அவ தானித்திருக்கிறேன் பல் வேறு திணைக்களங்களில் இருந்து வந்தவர்கள் உங்கள் மேசையைச் சுற்றி நின்று கொண்டு தங்கள் ஆவணங்களை முதலில் தரும்படி வற்புறுத்திக் கொண்டிருப்பார்கள் நீங் களும் அமைதியாகப் பொறுமையுடன் கொடுத்து அனுப்புவதை.''

''உங்கள் இருவரையும் பார்த்தால் மகளும் அமைதியான சுபாவம் உள்ளவளாக இருப்பாள் என்று நினைக்கிறேன்.''

''சங்கரும் அப்பாவும் சிரித்து ஆமோதித்தார் கள்.

''ஜாதகப்பொருத்தம் பார்ப்பவரிடம் சென்று விட்டு நாலு மணிக்குத்தான் வந்தேன்.

நல்ல பொருத்தம் திருமணம் செய்யலாம் என்று சொன்னார். மாப்பிள்ளைக்கு இப்பொழுது கல்யாணப்பலன் ! இருக்கு. இரண்டு மாதத்துக்குள் செய்ய வேண்டும் இல்லாவிட்டால் ஆறுவருடத்துக்குப் பின்பு தான் கல்யாணப் பலன் என்று சொல்லி காலத்தைத் தவறவிடாமல் திருமணத்தை முடிக்கச் சொன்னார்''

''சந்திரன் பிள்ளையின் படத்தைப் பார்ததுவிட்டாயா? பிடித்திருக்கா?''

''அப்போதே சொல்லி விட்டேனே.''

''பெண் வீட்டாருக்கும் உனக்கும் பிடித்திருக்கிறது என்று உன்மூலம் தெரிவது நல்லது.''

உங்கள் மகளை எனக்குப் பிடித்திருக்கிறது.

ரொம்ப மகிழ்ச்சி. மற்ற விசயங்களை நீங்கள் தான் சொல்ல வேண்டும்.''

''உங்கள் பிள்ளைக்குத் தானே கொடுக்கப் போகிறீர்கள் நீங்களே சொல்லுங்கள்.''

வீடும் நாலுபரப்பு காணியும் பிள்ளையின் பேரில் எழுதி வைக்கிறோம் பெண்ணுக்குத் தேவையான எல்லா நகைகளையும் போடுகிறோம் காசாக ஒரு லட்சம் பிள்ளையின் பேரில் வங்கியில் போடுகிறோம். மேலும் நீங்கள் விரும்பினால் சொல்லுங்கள் யோசிக்கிறோம்.''

''காசைக் கொஞ்சம் கூட பாங்கில் போட்டால் நல்லதென்று நினைக்கிறேன் வற்புறுத்தவில்லை

மற்றப்படி எல்லாவற்றுக்கும் சம்மதிக்கிறோம்.''

''மேலும் காசு வேணுமென்றால் வயல் காணி இருக்கிறது அதை விற்றுப் பணத்தைத் தருகிறோம்.''

''அப்பா வயல் காணியை விற்கச் சொல்வது சரிஇல்லை, சந்திரன் சொன்னான்.

''ஓம் அது சரிதான் ஏன் இப்படிச் செய்யுங்களேன்?''

''வயற் காணியையும் மகள் பேரில் எழுதி வையுங்கள் சம்மதிக்கிறோம்.''

''சரிஎன்று சொல்லுங்கள் அப்பா எனக்கு ஒரு காணியும் வேண்டாம். தங்கச்சிக்குத் தானே கொடுத்துவிடுங்கள். தனக்கு வயற்காணி தரவில்லை என்று கவலைப்படுவாள்''

''நீ சொல்வதும் சரிதான் வயற்காணியையும் பிள்ளையின் பேரிலேயே எழுதித்தருகிறோம் திருப்தி தானே ''

''ஓம் எங்களுக்கு முழுத்திருப்தி இனி ஒன்றும் கேட்கமாட்டோம்.''

''எல்லாம் நல்லபடியாக முடிந்திருக்கிறது.''

''யாழ்ப்பாணம் போய் நீங்கள் உங்கள் குடும்பத்துடன் முடிவு செய்யுங்கள். நாங்கள் உங்கள் வீட்டுக்கு வழக்கப்படி வந்து திருமணம் பேசுகிறோம்''

''ஏதாவது மனதில் இருந்தால் தயங்காமல் சொல்லுங்கள் வாழ்க்கைப்பிரச்சினை. பின்னால்

சிக்கல் வரக்கூடாது. நாங்கள் பெண்வீட்டுக் காரர் பிழைவிடக்கூடாது.''

''சீதனம் என்பது ஒரு தற்காப்பு நடவடிக்கை தான் மகன் சந்திரன் உங்களிடம் அதிகம் கேட்க வேண்டாம் என்று முதலிலேயே சொல்லிவிட்டான். இனி ஒரு சிக்கலும் எங்கள் பக்கம் இல்லை யாழ்ப் பாணத்தில் சந்திப்பதும் ஒரு வழக்கமான நட வடிக்கை தான். நானும் மகனும் முடிவு செய்தால் வீட்டில் ஒருவரும் தடை சொல்ல மாட்டார்கள் கல்யாணம் நடந்த மாதிரித்தான்.''

''இரண்டு பக்கமும் கல்யாணத்தரகர் தொல்லை இல்லாமல் போய்விட்டது. இல்லா விட்டால் அது ஒரு செலவு''

''சரியாச் சொன்னீங்க''

''தரகர் பணத்தை இரண்டு வீட்டாரும் சங்க ருக்குக் கொடுத்து விடுவோம்''

நாலு பேரும் ஒரே நேரத்தில் வாய்விட்டுச் சிரித்தார்கள்

''நாங்கள் வரப்போகிறோம்''

சங்கர் சந்திரனுடன் உணர்ச்சியை வெளிக் காட்டியே கைகளைக் குலுக்கிக் கொண்டான். சந் திரனும் நெகிழ்ந்து போனான். அப்பாக்களும் கை களைக் குலுக்கிக் கொண்டார்கள்.

தங்கச்சிமேலே நிறைய அன்பாய் இருக்கிறிங்க. உண்மை தான். கொழும்புக்கு வரும்போது மறு படி யாழ்ப்பாணம் வரும் போது. உனக்குப் புருச னனக் கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

''சொன்னபடியே என்னைக் கொண்டுபோ றிங்க. நானும் சரி அப்பாவும் சரி கொடுத்தவாக் கை மாத்தமாட்டோம். கல்யாண ஏற்பட்டை நீங் கள் செய்யலாம். பெரிதாகச் செய்ய வேண்டும் என்று நான் எதிர்பார்க்க வில்லை. ஆனால் அது உங்க விருப்பம்.''

''சந்திரன் உங்களுக்கு எப்படி நன்றி சொல் வது என்று எனகுத் தெரியவில்லை.''

''கல்யாணத்தை முடித்து வையுங்க அதை நன்றி யாக ஏற்றுக் கொள்கிறேன்.''

மனம் விட்டுச் சிரித்தார்கள் இருவரும்.

அறைக்குவர ஏழு மணியாகிவிட்டது.

''ப்ரியா அதிஸ்டக்காரி. காலத்தைத் தள்ளிப் போடாமல் அடுத்த மாதமே கல்யாணத்தை முடித் துப்பார்க்க வேண்டும் சங்கர் நீஎன்ன சொல்கிறாய்''

''எனக்கும் அது தான் சரிஎன்றுபடுகிறது.''

'' யாழ்ப்பாணம் போகப் போறதாகச் சொன் னாயே

நானும் உன்கூட வருகிறேன் இரண்டு பேரும் போய் ஆக வேண்டிய கரியங்களைப் பார்ப்போம்''

உங்களிடம் சொல்லலாம் என்று அன்று நினைத்தேன் ப்ரியாவின் சம்மந்தம் நல்ல முறையில் முடியட்டும் பிறகு பார்க்கலாம் என்று சொல்லவில்லை

நானும் கேட்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன் இப்போ சொல்லு?''

''நான் ஒரு பெண்ணை விரும்புகிறேன் அப்பா!''

அவருக்கு சிறிது அதிர்ச்சியாகத்தான் இருந்தது சங்கர்! கொழும்புப் பெண்கள் விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும்! வெறும் வெளிப்பகட்டுத் தான்; குடும்பம் நடத்துவதற்கு தோதாக இருப்பார்கள் என்று மட்டும் நினைத்து விட்டாதே! உன்னுடைய அமைதியான சுபாவத்துக்கு ஒத்து வரமாட்டார்கள். எடுத்தெறிந்து தான் நடப்பார்கள். உன் நன்மைக்குத் தான் சொல்கிறேன் பிற்பாடு அப்பா சொல்லித் தடுத்திருக்கலாமே என்று பிரச்சினை வந்தபிறகு என்மேல் குற்றம் சொல்லக் கூடாது இப்பவே சொல்லிவிட்டேன் என்ன இருந்தாலும் யாழ்ப்பாணத்துப் பெண்ணைத்தான் நீ மணம் முடிப்பதை நான் விரும்புவேன்.''

''பெண் கொழும்பில் இல்லை அப்பா யாழ்ப்பாணம் தான்''

''அப்படியா. நான்தான் அவசரப்பட்டுவிட்டேன். அங்கே இருக்கும் போதே விரும்பினாயா?''

''ப்ரியாவின் சிநேகிதி வீட்டுக்குப் பாடம் படிக்க வந்த பொழுது பழக்கம் ஏற்பட்டது.''

''சொந்தக்காரப் பெண்ணா?''

''நான் அவளை விரும்புவது ப்ரியாவுக்கும் தெரியும்;''

ப்ரியா விசாரித்துப் பார்த்தாள் நல்ல குடும்பம்.

''அம்மாவுக்குத் தெரியுமா?''

''தெரியாது''

''....................''

''சரிபார்க்கலாம்!''

''சீதனத்தை எதிர்பார்க்க இயலாதப்பா. இரண்டு அக்கா மாருக்குக் கல்யாணம் நடந்ததால் சாந்தாவுக்கு சீதனம் தர அவங்க வீட்டில் கடினம்;''

''சீதனம் வாங்குவது உனக்கும் உன்னோடு வாழ வருபவளுக்கும் ஒரு நம்பிக்கையை ஊட்டுகின்ற விசயம். அது இல்லாமல் மணம் முடிப்பது அவ்வளவு சரிஇல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. எதற்கும் யாழ்ப்பாணம் போய்ப் பார்க்கலாம்.''

தலையைக் குனிந்தபடி இருந்தான்.

''நேரமாகிவிட்டது உன் அறைக்குபோ,,

''..................''

''சரி பார்க்கலாம் போயிட்டுவா.''

''..................''

''அம்மாவும் சம்மதித்தால் அந்தப் பெண்ணையே மணந்து கொள் எனக்கு மறுப்பில்லை;''

அவள் அமைதியானவள் அம்மாவுடன் ஒத்துப் போவாள்.''

''அந்தப் பெண்ணையே நீ மணக்க விரும்பும் போது நான் தடைசொல்லப் போவதில்லை வாழப் போவது நீ தானே. உன் வாழ்க்கையை முடிவு செய்யும் உரிமை உனக்கு உண்டு. ப்ரியாவின் திருமணம் முடிந்த பிறகு உன் திருமணத்தைப் பற்றி முடிவெடுப்போம்.''

''பஸ்சைப்பிடித்து அறைக்குப் போய்ச்சேர்.''

யாழ்தேவி ஓடிக்கொண்டிருந்தது பயணிகள் தூங்கிவழிந்தார்கள். சங்கரின்மனம் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தது வீட்டுக்குப் போகிறோமே அதுவும் வேலைக்கு வந்த பிறகு முதல் முதலாக அம்மா எப்படி எதிர் கொள்வா? ப்ரியா எப்படி வரவேற்பாள்? சாந்தாவின் மனநிலை எப்படி இருக்கும்? யாழ்ப்பாணம் போகிறேனே என்ற நினைப்பே அவன் மனதில் தேனாக; இனித்தது ''அம்மா'' மானிட ஜென்மத்துக்கே கடவுளால் கொடுக்கப்பட்ட அன்புக்கோயில் என்றாவது என்னை அடித்திருப்பாவா ..........ம்ம்ம் ............ஞாபகமே இல்லை. என்னுடைய கைச்செலவுக்கு அம்மா பொருட்கள் வாங்கத்தரும் பணத்தில் எடுத்துக் கொள்வது தெரியாமலா இருந்திருக்கும் பிள்ளை தானே எடுக்கிறான் என்று விட்டிருப்பா. ஒருநாளாவது பொருட்கள் வாங்கிய விலையைக் கேட்டிருப்பாவா. காய்ச்சல், தலையிடி, இருமல்

என்றால் வெளிக்காட்டாவிட்டாலும் எப்படித் துடித்துப்போவா. குழந்தை ஆண் என்றால் என்ன பெண் என்றால் என்ன, பெண்கள் தானே பெற்றெடுக்கிறார்கள். ஆனால் பிள்ளை பெறுகின்ற எல்லாப் பெண்களும் பாசமுள்ள அம்மாவாக இருக்கிறார்களா?

அம்மாவின் நினைவு என்னை ஏன் வாட்டுகிறது? எத்தனைபேர் வெளிநாடுகளுக்கு போய் வருடக் கணக்காக இருக்கிறார்கள். எப்படி அவர்களால் தாயைப் பிரிந்து இருக்க முடிகிறது. பாச உணர்ச்சி வற்றிப் போய்விடுமா.? தாயைப்பிரிந்து தான் பிள்ளைகள் போகிறார்கள். பிள்ளைகளைப் பிரிந்து தாயால் போகமுடியுமா? தங்கையாய் இருந்தால் என்ன? தாரமாய் இருந்தால் என்ன? தான் பெற்ற பிள்ளையாய் இருந்தால் என்ன பெற்ற தாய்க்கு ஈடாக முடியுமா?

''கொண்டு வந்தால் தான்சகோதரன், கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய், கொலையும் செய்வாள் பத்தினி'' என்று அந்தக் காலத்தில் சொன்னது இப்பொழுதும் பொருத்தமாகத் தான் இருக்கிறது; நாட்டில் நடக்கின்ற சம்பவங்களைப்பார்க்கும் பொழுது!

வீட்டில் இருந்து கொழும்புக்குப் புறப்படும் போது அம்மா எப்படிக் கண்கலங்கினா சிலநாட்கள் தூங்க முடியாமல் நான் தவித்ததைப் போல் அம்மா

வும் தவித்திருப்பா நாளை என்னைக் கண்டவுடன் எப்படி மகிழ்ச்சி அடைவா. இல்லை வேதனைப்படு வா. என்வாடிப்போன உடம்பைப்பார்த்து எனக்கே தெரிகிறது என் உருவமாற்றம். கேட்டால் என்ன பதிலைச் சொல்வது? உன்னுடைய சமையலைப் போல் வருமா கொழும்பு கடைச் சாப்பாடு என்று சொல்ல வேண்டியதுதான். இந்தக் காரணத்தைக் கூறியே அம்மாவைக் கொழும்புக்குக் கூட்டி வர வேண்டும். வீட்டுக்குள் இருந்து என்ன சுகத்தைக் கண்டா. கண்டி நுவரேலியா. என்று பல இடங் களுக்குக் கூட்டிச் சென்று காட்டவேண்டும். வீட்டில் இருக்கவைத்து சோறு கொடுக்க வேண்டும் ஓய்வே இல்லாமல் வீடும் சமையல் அறையும் என்று மனம் மரத்துப் போயிருக்காதா?.

பக்கத்தில் இருந்த அப்பாவைப் பார்த்தான் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அடுத்த பக் கத்தில் நாதன் தூங்கிக் கொண்டிருந்தான். எதிரே சந்திரனும் அப்பாவும். எப்படி இவர்களால் தூங்க முடிகிறது? ஐந்து பேருடனும் கதைத்து ஒரே நாளில் பயணம் செய்ய ஏற்பாடு செய்தது நல்லதாகப் போயிற்று.

ப்ரியாவின் திருமணம் முடிந்துவிடும். அடுத்து என் திருமணம். எப்படியோ? சிலமாதங்களில் அப்பா வின் சுமை குறைந்து விடும்! அதன்பிறகு .............. அப்பாவையும் என் கூடவே வைத்துக்கொள்ள வேண்டும். அக்காவும் அண்ணாவும் திருமணம் முடித்த

பின் தனித்தனியே பிரிந்து போய் வேறு இடங்களில் வாழ்கிறார்கள். இடைக்கிடை வந்து பார்ப்பதால் என்ன பயன்? அவர்கள் மணம் முடித்த இடம் அப்படி அமைந்துவிட்டது.

யாழ்ப்பாணத்தில் அநேகமாக எல்லோரும் தாயை வைத்துப் பராமரிக்க விரும்புகிறார்கள். ஆனால் தகப்பன்மாரைப் பராமரிக்க அவ்வளவு தூரம் அக்கறை காட்டுவதில்லை; பிள்ளைகளின் ஒவ்வொரு வீடாக மாறி மாறி அலையும் எத்தனை தகப்பன்மார்கள் யாழ்ப்பாணத்தில். பெற்று வளர்ப்பதில் தாய்க்கு ஈடாக தகப்பன் இருக்க முடியாது தான்! அதற்காகத் தகப்பன் பிள்ளைகளை வளர்ப்பதில் பங்கேற்கவில்லை என்று எப்படி நினைக்க முடியும்? அப்பா இல்லா விட்டால் அம்மா எங்களை எப்படிப் பெற்றிருக்க முடியும்? ஒவ்வொரு வருக்கும் உயிராக இருப்பது தகப்பன் தானே. உயிர் கண்ணுக்குத் தெரிவதில்லை. உடம்பைத் தந்தவள் தாய் தானே வெளிப்படையாக உடம்பு தெரிவதினால் தானோ தாயின் மீது அன்பு அதிகமாகத் காட்டப் படுகிறதோ! பிள்ளைகளைத் தாய் என்றுமே சுமை யாக நினைப்பதில்லை. பத்துமாதம் வயிற்றில் சில மதங்கள் மார்பில் பின் சில மாதங்கள் கையில் சுமப் பதினால் நெஞ்சு சுமையாக நினைக்க மறுக்கிறதா?.

ரயில் ஏதோ ஒரு நிலையத்தில் நின்று புறப்பட்டது. நினைவுகளும் இடைவேளை விட்டுத் தொடர்ந்தது.

ஏதோ ஒரு காரணத்தை வைத்து என்னுடன் சண்டை பிடிப்பாள் ப்ரியா. கொழும்புக்கு வந்த பிறகு யாருடனும் சண்டை பிடிக்க முடியமல் எப்படி அவளால் இருந்திருக்கமுடியும்?. நான் இல்லாமல் போனது சில நாட்களுக்கு கஷ்டமாகத் தான் இருந் திருக்கும். அண்ணா என்றுஒரு நாள் கூட சொல்லி இருக்கமாட்டாள். பெயர் சொல்லித் தான் கூபபிடு வாள்! அவன் இவன் என்று தான் பேசுவாள் இனியும் அப்படிப் பேசுவாளா! இல்லை அவர் இவர், வாபோ என்று கதைப்பாளா? ஒருமையில் அழைப்பதில் எவ் வளவு உரிமையும் பாசப்பிணைப்பும் இருக்கிறது. அவள் அப்படி அழைக்கும் போது எனக்கு ஒரு நாள் கூடக் கோபமே வந்ததில்லை; சகோதரன் என்ற உரிமையுடன் பழகுகிறாளே என்று பாசம்தான் வளர்ந்தது. அவளுக்கு திருமணம் முடித்து வைப்ப தில் எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததே மனதில் எவ் வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது நான் தான் சந்திர னை மாப்பிள்ளையாக கொண்டு வநதேன் என்று அறிந்தால் எவ்வளவு சந்தோசப்படுவாள் சந்திரன் உண்மையில் எடுப்பான தோற்றம் கொண்டவன் தான். தூங்கிக் கொண்டிருக்கும் அவனை ப்ரியாவு டன் பக்கத்தில் நிறுத்தி சோடியாகப் பார்த்தான். மனத்தால்.ப்ரியா நிச்சயம் பூரித்துப்போவாள் எனது தெரிவுக்காக மனதுக்குள் பாராட்டவே செய் வாள் எனக்கு சாந்தவைக் கொண்டு வந்தவள் அல் லவா பதிலுக்கு சந்திரனைக் கொண்டு போகிறேன் அவளுக்கு.

குளிர் காற்று ஜன்னல் ஊடாக ஜில்லிட்டுக் கொண்டு உள்ளே வந்தது. மழைவரப்போகிறதோ ஜன்னலைக் கீழே இறக்கினான்.

சாந்தா எப்படி இருப்பாள் கவலையோடும் மனவேதனையோடும், ஏமாற்றத்தோடும் இருக்கும் அவளுக்கு என்னுடன் தான் அவள் மணவாழ்வு அமையப் போகிறது என்று சொன்னதும். மனமெல்லாம் மல்லிகைப் பூவாய் மலர்ந்து சிரிப்பாள். விமல் நாதன் முடிவுகேட்டு நிச்சயம் அவனுக்கு நன்றி கூறுவாள் நடந்ததை எல்லாம் தெரிந்துகொண்டால் எவ்வளவு ஆனந்தப்படுவாள். வாடிப்போயிருக்கும் மென்மையான அவள் மீண்டும் மலர்ச்சியுடன் புதிய வாழ்க்கைக்காக உடலாலும் உள்ளத்தாலும் சிலிர்த்துக் கொள்வாள்.

இரண்டு மனங்கள் இணைவதில் உள்ள இன்பம் எவ்வளவு உயர்வானது. இன்பங்களை வெளியில் தேடுவது எவ்வளவு தூரம் நிலையானது? கதைப்புத்தகங்களும் திரைப்படங்களும் திரைப்பாடல்களும் போலியானது போல் இருக்கிறது. உண்மையான இரண்டு உள்ளங்களின் நினைவுகளுக்கு வேலியே இல்லை. காதல் நெஞ்சங்கள் மகிழ்வதற்குதூரமோ, காலமோ தடையாக இருந்திடமுடியுமா? கண்கள் சோர்வடைந்து தூக்கத்தை மெல்ல அணைத்துக் கொண்டது.

,,சங்கர்!''

அப்பா தான் எழுப்பினார்.

ரெயில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. சோர்வை நீக்கி இறங்குவதற்குப் பயணிகள் தயாரானார்கள். கலைந்திருந்த முடியை வாரிவிட்டுக் கொண்டான். ஆடைகளைச் சரிசெய்துகொண்டான் அப்பாவின் காவு பெட்டியையும் தானே தூக்கிக்கொண்டான். ரெயிலில் ஏறுவதற்கும் அவசரம் இறங்குவதற்கும் அவசரம். மக்களின் சுபாவம் எப்பொழுது தான் மாறப் போகிறதோ. பெரும்பாலானவர்கள் இறங்கிய பின்பு ஆறுதலாக மேடையில் இறங்கி வெளியில் செல்லும் மக்களுடன் பஸ்சை நோக்கி தந்தையோடு நடந்தான்.

சந்திரனிடமும் அவன் அப்பாவிடமும் அன்புடன் விடைபெற்றுக் கொண்டார்கள்.

விமலின் கையைப் பிடித்து கொண்டு அவன் போகும் பஸ்சில் ஏற்றிவிட்டு மாலை வீட்டுக்கு வரும்படி சொன்னான். அவன் பஸ் புறப்பட்டதும் தான் போகும் பஸ்சில் ஏறி அப்பாவுக்கு அருகில் அமர்ந்து கொண்டான்.

தெருக்கதவைத்திறந்து உள்ளே வந்தவன் காவு பெட்டிகளை கீழே வைத்து விட்டுத் தன்னை நோக்கி வந்த தாயை வேகமாகச் சென்று தோளோடு அணைத்துக் கொண்டான்.

''அம்மா! தூக்கிக் கொண்டு போகட்டுமா?''

''சீ உனக்குக் கை உளையும்''

கொஞ்சநேரம் தூக்குவதற்கே வேண்டாம் என்கிறாயே. பத்து மாதம் சுமந்தாயே வேண்டாம் என்றா சொன்னேன். வயிற்றுநோவை உண்டாக்கிப் பிறந்தேனே கோபித்தாயா? பிறந்தபின்பு எத்தனை மாதங்கள் மார்பிலும் கையிலும் சுமந்தாயே வேண்டாம் என்றேனா? தூக்கச் சொல்லி அழுதிருப்பேன தூக்காமல் விட்டிருப்பாயா?''

மண்ணுக்கு மரம் பாரம் இல்லை, மரத்துக்கு இலை பாரம் இல்லை கொடிக்குக் காய் பாரமில்லை பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமில்லை.

என்னம்மா உன்காலத்துச் சினிமாப் பாட்டா! சினிமாப்பாட்டென்றாலும் நல்ல கருத்திருக்கு

சங்கரின் முகத்தை கைகளில் ஏந்தியவள்,

''ஏன் சங்கர் இப்படி ஆகிவிட்டாய்!

''உன்கையால் சாப்பிட வில்லை அது தான் அம்மா பத்து நாள் இருக்கப்போகிறேன் நான் தேற வேண்டும் என்று நினைத்து ஒரு கவளம் சோறு தந்தால் போதும்; பழையபடி உன்பிள்ளை ஆகிவிடுவேன். கொழும்பில் சாப்பிடும் போது ஒவ்வொருநாளும் உன்னைத் தான் நினைப்பேன் அம்மா!

கதவைப் பிடித்தபடி அவன் அம்மாவுடன் பேசும் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்த ப்ரியாவைக் கண்டவன் அவள் அருகில் சென்றான்.

''எப்படி இருக்கிறாய் ப்ரியா?''

அன்போடு சிரித்தவள்.

''நான் நல்லாய் தான் இருக்கிறேன் நீ தான் பாதியாக மாறிவிட்டாய்''

நீ மாறவே இல்லை பழைய ப்ரியாதான்.

பிறவிக் குணம் எப்படிப் போகும்?''

''பிரயாணம் செய்த களைப்பு இருக்கும் போய் குளித்துவிட்டுவா!''

ஆடைகளை மாற்றி குளியல் அறைக்குச் சென்று திரும்பியவன் சமையல் அறையில் தாய் நீட்டிய தேநீர்க் கோப்பையை வாங்கியவன் தாயை அணைத்தபடி

''நீ ஒருவாய்குடியம்மா!''

''நீகுடி அப்புறம் நான் குடிக்கிறேன்''

''இல்லை இப்பவே குடியம்மா!''

''அவன் தான் ஆசைப்படுகிறான் குடியம்மா.''

அவளுக்குள் தாய்மை பொங்கியது வளர்ந்த பிள்ளையிடம் பாசத்தை எப்படிக் காட்டுவது என்று மனதுக்குள் அடக்கிக் கொண்டாள்.

''ப்ரியா! அப்பாவுக்கு தேநீர் கொடுத்து விட்டாயா?''

''நீகுடி அப்பாவுக்கு நான் கொண்டு போகிறேன்.

தேநீர் கோப்பையுடன் ஹோலுக்கு வந்தவன் தாயைப் பக்கத்தில் இருத்திக் கொண்டவன்; பெரிய

சோபாவின் மறுபக்கத்தில் ப்ரியாவை அமர்த்திக் கொண்டான்.

''கொழும்புக்குப் போகும் போது சொல்லி விட்டுப் போனேன் ஞாபகம் இருக்கா ப்ரியா?''

''மறந்து போனேன்.''

''அப்பா! சொல்லுங்கள்''

''நீயே சொல்லு.''

இல்லை நீங்கள் சொல்லுங்கள் வீட்டுக்குப் பெரியவர் நீங்கள் தான். உங்க வாயால் சொன்னால் தான் அம்மாவுக்கும் ப்ரியாவுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்!

''ப்ரியாவுக்குக் கல்யாணம் முடிவு செய்தாச்சு! அதற்காகத் தான் எல்லோரும் வந்திருக்கிறோம். எங்ககூடத்தான்மாப்பிள்ளையும்அப்பாவும்ரெயிலில் வந்தார்கள். நல்ல நாளில் அவர்கள் வீட்டுக்குப் போய் சம்பிரதாயத்துக்குப் பேசுவது தான் மற்ற தெல்லாம் கொழும்பில் முடிவாகி விட்டது''

மாப்பிள்ளையின் ஜாதகத்தைச் சங்கர் தான் கொண்டு வந்தான்''

சங்கரைப் பார்த்து அழகாகச் சிரித்தாள். ப்ரியா.

''நான் ஒன்றுமே செய்யவில்லை சும்மா தடியை எடுத்து எறிந்தேன் மாங்காய் விழுந்திச்சு அப்பா பிடிச்சிட்டார்! அதுதான் நடந்தது''

''ப்ரியா! அதிஸ்டக்காரிதான் எடுத்த எடுப்பி லேயே காரியம் முடிந்து விட்டது!''

"ப்ரியா! பொம்பிளையா கொஞ்சமாவது வெட்கப்படமாட்டாயா? வெட்கமே இல்லையா?"

"மாப்பிள்ளையை வாங்கி வந்தமாதிரி வெட்கத்தையும் கொஞ்சம் கொழும்பில் வாங்கி வந்திருக்கலாமே. நீ"

"உன்னைக் கேட்டேன் பாரு! நான் ஒரு மடையன்."

"இப்பவாது உண்மையை ஒப்புக்கொண்டாயே."

"இந்த வாய்எல்லாம் கொஞ்சநாளுக்குத் தான். கல்யாணம் முடிந்த பிறகு பார்க்கிறேன் உன் வாயை"

"என்ன அம்மா மௌனமாக இருக்கிறா?"

"அவளோடு சண்டைபிடித்தாலும் அவன் மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறாய் என்று எனக்கு தெரியும்."

"நீ கொழும்புக்குப் போன பிறகு ஒரு மாதமாய் பித்துப் பிடித்தவள் போல் இருந்தாள் அப்பதான் உன்னுடைய அருமை எவ்வளவு என்று அவளுக்குத் தெரிந்தது."

"கொழும்பில் என்நிலையும் அப்படித்தான் அம்மா பழகிவிட்டுப் பிரிந்தால் கொஞ்சநாள் அப்படித்தான் இருக்கும்."

"நீ யாழ்ப்பணம் வந்தால் உன்கூடக் கொழும்புக்குப் போகப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தள்.

என்னோடு இல்லை! மாப்பிள்ளையோடு போகிறாள்.''

''நல்ல நாள் பார்க்க வெளியில் போக வேண்டும் சாப்பாட்டை எடு பத்மா.''

அப்பா ஆடை மாற்றச் சென்றார்.

அம்மா சமையல் அறைக்குச் சென்றார்

''சங்கர் அவர் அழகா இருப்பாரா?''

''சந்திரனைக் கேட்கிறாயா?!

''அவர் பெயர் சந்திரனா?''

சந்திர மோகன்.

ஏன் சந்திரன் என்று கூப்பிடுகிறார்கள் மோகன் என்று அழைத்தால் நல்லா இருக்குமே?''

''நீ அப்படிக் கூப்பிடு. மற்றவர்களுக்கு சந்திரன் என்று அழைப்பது விருப்பமாய் இருந்திருக்கும்!''

''உன்னைப் போல் இருப்பாரா?''

''நல்ல அகன்ற மார்பு யாழ்ப்பாணம் விளையாட்டு மைதானம் மாதிரி நீ படுத்துத் தூங்கலாம்.''

என்னை என்ன தூங்குமூஞ்சி என்றா சொல்கிறாய். அது இருக்கட்டும்.''

''நிறம் எப்படி?''

''என் நிறம் தான்''

''உன் நிறம் என்றால் பரவாயில்லை''

ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''நானும் கறுப்பு அவரும் கறுப்பாக இருந்து இருவரும் பக்கத்துக்குப் பக்கம் போனால் இரண்டு

பனை மரங்கள் நடந்து வாற மாதிரி இருக்கும்!''

சொல்லிவிட்டுச் சிரித்தாள்

''எங்கே வேலை செய்கிறார்''

''வர்த்தகத்திணைக்களத்தில்''

''சந்திரன் உனக்கு நல்ல பொருத்தமாய் இருப்பான்''

''நீ சொன்னால் சரியாகத்தான் இருக்கும் பொருத்தம் பார்ப்பதில் கெட்டிக்காரன் தான் ஆனால்......................''

''ஆனால் என்ன?''

''சாந்தாவை நீ அடைய முடியாமல் போச்சே சங்கர் எனக்கென்று ஒரு வாழ்க்கையை அமைத்துத் தருகின்ற நீ. உனக்கொரு வாழ்க்கையை அமைச்சுக்க முடியாமல் போச்சே! அதை நினைத்தால் நெஞ்சு வலிக்குது''

''ஏன் அப்படி நினைக்கிறாய்?''

''நடந்தது ஒன்றும் உனக்குத் தெரியாது. சாந்தாவின் அக்காவுக்குக் கல்யாணம் முடிந்து விட்டது. மாமாவின் மகனைத் திருமணம் செய்வதாக அவள் வாக்குக் கொடுத்த பின்புதான் நடந்தது. இனி என்ன செய்ய முடியும்?''

சந்தா வாக்குறுதி கொடுத்திருக்கலாம் மாமா மகன் அவளை மணந்து கொள்ளச் சம்மதிக்க வேண்டாமா?

''ஏன்? ஏன்? அவர் சம்மதிக்க மாட்டாரா?'' அவசரமாகக் கேட்டான்''

''விமல் என்னுடன் தான் வேலை செய்கிறான்.''

''சங்கர்!''

''சாந்தாவை என்னையே திருமணம் முடிக்கும்படி சொல்லி அவனே கல்யாணத்தை முடித்து வைக்க என்கூட வந்திருக்கிறான்.''

அடக்கமுடியாத பெரு வியப்புடன்

''சங்கர்'' என்று கூவினான்.

''என் கல்யாணச் செய்தியிலும் பார்க்க இந்தச் செய்தியைக் கேட்க எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கு. இப்பவே ஓடிப்போய் சாந்தாவைக் கட்டி அணைக்க வேண்டும் போலிருக்கு சங்கர்.''

''அவசரப்படாதே ப்ரியா! நானும் விமலும் பின்னேரம் போகப்போகிறோம். அப்போது அவள் தெரிந்து கொள்ளட்டும்!''

''இல்லை சங்கர் இந்தச் செய்தியை நான் தான் முதலில் அவளுக்குச் சொல்ல வேண்டும். அவள் முகம் மலர்ந்து சிரித்து எத்தனை மாதங்களாகி விட்டது''

''ப்ரியா நான் ..............''

''தடுக்காதே சங்கர் நீயும் அவளும் விரும்புவதற்கு நான் தான் காரணம். அவளை நீயே கல்யாணம் முடிக்கப் போகிறாய் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் சொல்ல விடு''

''பல மாதங்களுக்குப் பிறகு அவளைச் சந்திக்கச் செல்லும் உன்னைச் சிரித்த முகத்துடன் வரவேற்க

வேண்டும் என்பது தான் என் ஆசை''

''சரி உன் விருப்பம் ''

''ரொம்ப தாங்ஸ் சங்கர்!''

"இப்பதான் சாப்பிடுகிறாயா?''

''நீயும் சாப்பிடேன் ஒரு சீவல்.'' பாணை நீட்டினாள்.

''பாண் வேண்டாம் கற்கண்டு போட்டு பால் கொண்டா குடிக்கிறேன்.''

''என்ன ஒரே மகிழ்ச்சியாக இருக்கிறாய்;''

கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தமிட்டாள் ப்ரியா.

''சீ என்ன ப்ரியா.''

''ம் நான் கொஞ்சினால் சீ என்பாய் சங்கர் கொஞ்சினால் மற்றக் கன்னத்தையும் திருப்பிக் காட்டுவாய்!''

''ப்ரியா பழையதை எல்லாம் நினைவுபடுத்தி ஏன் மனதை வேதனைப்படுத்துகிறாய்?''

''வேதனைப்பட வேண்டாமடி சந்தோசப்படு! சங்கரோடு நீ வாழப்போகிறாய்!''

''ப்ரியா? ? ?''

''சங்கர் காலை கொழும்பில் இருந்து வந்து விட்டான்.'' தனியே வரவில்லை உன் மாமாமகன் விமலையும் கூட்டிக்கொண்டுதான் வந்திருக்கிறான். விமல், உனக்கும் சங்கருக்கும் மணம் முடித்து வைப்பதாக உறுதி கூறி இருக்கிறார்.''

ப்ரியாவின் தோளைப் பிடித்துக்கொண்டாள்.

''கவலையை விடடி. உனக்குத்தான் சங்கர். இல்லை சங்கருக்குத்தான் நீ. இரண்டும் ஒன்று தானே உளறுகிறேனாடி.''

''உளறல் என்றாலும் மகிழ்ச்சியாய் இருக்கு ப்ரியா.''

''உளறுவதற்கு இன்னும் ஒருகாரணம் இருக்கு! சங்கர், எனக்கும் பேசி கல்யாணம் முடிவு செய்து வந்திருக்கிறான். உனக்கா அல்லது எனக்கா கல்யாணம் நடக்கப் போகிறதென்று தெரியவில்லை.''

''சங்கர் உண்மையில் ஓர் ஆண்பிள்ளை தான்டி என் காரியத்தையும் தன்விசயத்தையும் வெற்றியாக மாற்றிவிட்டான்.''

''சங்கர் வருவாரா'' ப்ரியா அடக்கமுடியாத ஆவலுடன் கேட்டாள்.

''பறக்காதே வந்த உடனே போய்க் கட்டிப் பிடித்து கொஞ்சிடாதே. நீ இருக்கிற நிலையைப் பார்த்தால் அப்படிச் செய்தாலும் செய்வாய்!''

''சங்கர் தான் எனக்கென்றாகி விட்டதே கொஞ்சினால் என்ன கரைஞ்சா போய்விடுவார்.''

''அடி பாவி! உன்னை அமைதியானவள் என்று நினைத்தேனே என்தப்புத்தான்.''

''ஒன்றும் தெரியாத பாப்பா போட்டுக்கொண்டாளாம் தாப்பா. காலம் வரும்போது எல்லாப் பெண்களுக்கும் வாற ஆசை தான்!''

ஆனால் உனக்கு காரியம் ஆகமுன்னமே ஆசை வந்து விட்டதடி. எனக்குக் கல்யாணம் என்று சொன்ன உடனேயே சந்தோசமாகத்தான் இருந்தது உன்னைப்போல் பறக்கவில்லை.

''உன் கல்யாணம் பேச்சுக் கல்யாணம்'' ''என் கல்யாணம் காதல் கல்யாணம்; அதுவும் உன்னால் எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டக் கல்யாணம்''

''உன்னை நான் மறக்கவே மாட்டேன் ப்ரியா. சங்கர் என்னை முத்தமிடும் போது கூட என் தோழி செய்த உதவியினால் கிடைத்ததென்று தான் நினைப்பேன்.''

''சீபோடி அளவுக்கு மிஞ்சி என்னைத் தலையில் தூக்கி வைக்காதே!''

''உன்கல்யாணம் முதலில் நடக்கட்டும் ப்ரியா!'' நான் உனக்காகக் கொஞ்சக் காலம் பொறுத்துக் கொள்கிறேன். நீ எனக்கும் சங்கருக்கும் எவ்வளவு உதவி செய்திருக்கிறாய்.''

''நாங்க இரண்டுபேரும் முடிவு செய்ய முடியாது. வீட்டில் பெரியவங்க தான் முடிவு செய்ய வேண்டும் ''யாருக்கு அதிஷ்டம் இருக்கிறதோ அவர்களுக்கு முதல் நடக்கட்டும்''

''சங்கர் பின்னேரம் விமலோடு வீட்டுக்கு வருவார். நிதானமாக நடந்து கொள்.''

''சங்கர் எப்படி இருக்கிறார்?''

''நேரில் பார்த்தால் கவலைப்படுவாய் பாதியாய்ப் போய் விட்டான்.''

அம்மா கவலைப்பட்டா. உன் நினைவு தான் காரணமென்று நான் நினைக்கிறேன் கொழும்பு சாப்பாடு சரிஇல்லை என்று அம்மாவுக்குச் சொன்னான்.''

''பெண்கள் கவலையை வெளியில் சொல்லி ஆறுதல் அடைந்து விடுவார்கள் ஆதரவையும் பெற்று விடுவார்கள்;

ஆண்கள் அப்படி இருக்க முடிவதில்லை!

''வேதனைகள் வேரோடி வாழ்வோடு விளையாடும்.''

''என்னம்மா சங்கர் இப்பவே சமைக்கப் பழகிறானா பெண்டாட்டிக்கு சமைச்சுப் போட. இந்த ஆண்களே இப்படித்தான் புதுப்பெண்டாட்டியைக் கண்டவுடன் தலையில் வைத்துக் கூத்தாடுவார்கள். பெண்களும் பிடித்துக் கொள்வார்கள்!

ஆண்களை ஆட்டிவைப்பதாலோ பெண்ணோடு ஆட்டியும் சேர்ந்து பெண்டாட்டி என்று வந்து விட்டதோ!''

''உனக்கும் கொஞ்சம் மூளை இருக்கு புருஞ்சு கிட்டியே! அம்மா தனியே கஷ்டப்படுகிறா கொஞ்சம் உதவி செய்யலாமே! எங்கேயோ போய் விட்டு வாராய்''

''போனால் போன இடம், கதை கண்ட இடம் கைலாயம்''

ஏன் நீ உதவிசெய்தால் என்ன என்று நினைத்துத் தான் நேரம் செல்ல வந்தேன். இவ்வளவு நாளும்

நீயா அம்மாவுக்கு உதவியது? எதற்காக அம்மாவுக்கு உதவி செய்கிறாய் என்று எனக்குத் தெரியும்! அம்மாவைக் காக்கா பிடிக்கத்தானே! ஏன் அம்மா விடம் நேரடியாய் கேளேன். வேண்டாம் என்றா சொல்லி விடுவா. சாந்தாவை அம்மாவுக்குக் நன்றாகப் பிடித்திருக்கிறது''

''ப்ரியாவைத் தாய்விழித்துப் பார்த்தாள்.''

சாந்தாவை சங்கர் விரும்புகிறான் அம்மா உன் னிடம் எப்படிச் சொல்வது என்று திணறிக் கொண் டிருக்கிறான்.

தாய்குச் சிறிது திகைப்பாக இருந்தாலும். சாந்தாவை நினைத்தவுடன் மனம் மகிழவே செய்தது.

''ப்ரியா சொல்வது உண்மையா சங்கர்?''

''உனக்குச் சாந்தாவைப் பிடித்திருக் கிறதாம்மா?''

''நீதானே முடிக்கப் போகிறாய் உனக்கு விரும்பம் என்றால் எனக்கும் சம்மதம் தான். அவளையே மணந்து கொள் அப்பாவிடம் கேட்டுச் சம்மதம் பெற்றால் சரி. சாந்தா நல்ல பிள்ளை தான்''

''என்றுமவள் எங்கள் வீட்டுத் திருமகளாவள் அந்த இனிய மகள் எனது தாய்க்கு மருமகளாவள்.

''ப்ரியா தான் பாடினாள்.''

''என்ன பார்க்கிறாய்! சினிமாப் பாட்டு அம்மா காலத்துப்படத்தில் வ ந் த து. உ ன க் கா க நா ன் பாடினேன்''

''அப்பாவுக்கு சொல்லிவிட்டேன் அவர், அம்மா சரி என்று சொன்னால் தனக்கும் சம்மதமென்றார்''

நீ விருப்பியபடி முடிந்துவிட்டது. அம்மாவையும் உன்னோடு கூட்டிக் கொண்டு போய்விடு''

நீ சொல்லாவிட்டாலும் அம்மாவைக் கூட்டிக் கொண்டு போற முடிவோடு தான் வந்திருக்கிறேன் அப்பாவிடமும் ஏற்கனவே சொல்லிவிட்டேன்.''

''அம்மா சங் க ர் ! உ ன க் கா க உருகுகிறா ன் பேசாமல் அவன் கூடப்போய் உன் மருமகள் சாந்தா சமைச்சுப் போடக் காலாட்டிக் கொண்டு சாப்பிடு!''

இவ்வளவு காலாமும் நெருப்புத் தி ன் று வ டி த் துக் கொட்டியது போதாமல் இன்னும் நெ ரு ப் புத் தின்னச் சொல்கிறாயா அம்மாவை?''

''கடைசிவரிகள் ப்ரியாவை அசைத்துவிட்டது.

''சங்கர் நீ உண்மையாகவா சொல்கிறாய்?''

''அப் பே பா நா ன் விளையாட்டுக்குத் தா ன் சொல்கிறேன் என்று நினைத்தாயோ? நா ன் தா ன் கடைசி ஆண்பிள்ளை என் கூ ட த் தா ன் அ ம் மா இருப்பா. நீ ம ண ம் முடித்துக் கொண்டு போய்விடு வாய் அம்மா தனியே இருந்து என்ன செ ய் வ து ? அக்காவோ அண்ணாவோ அம்மாவைப்பார்ப்பார்கள் என்று சொல்ல முடியாது.

''வீட்டை என்ன செய்வது?''

''உனக்குத் தானே சீதனமாய் அப்பா எழுதப் போறார். சந்திரனோடு கலந்தாலோசித்து நீ என்ன வேண்டுமானாலும் செய்! ஆனால் அம்மாவை நான் கூட்டிக் கொண்டு போய்விடுவேன். இனிமேலும் அம்மாவைக் கஷ்டப்பட விடமாட்டேன். உனக்கு அம்மாவின் உதவி வேண்டுமென்றால் என்னிடம் வா! சாந்தா உன் சினேகிதி தானே. உனக்கு உதவி செய்வாள்''

''அம்மா நீ என்ன நினைக்கிறாய்?''

''அப்பா வந்த பிறகு யோசிப்போம்''

''அம்மா யோசிப்பதற்கு ஒன்றும் இல்லை நீ என் கூடத்தான் வரவேண்டும். அப்பாவையும் என் கூடத்தான் வைத்திருக்கப் போகிறேன்.''

ப்ரியா! நீயும் சந்திரனும் எங்க கூட இருக்க விரும்பினால் வா எல்லோரும் ஒரு வீட்டை எடுத்து ஒன்றாய் இருப்போம்.''

''எதற்கும் அப்பா வரட்டும்!''

"சங்கரின் வருகைக்காகக் காந்திருத்தவள் தெருக்கதவைத் திறந்து கொண்டு வரும் பொழுதே ஒரு விநாடி ஆடிப்போய் விட்டாள் தன் கண்களையே நம்ப முடியாமல் தவித்தாள்.

இப்படி அடியோடு மாறிப் போய்விட்டாரே நெஞ்சம் வேதனையால் நிறைந்து கனத்தது.

மனதை ஓரளவு திடப்படுத்திக் கொண்டு அவனை யும் விமலையும் வரவேற்றாள்.

''அம்மா இல்லையா சாந்தா?'' விமல் தான் கேட்டான்.

''கோயிலுக்குப் போயிருக்கிறா.''

''யாழ்ப்பாணப் பெண்களுக்கு கோயிலை விட் டால் வேறு எங்கே போகமுடியும்?''

''சாந்தா விசயம் உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். நீ சங்கரையே மணந்து கொள் முழு மனதோடு தான் சொல்கிறேன்! சங்கர் எனக்குச் செய்த உதவி உனக்குத் தெரியுமா?''

''கேள்விக் குறியுடன் பார்த்தாள்.''

''அவன் சொல்லி இருக்க மாட்டான்.''

''குடிகாரனாக இருந்த என்னை மனிதனாக மாற்றியவன் அவன் தான்''

''அது எல்லாம் பழையகதை. அவனுக்கு உன்னைத் திருமணம் செய்து வைப்பதாக அவனி டம் வாக்குக் கொடுத்து விட்டேன். யாழ்ப்பாணத் தில் பெண்களுக்கா பஞ்சம் வேறு பெண்ணைப் பார்க்கும்படி அப்பாவிடம் சொல்லி விட்டேன்''

''மாமா சம்மதித்து விட்டாரா?''

''நீ வாக்குக் கொடுத்ததைச் சொல்கிறாயா? அதை எல்லாம் மறந்துவிடு. அப்பாவிடம் விபரம் எல்லாம் சொல்லிவிட்டேன். நான் குடிப்பதை விட்டதை அறிந்து மகிழ்ச்சி !அடைந்தார். அதற்கு

சங்கர்தான் காரணம் என்று தெரிந்து அவனை நீ விரும்புவதும் அறிந்து அவனை நீ மணந்து கொள்ளட்டும் என்று என்னிடம் சொல்லி விட்டார்.''

''விமல் உங்களுக்கு நல்ல மனசு. சங்கரோடு என்வாழ்வு இணைந்து கொள்வது நீங்கள் போட்ட பிச்சையாகவே நினைக்கிறேன்''

''மாமாவை நான் பார்க்கவிரும்புவதாக சொல்லுங்கள் எங்க குடும்பத்துக்கு அவர் செய்ய உதவி எவ்வளவு வாழ்நாள் முழுவதும் மாமாவுக்கு எங்க குடும்பம் முழுவதும். கடமைப்பட்டிருக்கு.''

''சுலபமாக மறந்து விடக்கூடிய உதவியா செய்திருக்கிறார். பெத்த பிள்ளைகளே தாயையும் தகப்பனையும் சகோதரங்களையும் மறந்து வெளிநாட்டில் இருக்கின்ற காலத்தில் மாமா எங்கள் குடும்பம் மூழுவதையுமே வாழவைத்திருக்கிறார். தெய்வங்கள் மனித உருவில் உதவுவதாகச் சொல்வார்கள் அது மாமாவுக்கு முழுவதும் பொருந்தும்.''

''எனக்கு அவசரவேலை இருக்கு. நீ சொன்னதை எல்லாம் ஒன்றுவிடாமல் அப்பாவிடம் சொல்கிறேன். நீ அப்பா மேல் வைத்திருகின்ற மதிப்பை அவர் தெரிந்து கொள்ள வேண்டாமா? மாமி வந்தால் சொல்லு எல்லா விபரத்தையும்.''

''சங்கர்! நீ சாந்தாவோடு கதைத்துவிட்டுவா! இன்னொரு நாள் வருகிறேன் சாந்தா.''

''மனதில் இருந்து பெரிய சுமை இறங்கியது போல் இருக்கிறது சங்கர்! அது இருக்கட்டும் ஏன்

இப்படி அடியோடு மாறிவிட்டீர்கள்? உங்களைப் பார்க்க நெஞ்சு வறண்டு போகுது. உடம்பை ஏன் கவனிக்காமல் விட்டுவிட்டீர்கள்!

வெட்கத்தை விட்டு உண்மையைச் சொல்வதாக இருந்தால் உன்னை என்னால் மறக்கவே முடியவில்லை; உன் நினைவால் தினமும் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தேன்; எவ்வளவோ முயற்சி செய்தேன் உன் நினைவில் இருந்து விடுபடுவதற்கு முடியவே இல்லை சாந்தா.''

''கண்ணீருடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். அவளின் கண்ணீர் சட்டையையும் ஈரமாக்கி நெஞ்சில் சில்லிட்டது.

''விமலைச் சந்திக்காமல் விட்டிருந்தால் காலமெல்லாம் கவலையுடன் தான் வாழ்ந்திருப்பீர்களா?''

''அவைகளை மறந்துவிடு சாந்தா!''

''எதை மறப்பது என் ஒரு படத்தையாவது வைத்திருக்க அனுமதி கேட்டீர்களே கொஞ்சம் கூட நெஞ்சில் ஈரம் இல்லாமல் வாங்கிக் கொண்டதையும் மறக்கச் சொல்கிறீர்களா?''

''உங்களைவிட்டு வேறு ஒருவருடன் வாழ்வதற்கு தாயாரானேனே அதை மறக்கச் சொல்கிறீர்களா?''

மாலை மாலையாக அவள் வடித்த கண்ணீரால் அவன் மார்பு முழுவதும் நனைந்து போனது.

''சாந்தா உன்னையும் உன் மனதையும் எனக்குத் தெரியும். அதில் நான் ஒருவன் தான் இருக்கிறேன் என்பது முழுக்க உண்மை. நடந்ததை

எல்லாம் ஒரு கெட்டகனவாக நினைத்து மறந்துவிடு என்மனம் உன்மேல் கொஞ்சம் கூட குற்றமோ, குறையோ காணவில்லை. நீ என்னுடையவள். எனக்கு மட்டுமே சொந்தமானவள். எனக்கு நல்ல மனைவியாக என் அம்மாவுக்கு நல்ல மருமகளாக உன்னால் மட்டுமே இருக்கமுடியும். அப்பா தன் மருமகளைப் பார்க்க விரும்புவார் நாளை வீட்டுக்குவா.''

''அம்மா உன்னுடைய மருமகள் வாறாள்'' ப்ரியா பலமாகத்தான் சொன்னாள்.

''வெட்கமாக இருந்தாலும் சிரித்துக் கொண்டு வந்தாள்.

''விளக்கேற்ற வருகிறாய் வலது காலை எடுத்து வைத்து வா மருமகளே!''

''உனக்கு எப்ப பார்த்தாலும் கேலிதான் நீ வா சாந்தா!''

''ம்-மருமகள் மீது ரொம்பத்தான் பாசம் வழியுது. அன்ரி கோயிலுக்குப் போறீங்களா? நானும் வாறேன்.''

''என்னடி அன்ரி! மாமி என்று கூப்பிடு!''

''ப்ரியா நீயும் வாயேன் கோயிலுக்கு.''

''நான் என்னத்துக்கு மாமியும் மருமகளும் போய்விட்டு வாங்கோ!''

''ப்ளீஸ்! வாயேன் ப்ரியா!''

''சரி மச்சாளுக்காக வருகிறேன்.''

மூத்த மருமகள் அம்மாவுக்கு நல்லா வந்து வாய்க்கவில்லை. வந்த அண்ணி அண்ணாவை இழுத்துக்கொண்டு போய்விட்டாள். இளைய மரு மகள் மாமியார் காலையே கட்டிக் கொண்டாள்.

''சங்கருக்கு வந்து வாய்த்தாய் சாடிக்கு ஏற்ற மூடிமாதிரி! இரண்டு பேரும் அம்மாவைத் தலையில் வைத்து ஆடுங்கள்.''

''ஏன் ப்ரியா! என்னை இனி அண்ணி என்றா கூப்பிடுவாய்?''

என்னடி சொன்னாய்? கொழுப்புகூடிப்போச்சா.

''அப்போ மச்சாள் என்றா கூப்பிடப் போறாய்''

''இல்லை கழுதை என்று கூப்பிடப்போறேன்.''

''ரொம்ப நல்லது அப்படியே கூப்பிடு.''

''அர்ச்சனைத்தட்டைத் தூக்கு சாந்தா!

''நான் இருக்கிறது அம்மா கண்ணுக்குத் தெரியவில்லை உன்னைத் தூக்கச் சொல்கிறா.''

''ம். உன்காட்டில் மழைபெய்கிறது.''

''அன்ரி யாரோ வருகிறார்கள்''

''யாரோ இல்லை உன்னுடைய வருங்கால மாமா!

''அவரை நேருக்கு நேர் பார்க்கக் கூச்சமாக இருந்தது தலையைக் குனித்துக் கொண்டாள்.

''அப்பா! இவள்தான் உங்க மருமகள் பொருத்தமா பாருங்க''

''நான் என்னபார்க்கிறது. அவன்தான் பார்த்து முடிவு செய்துவிட்டானே. நீதானே உனக்கு பொருத்தமான மச்சாளைக் கூட்டி வந்து அவனோடு சேர்த்து வைத்தாய்!''

''பத்மா! பின்னேரம் மாப்பிள்ளை வீட்டுக்கு போக வேண்டும். நீயும் நானும் சங்கரும் போகலாம். மூன்று பேர் போவது நல்லதல்ல; வேறு யாருக் காவதுசொல்லிவை!

வேறு யாருக்கும் சொல்ல வேண்டாம் அம்மா. சாந்தாவை வரச்சொல்லு வருவாள். அங்கே இவளை யாரென்று கேட்டால் மருமகள் என்று கொஞ்சம் பெருமையாகச் சொல்லலாம்.''

''வாறியா சாந்தா!''

வாறதில் ஒன்றும் இல்லை அன்ரி. எதற்கும் அங்கிளையும் சங்கரையும் ஒருவார்த்தை கேளுங்க.''

''அப்பாவும் சங்கரும் சம்மதிப்பாங்க.''

''ப்ரியா! அவங்க சம்மதிப்பாங்க என்பது வேறு விசயம்; வயதுக்கு மூத்தவங்களை வீட்டில் பெரியவர்களை ஒரு சம்பிரதாயத்துக்காகக் கேட்க வேண்டும் ஆண்பிள்ளைகளை கேட்காமல் எங்கள் பாட்டில் நடக்கிறது அழகில்லை.''

''என்னங்க சாந்தாவைக் கூட்டிக் கொண்டு போகலாமா?

வந்தால் கூட்டிக்கொண்டு போவோம்.''

''இப்போ திருப்தியாடி, சங்கரும் சம்மதிப் பான்.''

''நீ வா''

''மூன்று மணிக்கு வீட்டுக்கு வந்துவிடு.''

''சரி அன்ரி''

''மூவரும் கோயிலுக்குப் புறப்பட்டார்கள்.

''அன்ரி என்ன உடுப்புப் போட்டுக்கொண்டு வர?''

''சேலை உடுத்துக் கொண்டு வாயேன்?''

''ஸ்கேட்டும் பிளவுசும் போட்டுக் கொண்டு வந்தால் என்ன அன்ரி?''

''ஏன் சேலை உடுத்தால் என்ன?''

''அங்கே என்னைப் பார்த்தால்.................!

''நீ சொல்வது புரியுது. கல்யாணப் பேச்செல் லாம் முடிந்து விட்டது சம்பிரதாயத்துக்குத் தான் போகிறோம். கல்யாணத் திகதியை முடிவு செய்யத் தான்''

''அப்படியென்றால் சேலையுடன் வருகிறேன் அவ்வளவு அலங்காரம் செய்யாமல் வாறேன்.

''என்னடி எனக்காகத்தானே''

''ரொம்பவும் எச்சரிக்கையாகத்தான் இருக் கிறாய். வாழ்க்கைவிசயம் இல்லையா. அவதானமா கத்தான் இருக்கவேண்டும். மனித மனம் குரங்காட்

டம் நிமிடத்துக்கு நிமிடம் மாறும்;''

''சங்கர் மட்டும் மறாமாட்டானா?''

''மனதில் உறைந்து போய்விட்டால் மாறமாட்டாது.

''கோயிலில் சனம் குறைவாகவே இருந்தது. மெதுவாகவே வழிபாட்டை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள்.

"பிரியா! மாப்பிள்ளை அழகாய் இருக்கிறார்''

''தெரியும்''

''தெரியுமா? மாப்பிள்ளையைப் பார்த்து விட்டயா?''

''நேராகப் பார்க்கவில்லை. சங்கர் படம் கொண்டு வந்து காட்டினான்''

''நீ படத்தைத்தானே பார்த்தாய் நான் நேரிலேயே பார்தேன்''

''ம். கட்டிப் பிடித்தால் சொக்கிப் போவாய்.

''நீயும் நன்றாகக் கதைக்கப் பழகிவிட்டாய்!''

''உன்னோடு சேர்ந்திருக்கேன் இல்லை எனக்கும் தொத்திவிட்டது.''

''என்ன இருந்தாலும் சங்கர் அழகுதான்!''

''விடமாட்டியே உன்னுடைய தெரிவை விட்டுக் கொடுக்கமாட்டாயே.''

''விளையாட்டுக்குச் சொன்னேன் சங்கர், எனக்கழகு. சந்திரன் உனக்கழகு இப்பதிருப்தியா?''

''உனக்குத் திருப்தி என்றால் எனக்கும் திருப்தி தான்.'' ''அவர்கள் எப்படி நடந்து கொண்டாங்க!''

''மகிழ்ச்சியாகத்தான் வரவேற்றாங்க. ஏற்கனவே எல்லாம் பேசி முடிவு செய்துவிட்டாங்க. இன்று கல்யாணத் தேதியை மட்டும் முடிவு செய்திருக்கிறாங்க. அன்ரியிடம் திகதியைச் சரியாகத் தானே சொன்னாய்.''

''ஓம்''

கல்யாணம் பெண்ணுக்கும் ஆணுக்கும் தான்; ஆனால் கல்யாணத் திகதியை பெண்ணைக் கேட்டுத்தான் முடிவு செய்ய வேண்டும் பெண்ணுக்கு வசதியானதிகதியில் தான் கல்யாணம் வைத்துக் கொள்ளவேண்டும். இயற்கை பெண்களுக்குச் செய்த கொடுமைகளில் அதுவும் ஒன்று.

''ப்ரியா! இயற்கையை ஒருநாளும் குறை சொல்லாதே. கடவுள் காரணமில்லாமல் எதையும் படைக்கமாட்டார். இயற்கை பெண்களுக்கு அப்படிப் படைக்காவிட்டால் நீயும் இல்லை நானும் இல்லை மனித இனமே இருக்காது.''

''ஏன் அந்த நாட்களை நினைத்துச் சலித்துக் கொள்வான். மாதம் முழுவதும் கஷ்டப்படுகிறோமே பெண்கள் ஓய்வாக இருக்கட்டுமே என்று இயற்கை பெண்களுக்குச் செய்த நன்மையாக ஏன் நினைக்கக் கூடாது?''

''உண்மையைச் சொல்லு அந்த நாட்களைச் சொல்லி வீட்டில் நீ வேலை செய்யாமல் இருப்பதில்லையா? மற்றவர்களும் உன் நிலையைப் புரிந்து வேலை செய்யச் சொல்லிக் கேட்பதும் இல்லை! சரிதானே நான் சொல்வது.''

''ஒப்புக் கொள்கிறேன். ஆனால் சிலசமயங்களில் சில காரியங்களைச் செய்வதற்கு இடைஞ்சலாக அமைந்து விடுகிறதே.''

''நல்லதும் தீயதும் கலந்து தான் இருக்கும் நல்லது நடக்கும்போது சிரித்துக்கொண்டு வரவேற்க வேண்டும் ப்ரியா.''

''காதல் கல்யாணம் பிந்திநடக்கப் போகுது பேச்சுக் கல்யாணம் முந்தி நடக்கப்போகுது.''

''நான் சங்கரை விரும்பும் போது நீ எனக்கு உதவினாய். அப்போ நான் என்ன நினைப்பேன் தெரியுமா? கல்யாணம் முடித்துச் சங்கரோடு மகிழ்ச்சியாக இருக்க தனிமையில் வாடுவாயே என்று மனதிற்குள் நினைத்து வருந்துவேன். இப்போ நெஞ்சு நிறைஞ்சிருக்கு. உன் அனுபவத்தை எனக்குச் சொல்லு உதவியாக இருக்கும்.''

''சீ போடி எங்கேயோ போய்விட்டாய்!

வேடிக்கைக்குச் சொன்னேன், கதைப்புத்தகத்தை படிக்கு முன்பு முடிவைத் தெரிந்துகொள்ள எவரும் விரும்ப மாட்டாங்க. சுவை குன்றிவிடும்

என்பதற்காக. தாங்களே படித்துத் தெரிந்து கொள்ளவே ஒவ்வொருவரும் விரும்புவாங்க.''

''கல்யாணக் கனவுகளுடன் மகிழ்ச்சியோடு இரு ப்ரியா வாறேன்.''

''விடிந்தால் திருமணம்; சாந்தா முதல் நாளே வந்து தங்கினாள். மாப்பிள்ளை வீட்டாரின் சம்மதத்துடன் சாந்தா தோழியாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். சங்கர் மாப்பிள்ளைத் தோழனாக சந்திரனை அழைத்து வந்தான்.

சுபநேரத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்க சந்திரன் ப்ரியாவின் கழுத்தில் தாலி கட்டினான்.

கல்யாணக்களை முடிந்து ஒருவாரம் ஓடிவிட்டது. கொழும்புக்கு எல்லோரும் புறப்பட ஆயத்தமானார்கள். சங்கரின் விருப்பப்படி அவன் அம்மாவும் கொழும்புக்கு வரச் சம்மதித்தாள். வீட்டை உறவுக் குடும்பத்திடம் ஒப்படைத்தார்கள்.

சாந்தாவின் கையைப்பிடித்தபடி கண்கலங்கினாள்.

''ஏன் கவலைப்படுகிறாய் ப்ரியா! கொஞ்ச நாளில் சாந்தாவைத் திருமணம் முடித்துக் கொழும்புக்கு கூட்டி வரத்தானே போகிறான்!'' தாய் ஆறுதல் கூறினாள்.

புகையிரத நிலையத்துக்குப் போகக்கார் வாசலில் வந்து நின்றது. சந்திரனும் அப்பாவும் ஏறிக்கொண்டார்கள். சாந்தா, சங்கரின் அப்பாவுக்கு

அருகில் வந்து நின்றாள்.

''என்னம்மா ஏதாவது சொல்ல விரும்பு கிறாயா?''

''சீதனமாகக் கொண்டுவர என்னிடம் எதுவும் இல்லை அங்கிள்!'' தலையை குனிந்தபடி சொன் னாள்.

அவளை அணைத்துக் கொண்டாள் ப்ரியாவின் தாய்.

''நீ ஒன்றும் கொண்டுவர வேண்டாம் நாங்கள் உன்னிடம் கேட்கவும் மாட்டோம் என்றார் சங்க ரின் அப்பா! நீயே மகாலஷ்மி மாதிரி இருக்கிறாய். நீ மருமகளாக வந்தால் செல்வம் எல்லாம் வந்த மாதிரிதான். உனக்கும் திருமணத் திகதியை குறித்து விட்டுத்தானே போகிறோம்: சிலவாரங்களுக்குள் திரும்பி வந்து உன்னை என் மருமகளாய்க் கூட்டி போகிறேன். பணத்திலும் பார்க்கப் பண்பு தான் முக்கியம், பணத்தோடு வந்த மருமகளால் எத்தனை குடும்பம் பாதிக்கப்பட்டிருக்கு என்று எனக்குத் தெரியும் உன்னுடைய நல்லகுணம் கோடி பணத்தி லும் எவ்வளவோ மேல்'' என்றாள் சங்கரின் தாய்.

''இந்த உடுப்போடையே வாடி இப்போதே கொழும்புக்குக் கூட்டிக் கொண்டு போகிறோம். கொழும்பில் வைத்தே சங்கருக்கும் உனக்கும் கல் யாணத்தை முடித்து வைக்கிறோம்'' என்றாள் ப்ரியா!

''நேரமாகி விட்டது காரில் ஏறுங்க'' சங்கர் சொன்னான். காரில் ஏறத் தொடங்கினார்கள்.

சாந்தாவின் கையைப் பிடித்து வீட்டுக்குள் அழைத்துச் சென்றவன்.

,,இவ்வளவு காலம் பொறுத்துக் கொண்ட நீ இன்னும் நாலுகிழமை பொறுத்துக்கொள் சாந்தா!

நீங்களும் இல்லை ப்ரியாவும் இல்லை என்ற நினைப்பு தனிமை உணர்வை ஏற்படுத்தி விட்டது. ஒரு மாதம்தானே சமாளித்துக் கொள்கிறேன் நீங்க போய்வாருங்கள்.''

சங்கர் ஏறிக்கொள்ள கார் மெல்ல நகர்ந்தது. கார் யன்னல் ஊடாக கையை நீட்டிய ப்ரியா சாந்தாவின் கையில் முத்தமிட்டு விடை பெற்றாள். கார் வேகமாக ரெயில் நிலையத்தை நோக்கி விரைந்தது.

**கொழு**ம்பில் வந்து இறங்கிய பிறகு தான் எல்லோரும் விழித்தார்கள் எங்கே போவதென்று! சந்திரன், சந்திரனின் அப்பா, சங்கரின் அப்பா, மூன்று பேரும் தனித்தனியே அறையில் இருந்தார்கள். சங்கர் விமலோடு இருந்தான். எல்லோரும் சேர்ந்து இருக்கமுடியாது. கல்யாணச் சந்தடியில் இந்தவிடயத்தை மறந்துவிட்டார்கள்.

ஒருவீட்டை ஏற்பாடு செய்யும்வரை சமாளிக்க வேண்டும்.

சந்திரனின் அப்பாவிடம் திரும்பியவன் ''நீங்கள் உங்க அறைக்கே போங்க அப்பா நீங்க அம்மாவையும் கூட்டிக் கொண்டு உங்கள் அறைக்கு போங்கள்.

சந்திரன் உன் அறையில் ப்ரியாவுடன் இருக்கலாமா?''

''அடுத்த அறையில் இருப்பவர்கள் எல்லாம் ஆண்கள் தான்.

''அப்படி என்றால் ப்ரியாவை அங்கே கூட்டிச் செல்லவேண்டாம். ப்ரியா நீ அம்மாவுடன் அப்பா வின் அறைக்கே போ.''

''சந்திரன் உங்க அறைக்கே போங்க என்ன செய்கிறது? கொஞ்ச நாளைக்குத் தான் சமாளித்து கொள்ளுங்க. வேலை விட்ட பின்பு அப்பாவின் அறைக்குப் போய் ப்ரியாவைப் பார்க்கலாம்.''

''விமலைப் பிடித்தால்ஒருவீட்டை வாடகைக்கு எடுத்துத் தருவான். அவனுக்குக் கொழும்பில் நிறைய தெரிந்தவர்கள், நண்பர்கள் இருக்கிறார் கள். வீடு கிடைத்தால் அறைகளை வேறுஆட்களுக்கு கொடுத்து விட்டு ஒரே வீட்டில் இருப்போம் சிலவும் குறையும் வசதியாகவும் இருக்கும்; சமைத்தும் சாப் பிடலாம்.''

சங்கரின் ஏற்பாட்டின் படியே எல்லோரும் பிரிந்து சென்றார்கள்.

சந்திரனின் கையைப் பிடித்தவன்.

''வேலை முடிந்த பின்பு ப்ரியாவை அழைத்துக் கொண்டு போய் வாங்க.''

''சரி சங்கர்''

வேலை முடிந்து விமலுடன் வெளியில் வந்தான். நண்பர்களிடமும் தெரிந்தவர்களிடமும் சென்று வீட்டுக்காக அலைந்தார்கள் இருவரும் நாட்கணக்

கில் தெருத்தெருவாக கொழும்பு முழுவதும் திரிந் தார்கள்.

விமலின் நண்பர் ஒருவர் மூலம் வீடு ஒன்று இருப்பதை அறிந்து இருவருமாகச் சென்று பார்த் தார்கள். சங்கருக்கு அந்தவீடு பிடித்துவிட்டது. வீட்டுடன் சம்பந்தப்பட்டவரிடம் தொடர்பு கொண்டபோது அவர்கள் வீட்டை விலைக்குவிற்று விட்டு அவுஸ்திரேலியாவுக்குப் போக இருப்பது தெரிய வந்தது. சங்கரும் விமலும் வீட்டு உரிமை ஆளரிடம் சென்று பணிவாகவும் நயமாகவும் உரை யாடினார்கள்.

''வீட்டை ஏன் விற்கிறீர்கள் வாடகைக்குத் தாருங்கள் வாடகைப் பணத்தை உங்கள் வங்கிக் கணக்கில் போட்டுவிட்டு பணம்கட்டிய படிவத்தை மாதாமாதம் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கிறோம். நீங்கள் திரும்பி வந்தால் தங்கு வதற்கு வசதியாகவும் இருக்கும். பணமாக இருந் தால் செலவழிந்து போகும் என்று பலவாறாகக்கூறி அவர்களைச் சம்மதிக்க வைத்தார்கள். வாடகைப் பணத்தையும் பேசி முடிவுசெய்து வாடகைப் பத்திரத்தை கையெழுத்திட்டு சாட்சி கையெழுத் திட்டுக் கொடுத்தார்கள். அவர்களும் திருப்தியுடன் ஏற்றுக்கொண்டார்கள். நாங்கள் சனிக்கிழமை பயணமாகி விடுவோம் நீங்கள் ஞாயிற்றுக்கிழமை வரலாம்.

மகிழ்ச்சியுடன் கைகூப்பிக் கொண்டார்கள்.

ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாக இருந்ததால் ஒருலொறியைப் பிடித்து எல்லோருடைய அறைகளில் இருந்த பொருட்களை எல்லாம் ஏற்றிக் கொண்டு அந்த வீட்டுக்கு வந்தார்கள்.

ஒவ்வொருவரின் சம்மதத்துடனும் அறைகளை எடுத்துக்கொண்டார்கள்.

சந்திரனும் ப்ரியாவும் ஒருஅறையை எடுத்துக் கொண்டார்கள்.

சந்திரனின் ஒரு அப்பாவுக்கு ஒரு அறையைக் கொடுத்தான்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இன்னொரு அறையைக் கொடுத்தான்.

நாலாவது அறையை எடுத்துக் கொண்டான். சமையல் அறையில் எல்லோருடைய வாடகை அறைகளில் இருந்து எடுத்துவந்த பாத்திரங்களை எல்லாம் வைத்தார்கள். நடுவில் இருந்த ஹோலில் ரீவீயையும் வானொலியையும் மின்விசிறியையும் வைத்தார்கள். சமைப்பதற்கு நேரம் போதாமையினால் கடையில் இருந்து சாப்பாட்டை எடுத்து சாப்பிட்டார்கள்.

தளபாடங்களையும் பொருட்களையும் லொறியில் ஏற்றி இறக்கி அதற்குரிய இடங்களில் வைத்து ஒழுங்குபடுத்தியதில் எல்லோருக்கும் உடம்பு அலுப்பாக இருந்தது. கதவைச் சாத்திப் பூட்டி விட்டுப் படுத்துக் கொண்டவர்கள் நாலுமணிக்குத் தான்

எழுந்தார்கள். ஒவ்வொருவராகக் குளியல் அறைக் குள் சென்று ஹோலில் வந்து அமர்ந்தார்கள்.

''சந்திரன்! ப்ரியாவைக் கூட்டிக் கொண்டு வெளியில் போயிட்டு வாங்க!''

''அப்பா நீங்களும் அம்மாவைக் கூட்டிக் கொண்டு வெளியில் போயிட்டு வாங்க.!''

மாமாவும் வெளியில் போக ஆயத்தமானர்.

சங்கர் கடைசியாக வீட்டைபூட்டி திறப்பை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

விமலின் அறைக்குச் சென்று நன்றிசொன்னான் தான் திருமணத்தைப்பற்றியும் அவன் கல்யாணத் தைப் பற்றியும் கலந்தாலோசித்தான்.

''சங்கர்! நீ ஒன்றையும் நினைத்துக் கவலைப் படாதே!! நானும் உன்கூட யாழ்ப்பாணம் வரு கிறேன். முதலில் திருமணம் முடியட்டும் நடக்க வேண்டியதை பிறகு யோசிப்போம். உன்நிலை எனக் குப்புரிகிறது. கனடாவில் இருக்கும் சாந்தாவின் அண்ணன் உதவி செய்வான் என்று நினைக்கிறேன்.''

''வீட்டுத் திறப்பு அவனிடம் இருந்ததால் விமலிடம் விடைபெற்றுக் கொண்டு வீடுவந்து சேர்ந்தான்.

''இரவுச் சாப்பாட்டை ப்ரியாவும் அம்மாவும் தயாரித்தார்கள்''

''எல்லோரும் ஹோலில் இருந்த சாப்பாட்டு மேசையைச் சுற்றி இருந்து கொண்டார்கள்.''

''வீடு தேடுவதில் நாட்கள் ஓடிவிட்டது. அடுத்த கிழமை எல்லோரும் யாழ்ப்பாணம் போக வேண்டும் விடுப்புப்பத்திரம் எழுதிக்கொடுத்து விட்டாயா சங்கர்''

''நாளைதான் கொடுக்க வேண்டும்''

''யாழ்தேவி ரெயில் சனமாக இருக்கும் அப்பா! ஆசனங்களைப் பதிவு செய்தால் பிரச்சினை இல்லாமல் போகலாம்.''

''நாளைக்கே பதிவு செய்துவிடுகிறேன்.''

''ப்ரியா! நீயும் அம்மாவும் நாளை பின்னேரம் ஆயத்தமாக இருங்கள் சேலை எடுக்கப் போக வேண்டும்''

''சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்தார்கள்

ப்ரியா! உன் நகைகளை எல்லாம் கொண்டு போக வேண்டும். கல்யாணம் முடிந்த பிறகு திருப்பித்தரலாம்.

''அது நீ சொல்லியா தெரியவேண்டும்? சாந்தாவிடம் சொல்லிவிட்டுத்தான் வந்தேன் ஒருவரிடமும் இரவல் வாங்க வேண்டாம் என்று!

''சாந்தா என்னுடைய அட்டியலைப் பார்த்து நன்றாக இருக்கு என்று சொன்னாள் அது மாதிரி

அவளுக்கு ஒன்று செய்து போடு பாவம் அவள் ஒன்றுமே இல்லாமல் இருக்கிறாள்.''

''அதைப் பிறகுபார்க்கலாம். நீ சந்திரனிடம் சொல்லி சம்மதம்வாங்கிவிடு பிறகு தெரியவந்தால் மனத்தாங்கலாக இருக்கும்.''

''அம்மா! கல்யாணத்தை சாந்தாவின் வீட்டில் வைக்காமல் கோயிலில் வைப்பது தான் நல்லது! பெரிதாகவும் செய்யவேண்டாம். வீட்டில் சோடனைகளும் வேண்டாம். டாம்பீகமாகச் செய்தால் வீண் செலவு மட்டுமல்ல; ஊரார் கண்ணையும்உறுத்தும் அடுத்தடுத்துத் திருமணம் நடக்கிறதென்று.''

''நீ சொல்வதில் உண்மை இருக்கு அப்பாவிடமும் சொல்லி விடு.''

''ப்ரியா! சமையலில் அம்மாவுக்கு உதவி செய்வதில்லையா?''

''நானும் அம்மாவும் சேர்ந்து தான் சமைத்தோம்.''

''அப்போ ஏன் அம்மா சோர்வாக இருக்கிறா?'' இவ்வளவு நாளும் கஷ்டப்பட்டது போதும் என்று தானே கூட்டிவந்தேன். இங்கே வந்தபிறகும் சமையற்காரிபோல் நடக்கவிடாதே!

என்னம்மா உடம்புக்கு?''

''ஒன்றுமில்லை களைப்பாக இருக்கு!'';

''முதலிலேயே சொல்லி இருந்தால் கடையில் எடுத்துச் சாப்பிட்டிருக்கலாம். போய்ப் படுத்துக் கொள்! அம்மா, நான் பாத்திரங்களையும் அறையையும் கழுவிக் கூட்டித் துப்பரவாக்குகிறேன்.''

சங்கருக்கு ப்ரியா உதவினாள்.

''சாந்தாவைக் கூட்டிவா அப்பதான் அம்மாவின் வேலைப்பாரம் குறையும்.''

''ப்ரியா! சந்திரனுக்கு ஏதாவது மனக்குறை இருந்தால் தெரிந்து சொல்லு எனக்கு அப்பொழுது தான் உடனே நீக்க முடியும். நீயும் சந்தோசமாக இருக்க முடியும். மனதிற்குள் வைத்துக் கொண்டு நீயும் புழுங்காதே அவனையும் புழுங்கவிடாதே!''

''கொழும்புக்கு வந்த நாள் முழுவதும் நீயும் அவனும் சந்தோஷமாக இருக்க முடியவில்லை அவன் மனதை சந்தோசமாக வைத்திருப்பதில் கவனமாக இரு''

''அவர் ஒன்றும் சொல்லவில்லை சங்கர்! உன் மேலும் அப்பா அம்மா மேலும் அன்பாகத்தான் இருக்கிறார்.

''வீட்டு வாடகை எவ்வளவு சங்கர்?''

''அதைப்பற்றி இப்போ சந்திரனிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம். நான் அப்பாவிடம் கதைத்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்''

''நீ எப்பொழுதும் சந்திரன் சொற்படியே நட.

உன் விருப்பப்படியோ எங்கள் விருப்பப்படியோ நீயும் நடக்காதே! சந்திரனையும் நடக்கும்படி செய்து விடாதே. அது உனக்கும் அவனுக்கும் இடையே பிரச்சினையைக்கொண்டு வந்தாலும் வரும். கொஞ்ச நாளில் அவனைப்புரிந்து கொண்டு விட்டதாக நினைக்காதே. எல்லோர் மனமும் ஒரே மாதிரி இருக்காது.''

''சந்திரனைப் பற்றி எனக்கும் நல்ல அபிப்பிராயம்தான் இருக்கு. ஆனால் எதற்கும் எச்சரிக்கையாக இருப்பதுதான் நல்லது!''

''அண்ணன் தங்கை உறவிலும் பார்க்க அப்பா அம்மா மகள் உறவிலும் பார்க்க கணவன் மனைவி உறவு தான் முக்கியம்! எந்த ஒரு விடயத்திலும் அப்பா அம்மா பக்கமோ அல்லது என்பக்கமோ நிற்காதே. சந்திரன் பக்கமே நில்லு அவன் பக்கம் நியாயம் இல்லாவிட்டாலும் நானோ, அப்பா, அம்மாவே அதைக் குறையாகவே நினைக்க மாட்டோம்''

''சின்னவயதில் கல்யாணம் முடித்துவைத்து விட்டேனே என்று எனக்கு மனதில் உறுத்தல் இருக்குத்தான். பயப்படாதே! நானும் அப்பாவும் அம்மாவும் உனக்குத் துணையாக இருப்போம் அதுதான் அம்மாவையும் இங்கேயே கூட்டிவருவதற்கு ஒரு முக்கியகாரணம்.''

தொலைக்காட்சியில் முக்கிய நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்ததால் சங்கரின் பேச்சு மற்றவர்களின் காதில் விழவில்லை.

"இருவரும் சமையல் அறையில் இருந்து வெளியில்வர முற்பட்ட பொழுது தாய் வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

"ப்ரியா! சங்கர் சொன்ன எல்லாவற்றையும் மனதில் வைத்துக் கொள். நான் சொல்ல வேண்டியதை அவன் சொல்லி விட்டான். நீ சின்னவள் விளையாட்டுத்தனமாக இருந்துவிடாதே! விபரீதமாகி விடும் அவன் சொன்னவை நூறுவீதம் உண்மை! சந்திரன் இரவில் பால் குடிக்கிற பழக்கம் இருந்தால் சாப்பட்டில் வேறு ஏதாவது சேர்த்துக் கொள்வதாக இருந்தால் கேட்டுத் தெரிந்து கொள்!

எங்களைப்பற்றி யோசிக்காதே! நாங்கள் சாப்பிடுவதைத்தான் சந்திரனும் சாப்பிட வேண்டும் என்று வீட்டில் நினைப்பதைப் போல் நடக்காதே! வித்தியாசமாக ஏதாவது தேவைப்பட்டால் என்னிடம் சொல்லு! வாங்கித் தருகிறேன்.

நான் சொல்கிறேன் என்று தவறாக நினைக்காதே! சந்திரன் உன்னோடு தனியே வேறு வீட்டில் வாழ வேண்டும் என்று விரும்பி உன்னிடம் பட்டும் படாமல் சொன்னால் என்னிடம் சொல்; நான் ஏற்பாடு பண்ணுகிறேன். நீ சந்தோசமாக இருக்க வேண்டும் அதுதான் எங்க எல்லோருடைய ஆசை ப்ரியா!"

"சங்கர்! ஏன் இப்படி எல்லாம்..............?"

"அவன் சொல்வது சரிதான் ப்ரியா!

அப்பா, அம்மா, நான், நீ, சாந்தாவும் வந்த வுடன் சந்திரன் வேறு கோணத்தில் சிலநேரம் சிந் திக்கலாம் ஆனால் நாங்கள் எல்லோரும் சந்திர னுடன் அன்பாகத்தான் பழகுவோம். அவனுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுப்போம். அதைப்பற்றி யோசிக்காதே. சந்திரன் எங்கள் எல் லோருடனும் ஒற்றுமையாக ஒத்துப் போகக் கூடியவன்தான் என்று தொண்ணூறு வீதம் நான் நினைக்கின்றேன். மீதி பத்து வீதம் தான் அவதான மாக இருக்க வேண்டி இருக்கு''

''உனக்கு ஏதாவது தேவை என்றால் அம்மா விடமோ அப்பாவிடமோ, என்னிடமோ கேள். கல்யா ணம் முடித்தபிறகு எங்களிடம் கேட்பது சரியில்லை என்று யோசிக்கதே! பணம் வரும் போகும் வாழ்க்கை அப்படி இல்லை நீ மனம் நிறைய வாழ்ந்தால் தான் எங்களுக்குத் திருப்தியாக இருக்கும்''

''அம்மா ப்ரியா ஏதாவது கேட்டால் செய்து கொடு! கஷ்டமாக இருந்தால் என்னிடம் சொல்லு இவ்வளவையும் சொன்ன உடன் கன்னா பின்னா என்று கற்பனை பண்ணாதே. இப்போ சொன்னவை எல்லாமே தேவையில்லாமல் கூடப் போகலாம் சந்திரன் எங்கள் எல்லோருடனும் மனம்விட்டு வெளிப்படையாக ஒத்துழைக்க கூடியவராக இருக்க லாம்.''

''சங்கர்! நீ கடைசியாகச் சொன்னவைதான் சரியாக இருக்கும் வேணுமென்றால் இருந்து பார்.''

''அறைக்குப் போகும்போது மின் விசிறியையும்

எடுத்துக் கொண்டுபோ''

''கொழும்புக்கு வந்த பிறகு இன்றுதான் நிம்மதியாகத் தூங்கப் போகிறாய் குட்நைற் ப்ரியா''

''குட்நைற் சங்கர்.''

''யாழ்ப்பாணத்தைத்தேடி யாழ்தேவி ஓடிக்கொண்டிருந்தது. உறங்கல் இருக்கைப் பெட்டியில் ஆசனங்களைப் பதிவு செய்திருந்ததினால் வசதியாக எல்லோரும் சாய்ந்து கொண்டார்கள்.

''திடீரென்று ரெயிலில் மின்சாரம் நின்று இருள் சூழ்ந்தது. பிரயாணிகள் பரபரப்படைந்தார்கள்'' மெழுகுவர்த்திகளையும் பற்றறி விளக்குகளையும் ஏற்றி ஓரளவு வெளிச்சத்தை உண்டாக்கினார்கள். சிறிது நேரத்தில் மின்குமிழ்கள் பிரகாசிக்கத் தொடங்கின.

அனுராதபுரம் நெருங்க பெண்களும் ஆண்களும் நகைகளையும் பணத்தையும் மறைத்து ஒளித்து வைக்கத் தொடங்கினார்கள்.

''அனுராத புரம் என்று ஏன் பெயர்வைத்தார் அராஜகபுரம் என்று மாற்றினால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்.''

''வவுனியாவை ரெயில் வந்தடைந்ததும் எல்லோரிடமும் ஒரு நிம்மதி மூச்சு வெளிப்பட்டது; வவுனியாவுக்குள் வந்தபின்பு பொதுவாக தமிழர்களிடம் தெருக்கதவைத் திறந்து வீட்டு முற்றத்துக்

குள் வந்து விட்டது போலவும் யாழ்ப்பாணத்துக்கு வந்ததும் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்துவிட்டது போன்ற உணர்வும் ஏற் படுவது. எலிவளையானலும் தனிவளை வேண்டும் என்ற தமிழரின் பழமொழியை ஞாபகப்படுத்துவது போலாகும்!

ரெயில் நிலையத்தில் இருந்து பயணிகள் வீடு களை நோக்கி பஸ்சில் பயணமானார்கள். பாம்புப் புற்றுகள் போல் முழத்துக்கு முழம் இந்திய ராணுவம் நிலை கொண்டிருந்தது. இடிந்த கட்டடங்களும் சித றிப் போன வீடுகளும் கனவுள் சிதைந்து போன புதுமணப் பெண்ணைப் போல் பார்ப்பவர் கண்களை வேதனையில் நிறைத்துவிடும்!

யாழ்ப்பாணப் பெண்ணே! எப்பொழுது தான் உனக்கு விடிவு வரும். மலர்ந்து சிரிக்கும் உன் முகத்தை என்று காணப்போகிறோம்? யாழ்ப்பா ணத் தாயே! இந்திய மண்ணுக்கு எந்தக் கொடுமை யும் நீ செய்யவில்லையே! உனக்கேன் இந்த நிலை? ஏன் வந்தது? நீதித் தாயே! நீ கூடவா இந்தக் கொடு மைகளைப் பார்த்தும் கண்ணை மூடிக்கொண்டிருக் கிறாய்! நீ தீர்ப்பு வாழங்கினாலும் இழந்தவைகள் மறுபடி எழுந்தா வரப்போகின்றது! காலம் வழங்கும் தீர்புக்குக் காத்திருப்பதைத் தவிர வேறுமார்க்கமே இல்லை!

"அன்ரி கல்யாணப் பெண் எங்கே?"

"இங்கேதான் இருக்கிறேன். வாசலில்

இருந்து என்ன விசாரணை? நேரே உள்ளே வரவேண்டியது தானே!''

''நான் வரப்போவது முன்பே தெரியுமாடி?''

''சங்கர் கடிதம் போட்டிருந்தார்''

''மனைவி ஆகும் முன்பே கடிதம் போட்டானா?''

''முன்பு கையில் தந்தார் இப்போ தபால்காரன் மூலம் அனுப்புகிறார்!''

''ஏன்டி நான் போன பிற்பாடு பெருமூச்சு விட்டாயா?''

''ஏன் கேட்கிறாய்?''

''கொழும்புக்குப் போய் வீடு உடனே கிடைக்காமல் தனித்தனியே தான் இருந்தோம். ஒரு கிழமைக்கு முன் தான் வீடே கிடைத்தது!''

''ஐயோ பாவம்?''

'கேலி செய்கிறாயா? அனுதாபப்படுகிறாயா?'

''அனுதாபம் தான் கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத நிலைதானா?''

''ம்ம் என் தலைவிதி. அனுபவத்தை சொல்லவாடி!''

''வேண்டாம் ஒரு கிழமை தானே. நானே தெரிந்து கொள்வேன்''

''சொல்கிறேன் கேளடி.''

''பிளிஸ்! வேண்டாம் ப்ரியா!!''

''எதிலும் எதிர்பார்ப்பு இருக்கிறது சுவாரசம் தான்''

''சரி உன்விருப்பம்''

''போகும் போது பார்த்ததிலும் இப்பொழுது கொஞ்சம் பூசினால் போல் இருக்கிறாயடி?''

''ஒன்றும் வித்தியாசமாய் சாப்பிடவில்லை; நிறைய கல்யாணக் கனவுகள் கண்டேன் அதனால் இருக்கும்''!

''நீயும் தான் மாறி இருக்கிறாய்''

''அது உனக்கு சொன்னால் புரியாது!''

''சொல்லவும் வேண்டாம் புரியவும் வேண்டாம்.''

''சாந்தாவின் தாய் வந்தாள்.''

''அன்ரி எப்படி சுகம்?''

''சுகம் தான்! கொழும்பு வாழ்க்கை எப்படி?''

''கொழும்பு என்றுமே யாழ்ப்பாணத்திற்கு அருகில் வரமுடியாது! யாழ்ப்பாணத்தில் இருக்கிறோமே என்ற நினைவே நெஞ்சில் இனிக்கும்!''

''கல்யாணத்தை வீட்டில் வைக்காமல் கோயிலில் வைக்கலாம் என்று வீட்டில் எல்லோரும் விரும்புகிறார்கள்.''

''அதுதான் நல்லது. நான் சொல்லலாம் என்று தான் நினைத்தேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ என்று போசமல் இருந்தேன்.''

"அதிகாலையிலேயேசாந்தாவிழித்துக்கொண்டாள் வாழ்நாளில் என்றுமே அறிந்திராத இனம் புரியாத உணர்வலைகளால் சூழப்பட்டாள். மனம் பரபரப்படைந்து அகல விரிந்து கொண்டது. வழமையான கடமைகளை முடித்துக்கொண்டு ஆயத்தமானபோது. ப்ரியா வந்து சேர்ந்தாள். தோழியின் தலையில் பால் வைத்து தோய வார்த்தார்கள்.

''இன்று தொடக்கம் நீ எங்க வீட்டு மருமகள் அப்படித்தானே சாந்தா!''

''உனக்கு அண்ணி!''

''ஏன் மச்சாள் என்று சொல்லாமே?''

''அண்ணி என்று சொன்னால் மதிப்பாய் இருக்கும்.''

''சாந்தா என்று சொன்னால் ..................!''

''அன்புச் சிநேகிதியாய் இருப்பாய்!''

''சிநேகிதியாய் இருப்போமே''

''நானும் அதைத்தான் நினைத்தேன் சொல்லிவிட்டாய். ஒளிவு மறைவில்லாமல் வழமையாக மனம் விட்டுப் பழகலாம்''

''ப்ரியாவின் உதவியுடனும் வேறு பெண்களின் உதவியுடனும் தன்னை மணப்பெண்ணாக அலங்கரித்துக் கொண்டாள்.

''சாந்தா! சங்கரின் தங்கையாகமட்டுமல்ல என் கல்லூரித் தோழியாகவும் உன்னை மணமகளாகப் பார்க்க எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது.''

''பாடசாலையில் சின்ன வயதில் இருந்தே எனக்கு அருகேஅமர்ந்திருந்து அன்போடு பழகினாய்! எதிர் காலத்திலும் அண்ணன் மனைவியாக என் பக்கத்திலேயே இருக்கப் போகிறாய்! அன்போடு உற வோடு வாழப்போகிறாய்! நட்புக்கு ஒரு உருவம் கொடுக்கச் சொன்னால் உன்னையே தூக்கி வைத்து விடலாம்! என் கணவனால் கூட நான் சில நேரம் மனம் நோகலாம். ஆனால் நிச்சயமாக உன்னால் என்மனம் நோகவே நோகாது! தெய்வம் நேரில் வந்து உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட் டால்!

''சாந்தா உனக்கு இருக்கும் இதயம் போல் எனக்கும் வேண்டும் என்று தான் கேட்பேன்.''

''உனக்கிருக்கும் இரக்கமும், அன்பும், பணிவும், பாசமும் கலந்த இதயம் இலகுவில் எவருக்கும் வாய்க்க மாட்டாது.''

''வீட்டு வாசலில் கார்வந்து நின்றது.

மணப் பெண்ணாக கனவுத் தேவதையாக கோவிலுக்குச் செல்ல காரில் வந்து ஏறினாள்! மணவ றையில் அவளின் வருகைக்காகக் காத்திருந்தான் சங்கர்! வேத மந்திரங்கள் ஒலிக்க கையில் மணமா லையுடனும் நெஞ்சில் ஆசைகளுடனும் மணவ றையை நோக்கி நடந்தாள்! ப்ரியா தோழியாக அவளை அழைத்து வந்தாள்; மங்கள இசை நாதஸ் வரத்தில் வாழ்த்துக்கூறியது. சங்கரின் கழுத்தில் காதல் மணமாலையைச் சூட்டினாள் பெற்றோரும்

உற்றோரும் வாழ்த்துரைக்க மேளங்கள் மங்களம் மென்றே முழங்க மாங்கல்யத்தை அவள் கழுத்தில் கட்டினான். முப்பத்து முக்கோடி தேவர்களும் அக்கினியும் சாட்சியாக இருந்தார்கள். யாழ்ப்பாண மக்களின் கண் கண்ட தெய்வமாம் வள்ளி மணாளனாம் நல்லை முருகனை மானசீக மாக வ ணங்கினாள் சாந்தா.''

சங்கரின் காலில் விழுந்து வணங்கினாள். கணவன் அருகேவா சங்கரின் தாயாரிடம் வந்தாள் முழந்தாளிட்டு காலைத்தொட்டுக் கும்பிட்டாள் அவசரமாக அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டாள் தாய்!

மாமனாரின் காலில் விழுந்து வணங்கப் போனாள்.

''கைகைகளினால் கும்பிட்டால் போதும் அம்மா'' என்று தடுத்துவிட்டார்!

சங்கரின் அப்பா விலகி நிற்க விமலிடம் வந்தவள் நன்றியுடன் கைகளை கூப்பினாள்!

''மனம் போல் மாங்கல்யம்! நீ மகிழ்ச்சியோடு வாழ வேண்டும்'' என்று சொல்லிக் கைகுவித்தான் விமல்.

"சாந்தா! போன மாதம் என்னை அறைக்குள் அனுப்பி வைத்தாய் இந்த மாதம் நான் அனுப்பி வைக்கப்போகிறேன்.''

''சந்திரன் உனக்கு முன்பு தெரியாதவர். சங்கரை தினமும் பக்கத்தில் இருந்து பார்த்தவள் நான். சந்திரனிடம் கொஞ்சம் கூட அன்பை பரிமாறாதவள் நீ. உன் அனுபவமே புதுமையாகத்தான் இருந்திருக்கும். சங்கருடன் கண்களால் மட்டுமல்ல வேறுவழிகளிலும் அன்பை ஒரளவுக்குப் பெற்று விட்டேன். அவரும் பெற்று இருப்பார் உன்னிலும் பார்க்க எனக்கு கூச்சமும் வெட்கமும் குறைவாகத் தான் இருக்கும். உனக்கே சொல்லி இருக்கிறேன். சங்கர் எனக்கு அருகிலேயே படுத்துத் தூங்கி இருக்கிறார். அன்று மனக்கட்டுப்பாட்டோடு பண்பாக நடந்து கொண்டபடியால் இன்று இருவருக்கும் வர்ழ்க்கை புதிய அனுபவமாகத்தான் இருக்கும்.

என்ன இருந்தாலும் வாழ்க்கை புதுமைதான் ப்ரியா!''

''எனக்கு இந்த வாழ்க்கையைத் தந்தவர்கள் மூன்றுபேர்! ஒருவர் விமல். அவரிடம் ஏற்கனவே நன்றி சொல்லிவிட்டேன்; அடுத்ததுசங்கர்! கொஞ்ச நேரத்தில் அவரிடமும் சொல்ல வேண்டிய முறையில் நன்றியைச் சொல்லி விடுவேன்; அடுத்தது நீ உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றுதான் தெரியவில்லை ப்ரியா! இந்தப்பருவ வாழ்க்கையின் ஆரம்பம் முதல் இன்றுவரை என்கூடப் பயணம் செய்தவள் நீ! நன்றி என்ற ஒரு வார்த்தையினுள் அடங்கக்கூடியதா உன் உதவிகள்! நான் மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்று நீ ஒருத்தி ஒருமுறை வாழ்த்தினால் போதும் காலமெல்லாம் சங்கரோடு ஆனந்தமாக வாழ்வேன் ப்ரியா!''

அவளின் உணர்ச்சி நிறைந்த வரிகளினால் மனம் உருகிப்போனவள் அவளை இறுக அணைத்துக் கொண்டாள்.

''ஒருமுறை என்ன ஒருகோடி தரம் வாழ்த்து கிறேன். இன்று மட்டுமல்ல வாழ்நாள் முழுவதுமே வாழ்த்துகிறேன். வாழ்த்துவேன்டி.''

''நேரமாச்சு சங்கர் காத்திருப்பான் இந்தா பால் செம்பைப் பிடி!

ஆனந்தமான வாழ்க்கையும் இனிமையான நினைவுகளும் உன்னை என்றும் தொடர்ந்து வரட் டும். இனிமையும் இளமையும் நிறைந்த இரவு உறவு கள் உன்னை அழைக்கிறது போய்வா சாந்தா!''

புகையிரத நிலையத்துக்கு போக எல்லோரும் காரில் ஏறிக்கொண்டார்கள். சாந்தா எல்லோரிட மும் விடைபெற்றுக் கொண்டு கடைசியாகத் தாயி டம் வந்தவள் கண்ணீரை அடக்கமுடியாமல் விம்மி விம்மி அழுதாள். தாய் அவளை அணைத்து ஆறுதல் கூறினாள். சேலைத்தலைப்பால் கண்களைக் துடைத்து விட்டாள் ஒரு குழந்தையைப் போல். தாயின் பாசம் எவ்வளவு உணர்வு பூர்வமானது. பிறந்தநாள் தொடக்கம் தாயைப் பிரியாதவள் தவியாய்த் தவித்தாள்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

நீங்கள் போங்கள் நான் சாந்தாவுடன் பஸ்ஸில்

வருகிறேன்'' என்று காரை அனுப்பிவிட்டு சாந்தா விடம் வந்தான்.

தாயை விட்டு விட்டு சங்கரிடம் ஓடிவந்து மார்பில் முகம் புதைத்து விம்மி அழுதாள். ''சங்கர்! அம்மாவை என்னால் பிரிந்துவர முடியவில்லை. எனக்காக எவ்வளவோ செய்தீர்கள் எங்கள்கூட அம்மாவையும் கூட்டிக் கொண்டு வாருங்கள் சங்கர்! உங்கள் சாந்தாவுக்காக இதை மட்டும் செய்யுங் கள்!''

அன்போடு அணைத்துக் கொண்டவன் ''அழாதே! சாந்தா! உன் அம்மாவையும் கூட்டிக் கொண்டே போவோம்!''

''மாமி நேரம் இருக்கு; ஆடையை மாற்றிக் கொண்டு வாங்க!''

அருகில் இருந்தவர்களும் வற்புறுத்த சாந்தா வின் தாயும் ஆடைகளை மாற்றித் கொண்டுவர மூவரும் பஸ்சில் ஏறி ரெயில் நிலையத்தை வந்த டைந்தனர்.

நடந்ததைச் சொன்னதும் மற்றவர்களும் ஏற் றுக் கொண்டார்கள்.

''சாந்தா முகத்தை துடைத்துக் கொள்! கண் கள் வீங்கிப் போச்சு! ஏன் அழுதாய்? சொன்னால் அன்ரியையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாமே. க்டைசி நேரத்தில் பிரியும்போது தான் கூட்டிக்

கொண்டு போகலாம் என்று நினைவு வந்ததா?''

எல்லோரும் ரெயிலில் ஏறிக் கொண்டார்கள் யன்னல்ஊடாகவெறுமையாகப் பார்த்தாள் சாந்தா ''இன்னும் யாரைக் கூட்டிக்கொண்டு போகவேண்டும் சாந்தா!''

''இந்த யாழ்ப்பாணம் மண்ணை விட்டுப் போகவே மனமில்லை. நான் பிறந்து வளர்ந்து ஓடி ஆடி விளையாடி மகிழ்ந்த மண். யாழ்ப்பாணம் அன்னையே உன்னைத் தேடி வருவேன். இந்தியப் படைகளெல்லாம் உன்னை விட்டுப் போன பின்பு உன்னிடம் ஓடி வருவேன். அதுவரை என்னை வாழ்த்தி அனுப்பு தாயே.'' சாந்தா வாய்விட்டே சொன்னாள். மண்ணின் மேல் அவளுக்கு இருக்கும் பற்று எல்லோரையும் நெகிழ்ச்சி அடையச் செய்தது.

ரெயில் புறப்பட்டது.

''யாழ்ப்பாணம் அன்னையே போய் வருகிறேன் தாயே!

சாந்தாவையும் சங்கரையும் தென்றலின் கை கொண்டு ஆசீர்வதித்தாள்.

யாழ்ப்பாணம் அன்னை!

இந்த நாவலில் வரும் பெயர்களும், ஊர்களும் சம்பவங்களும் கற்பனையே.

முற்றிற்று



எத்தனை ஆயிரம் வண்ணமலர்

அரும்புகள் மலர்ந்து மணம்

வீசாமல் உதிர்ந்து போயின

இந்த மண்ணில் ...... கனவுகளோடு

மலர்ந்தும் மலராத பாதிமலர்களாகவே

மறைந்து போன அனைத்துச்

செந்தமிழ் உறவுகளுக்கும்

நெஞ்சின் அலையான அன்பின்

நினைவாக இக்கதைமலர்

அர்ப்பணமாகிறது.